மத்திய பொறியியல் உசாதுணை பணியகம்

# 2017

# வருடாந்த அறிக்கை




www.cecb.lk

# 2017 வருடாந்த அறிக்கை

மத்திய பொறியியல் உசாதுணை பணியகம்

# Contents


எம்மை பற்றி ........ 1

தலைவரின் செய்தி ........ 2

பொது முகாமையாளரின் செய்தி ........ 3

நிதி சார்ந்த முக்கிய குறிப்புகள் ........ 4

பணிப்பாளர்கள் சபை உறுப்பினர்கள் ........ 6

ம.பொ.உ.ப. முகாமைத்துவ பணிக்குழு ........ 10

பணிப்பாளர்ளின் அறிக்கை ........ 11

கணக்காய்வு குழுவின் அறிக்கை ........ 13

கூட்டிணைந்த தகவல்களும் கணக்கீட்டு கொள்கைகளும் ........ 15

நிதிக் கூற்றுக்கள்

- முழுமையான வருமான கூற்று ........ 24
- நிதி நிலைக் கூற்று ........ 25
- காசுப்பாய்ச்சல் பற்றிய கூற்று ........ 26
- ஒப்புரவு மாற்றங்கள் பற்றிய கூற்று ........ 27
- நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் ........ 28

கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை ........ 37

முழுமையான நிதிக் கூற்றுக்கள் ........ 46

ம.பொ.உ.ப. செயலாற்றுகை ........ 48

சென்ட்ரெல் இன்ஜினியரிங் சேர்விசெஸ் (ப்ரைவட்) லிமிற்றட் - செ.இ.சே.லி. 70

# எதிர்பார்ப்புக்கும் அப்பால்

சி.ஈ.சி.பீ.-மத்திய பொறியியல் ஆலோசனை நிறுவனம் இன்றைய ஸ்ரீ லங்காவில் உள்ள முன்னணி பொறியியல் ஆலோசனை சேவை வழங்குநர். அணுகுமுறையில் எதிர்காலத்திற்கும், எல்லாவற்றிற்கும் மேலாக, ஊக்கமளிக்கும் நிபுணர்களின் அறிவாற்றலுடன் பரிசைப் பெற்றுக்கொள்வதற்கு ஏதுவான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

எமது அபிலாஷை ஒரு வரலாற்றைக் கொண்டு ஆரம்பமாகுகின்றது. ஒரு வரலாறு என்பது இரண்டு யுகங்களுக்கும் அதிகமான காலம் தொட்டு இந்த நாட்டின் முன்னிலையில் எண்ணற்ற பல குறிப்புக்களைக் கொண்டதாகும். அதாவது இன்று அபிவிருத்தி அடைந்துள்ள நாடுகள் கஷ்டப்பட்டு விழித்தெழுந்த நேரத்தில் பரிணாமம் பெற்றதாகும்.

சில உயிரற்ற பொருட்கள் போலல்லாது எமது ஆண்மாக்களுக்கு உயிரூட்டும் ... உணவளிக்கும் .... எமது உடலில் ஓடும் உயிர் நாடிகள் ..... போல் அதிர்ஷ்டவசமாக அன்றைய அழியாத குறிப்புக்கள் அதாவது நாம் அடைந்த நீண்டகால சுதேசிய பொறியியல் சாதனைகள் என்றென்றும் எம்மிடம் நிலைத்திருக்கின்றன. நாங்கள் தேர்ந்தெடுத்துள்ள ஊழியர்களான ஆண் பெண் இருபாலாரிடத்திலும் இந்த அபிலாஷை வளர்ந்து நிரம்பியுள்ளது.

ம.பொ.உ.ப. பணியகத்தில், நாம் அத்தகைய அபிலாஷைகளுக்கு புத்துயிரளித்து உயிரூட்டியுள்ளோம்.

## தூரநோக்கு

“உலகத்தில் முதல்தர பொறியியல் நிறுவனமாகத் திகழ்தல்”

## செயற்பணி

"மானிட வர்க்கத்தின் ஆகக்கூடிய நன்மைகளின் நிமித்தம் வளங்களின் பிரயோகப் பங்களிப்புக்காக பெருத்தமான முறையில் அதிகம் ஊக்குவிக்கப்பட்டதும் தேர்ச்சி பெற்றதுமான ஒரு ஊழியர் படையைக் கொண்டு காத்திரமான கலைத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பொறியியல், கட்டக்கலை மற்றும் கணிய அளவையியல் முதலிய துறைகளில் சிறப்புப் பெற்று உலகத்தில் முதல்தரப் பொறியியல் நிறுவனமாக விளங்குதல்"

# தலைவரின் செய்தி



நான் மத்திய பொறியியல் உசாதுணைப் பணியகத்தின் (ம.பொ.உ.ப.) 2017 நிதியாண்டிற்குரிய வருடாந்த அறிக்கையையும் திரண்ட கணக்குகளையும் சமர்ப்பிப்பதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். வெளிக்கள நிலைமைகள் அவ்வளவு தூரம் அனுகூலமாக இல்லாதிருந்தாலும் நிதி, இயக்கச்செயற்பாடு அடிப்படையில் எம்மால் பாராட்டத்தகளவு செயலாற்றுகையை பதிவு செய்து கொள்ள முடிந்தது.

இலங்கையின் பொருளாதார வளர்ச்சி 2016 ஆம் ஆண்டில் காணப்பட்ட 4.5% வீதத்திலிருந்து 3.1மு வீதம் வரை சற்று வீழ்ச்சியடைந்துள்ளதாக 2017 ஆம் ஆண்டு இலங்கை மத்திய வங்கியின் அறிக்கை சுட்டிக் காட்டுகின்றது. 2016 ஆம் ஆண்டு காணப்பட்ட 8.5% வீத வளர்ச்சியுடன் ஒப்பிடும் போது, நிர்மாண துறை தேர்தல்ள், பாதகமான காலநிலை, பணவீக்க அழுத்தங்கள் முதலியன போன்ற வெளிக்கள காரணிகளினால் தேசிய பொருளாதாரத்திற்கான பெறுமதி சேர்த்தலில் 3.1% வீதமான ஒரு வீழ்ச்சியை காண்பித்தது. அரசு என்ற ரீதியில் ம.பொ.உ.ப. உசாதுணை நிர்மாண சேவைகளின் நிமித்தம் தனது அமைச்சுகளையும் திணைக்களங்களையும் தொடர்ந்தும் பாரியளவு வாடிக்கையாளர் தரப்புகளாக தக்கவைத்துக்கொள்ள வேண்டும் என்பதால், இது அரசாங்கத்தின் நிர்மாண ஒப்பந்தங்களில் தனது பாதகமான தாக்கத்தை கொண்டிருந்தது. தேசியளவில் இந்த வீழ்ச்சி காணப்பட்டாலும், 2017 ஆம் ஆண்டில் ம.பொ.உ.ப. ஆல் 15.2 பில்லியன் ரூபா குழு வருமானத்தை ஈட்டி தனது வளர்ச்சி பாதையை பேணமுடிந்தது. இந்த நிலைமை 2016 ஆம் ஆண்டு காணப்பட்ட 11.7 பில்லியன் ரூபாவுக்கு எதிராக 2017 ஆம் ஆண்டில் சுமார் 30% வீதமான ஒரு அதிகரிப்பை காட்டுகின்றது. எனினும் **PBT** வருடாந்த சம்பள அதிகரிப்புகள் அடங்கலாக அதிவேக வீதிகள், புகையிர வீதிகள், மாநகர அபிவிருத்திகள், நிர்மாண கைத்தொழில் போன்ற புதிய கருத்திட்டங்கள் தொடர்பில் மேலதிக ஊழியர்கள், வாடகை ஊழியர்கள் ஆகியோருக்கான ஏற்பட்ட நிருவாக ஆகுசெலவுகளிலுள்ள அதிகரிப்பிலிருந்து பிரதானமாக 2017 ஆம் ஆண்டில் எழுகின்ற 915 மில்லியன் வருமானத்தில் 1.2% வீதமான வீழ்ச்சியை காட்டுகின்றது.

ஒரு அரச உடமை தொழில்முயற்சி என்ற ரீதியில், நாம் அரசாங்கத்தினால் விதிக்கப்படும் சகல சட்டமுறையான தேவைப்பாடுகளையும் அனுசரித்து செயற்படுகின்றோம். மொத்தம் 361.1 மில்லியன் ரூபா திரண்ட வரிகளாகவும் மற்றும் ஏனைய கட்டணங்களாகவும் அரசாங்கத்திற்கு செலுத்தப்பட்டது. பணிப்பாளர்கள் சபையின் வழிகாட்டல்களுடன் மேம்பாட்டின் நிமித்தம் தொடர்ச்சியாக மதிப்பிடப்படும் வலிமையான கட்டுப்பாடுகளும் மற்றும் கண்காணிப்புகளும் அடங்கிய பொறிமுறைத்திட்டங்களை ஏற்படுத்திவதன் ஊடாக, நிருவாகத்தையும் மற்றும் பொறுப்புக்கூறும் விடயங்களையும் மேம்படுத்தும் முகமாக புதிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

ம.பொ.உ.ப. தற்பொழுது தேசிய அபிவிருத்தி முயற்சிக்கு முன்னோடியாக நின்று சிறந்த முறையில் ஆதரவளித்து உதவியது என நாம் நம்புகின்றேன். ம.பொ.உ.ப. இன் வர்த்தக ரீதியில் நிர்மாண கரமாக விளங்கும் சென்ட்ரல் இன்ஜினியரிங் சேர்விஸெஸ் (ப்ரைவட்) லிமிற்றட் நிறுவனம் தற்பொழுது பொறியியல் கருத்திட்டங்களுக்கான திறந்த சந்தை போட்டிகள் கேள்வி அழைப்பு முறையில் பயனுள்ள பங்குபற்றலின் நிமித்தம் தனது அந்தஸ்தை நிலைநாட்டியுள்ளது. உசாதுணைக்கு என்ற ரீதியில், ம.பொ.உ.ப. நாற்பத்து ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக கட்டியெழுப்பிய தனது பல துறை பெறுமதி வாய்ந்த பொறியியலாளர்கள் மூலமாக கட்டியெழுப்பிய சந்தை நிலையில் முதன்மை வகிக்கின்றது.

இறுதியாக, உதவி ஒத்தாசைகளை நல்கி, ஆலோசனைகளை வழங்கிய எனது சக சபை உறுப்பினர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்ற அதே வேளையில், இங்கு விஷேடமாக எமது பொது முகாமையாளருக்கு அவரின் தலைமைத்துவத்திற்கும் அவரின் அர்ப்பணிப்புக்கும், அதே போன்று சிரேஷ்ட முகாமையாளர்களுக்கு அவர்களின் அர்ப்பணிப்புக்கும் சிறு மட்டம் முதல் உயர் மட்டம் வரையான எமது பெரும் பொக்கிஷமாகிய ஊழியர்கள் அனைவருக்கும் எனது மனமுவர்ந்த நன்றியை உரிதாக்க விரும்புகின்றேன்.

**தலைவர்**
பொறியியலாளர் ஜி.டீ.ஏ. பியதிலக்க

**BSc.Eng, PG.Dip (Const.Mgt), PG.Dip (Ports & Coastal) Norway, MIE (SL), C Eng, MASCE**

# பொது முகாமையாளரின் செய்தி



மத்திய பொறியியல் உசாதுணை பணியகம் (ம.பொ.உ.ப.) பெருமளவான நிர்மாண சந்தை பங்கை பேணி வருகின்ற அதே வேளையில், நாட்டில் முதன்மை வாய்ந்த பொறியியல் உசாதுணை நிறுவனம் என்ற வகையில், தனது முன்மை நிலையை தொடர்ந்தும் தக்கவைத்து வருகின்றது என்பதை நான் பெருமையுடன் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். ம.பொ.உ.ப. தனது ஆரம்பம் முதல் தேசிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திற்கு மாத்திரம் பங்களித்தனால் மட்டுமன்றி எமது சந்தை நிலையை தக்கவைத்துக்கொள்ள தேவையான மனித வளங்களிலும் மிக முக்கியமாக முதலீடு செய்ததன் மூலமாக இந்த திறமுறை சார்ந்த அந்தஸ்தை அடைந்துள்ளது.

ம.பொ.உ.ப. இன் தலைவர் தனது கருத்தில் குறிப்பிடுவது போன்று, நிர்மாண துறையை பாதிக்கின்ற நாட்டில் பொருளாதார வீழ்ச்சி இருந்த போதிலும் கூட, ஒட்டுமொத்த இலாபத்தில் இன்றியமையாத ஒரு செயலாற்றுகையை நாம் அடைந்திருக்கின்றோம். இலாப எல்லையை பாதித்த துறைமுக நகர அபிவிருத்தி, மத்திய மற்றும் தென் பிராந்திய அதிவேக வீதிகள், நீர் வள கருத்திட்டங்கள் முதலியன போன்ற கருத்திட்டங்களுக்கு வெளிவாரியாக பல அனுபவம் வாய்ந்த பொறியியல் நிபுணர்களையும், ஏனைய தொழில் நுட்ப ஊழியர்களையும் வாடகைக்கு அமர்த்தியதால் நிருவாக செலவுகளில் தவிர்க்க முடியாத அதிரிப்பு ஏற்பட்டாலும், ம.பொ.உ.ப. இன் குழு 2016 ஆம் ஆண்டிலிருந்த வருமானத்தை விடவும் 2017 ஆம் ஆண்டில் 30% வீதமான ஒரு வருமான அதிகரிப்பை பெற்றுள்ளது. இந்த காலப்பகுதியில், உசாதுணை பிரிவு ஆரோக்கியமான ஒரு வளர்ச்சியை பேணி, 2017 ஆம் ஆண்டில் 2.43 பில்லியன் ரூபா வருமானத்தை ஈட்டியது. இதே நேரம், அதே காலப்பகுதியில், EPC பிரிவு 10.8 பில்லியன் ரூபா வருமானத்தை ஈட்டியது.

சுயமாக சம்பாதிக்கும் ஒரு அ.உ.தொ. என்ற ரீதியில், இந்த பணியகம் மத்திய மற்றும் தென் பிராந்திய அதிவேக வீதிகள், துறைமுக நகர அபிவிருத்தி போன்ற தேசிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திற்காகவும் மற்றும் களுகங்கை, உமா ஓயா, ப்ரோட்லேண்ட் போன்ற பல நீர் வளங்கள் மற்றும் நீரியல் கருத்திட்டங்களுக்காகவும் தனது பெறுமதி வாய்ந்த பொறியியல் உசாதுணை சேவைகளினூடாக தேசிய பொருளாதாரத்திற்கு தொடர்ந்தும் மிக இன்றியமையாத பங்களிப்புகளை செய்துள்ளது. பணியகம் எமது சட்டமுறையான சகல கடப்பாடுகளையும் முழுமையாக நிறைவேற்றுகின்ற அதே வேளையில், நாட்டில் அதிக பல முக்கியமான பொறியியலாளர்களுக்கும் அதே நேரம் ஏனைய தொழில் தேர்ச்சியாளர்களுக்கும் தொடர்ச்சியாக தொழில்வாய்ப்புகளை உருவாக்கி வருகின்றது

ம.பொ.உ.ப. பயிற்சியிலும் மற்றும் திறன்கள் அபிவிருத்தியிலும் காணப்படும் முதலீடுகளை தனக்கு எதிரான போட்டியை பேணுவதில் மிக முக்கியமான சொத்தாக மதிக்கின்றது. 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில், ம.பொ.உ.ப. தனது ஊழியர்களின் வெளிநாட்டு பயிற்சி தேவைகள் அடங்கலாக உள்ளக, பட்டப்பின்படிப்பு, தொழில் மீளாய்வு பயிற்சி தேவைகளை நிறைவேற்றும் முகமாக மொத்தம் 9.8 மில்லியன் ரூபா நிதியை முதலீடு செய்தது. நாம் அவர்களின் இந்த ம.பொ.உ.ப. இன் தொழில்களில் ஆளுமை வளர்ச்சிக்கான வாய்ப்புகளை உறுதிசெய்கின்ற அதே வேளையில் அந்த ஊழியர்களின் திறன்களை வளர்த்துக்கொள்ளவும் மற்றும் மேம்படுத்திக்கொள்ளவும் கூடிய வகையில் தொடர்ந்தும் முதலீடு செய்வோம். 10 பல்கலைக்கழகங்களினதும் 07 தொழில்நுட்ப∴. வாழ்க்கைத்தொழில் பயிற்சி நிறுவனங்களினதும் 602 மாணவர்களுக்கு இலவசமாக கைத்தொழில் பயிற்சிகளை வழங்கி, தேசிய பொறியியல் கல்விக்கும் ம.பொ.உ.ப. பங்களித்துள்ளது.

பசுமை கட்டிட முன்னெடுப்புகளிலும் அதே நேரம் தொழில்நுட்ப உதவியிலும் எமது கவனத்தை செலுத்தி, நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை (நி.கை.அ.அ.ச.), இலங்கை நியமங்கள் மற்றும் கட்டளைகள் நிறுவகம் (இ.நி.க.நி.) மற்றும் ஏனைய தொழில் சார், ஒழுங்குறுத்துகை நிறுவனங்கள் என்பவற்றுக்கு நாம் வழங்கிய உதவியானது சுற்றாடலின் நிலைபெறுதகு தன்மையை பாதுகாத்து, இலங்கைக்கு நாட்டில் பொறியியல் சார்ந்த தர நியமங்களை பேணி, ஒழுங்குறுத்தும் பொருட்டு துணையாக அமைந்தது. எமது சமூக கடப்பாடுகளின் பாகமாக, மாத்தளை மாவட்டத்தில் பின்தங்கிய பல பாடசாலைகளுக்கு புதிய துப்புரவேற்பாட்டு வசதிகளை நிர்மாணித்து நாம் வழங்கியதுடன், அவற்றை CSR முன்னெடுப்பாகவும் மேற்கொண்டு நிறைவேற்றினோம்.

இறுதியாக, ம.பொ.உ.ப. இலங்கையில் பொறியியல் கைத்தொழிலில் தனது மதிப்பையும் புகழையும் மேலும் வளர்த்துக்கொள்ளும் வகையில், சிரேஷ்ட முகாமைத்துவத்திற்கும், அதே நேரம் சகல ஊழியர்களுக்கும் வழிகாட்டி தலைமை வகிக்கக்கூடிய வகையில் தலைவரிடமிருந்து எமக்கு கிடைத்த ஒத்துழைப்பை மதித்து பாராட்டுகின்றேன். 2017 ஆம் ஆண்டு பயனுள்ள ஒரு ஆண்டாக விளங்கியமையும் குறிப்பிடத்தக்கதாகும். நாம் இன்று எமது இலக்குகளை அடைந்தோம், அதே போன்று எதிர்வரும் ஆண்டுகளிலும் எமது எதிர்கால இலக்குகளை அடைவதற்கு நீங்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்குவீர்கள் என நம்புகின்றோம்.

பொது முகாமையாளர்


பொறியியலாளர் கே.எல்.எஸ். சஹபந்து

**Bsc.Eng (Hons), PG Dip (Hyd), MSc.(Struct.),CEng, MICE (London),MIE (SL), M.Cons E(SL), FSSE (SL)**


# நிதி சார்ந்த முக்கிய குறிப்புகள்


| | | | ம.பொ.உ.ப. | |
|---|---|---|---|---|
| | 2017 மில்.ரூ. | 2016 மில்.ரூ. | 2017 மில்.ரூ. | 2016 மில்.ரூ. |
| நிர்மாண வருமானம் | 12,807 | 9,563 | 10,769 | 8,209 |
| உசாதுணை வருமானம் | 2,403 | 2,112 | 2,427 | 2,124 |
| திரண்ட வருமானம் | 15,210 | 11,675 | 13,196 | 10,333 |
| முழுமொத்த இலாபம் | 1,897 | 1,821 | 1,120 | 1,153 |
| வரிக்கு முன்னருள்ள தேறிய இலாபம் | 915 | 926 | 757 | 816 |
| வரிக்கு பின்னருள்ள தேறிய இலாபம் | 522 | 524 | 401 | 440 |
| குறித்த ஆண்டிற்கான மொத்த முழுமையான வருமானம் | 516 | 545 | 395 | 460 |
| மொத்த சொத்துக்கள் | 23,302 | 19,945 | 21,856 | 18,434 |
| பங்களிக்கப்பட்ட மூலதனம் | 0.50 | 0.50 | 0.50 | 0.50 |
| மொத்த ஒப்புரவு | 6,016 | 5,501 | 5,603 | 5,208 |
| மொத்த ஒப்புரவு சமநிலை தொகை | 23,302 | 19,945 | 21,856 | 18,434 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 20,398 | 17,001 | 19,422 | 15,878 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 17,097 | 14,265 | 16,092 | 13,069 |


# குழுவின் நிதி சார்ந்த முக்கிய குறிப்புகள்





# நிதி சார்ந்த முக்கிய குறிப்புகள் (தொடர்ச்சி)








# பணிப்பாளர்கள் சபை


பொறியியலாளர் ஜி.டீ.ஏ. பியதிலக்க
தலைவர்

பொறியியலாளர் என். ரூபசிங்க
பணிப்பாளர்



திரு பி.பீ.எஸ்.சி. நொரிஸ்
பணிப்பாளர்

திரு எஸ்.எம்.என்.எல். சேனாநாயக்க
பணிப்பாளர்






பொறியியலாளர் எஸ்.பி.பி. நாணயக்கார
பணிப்பாளர்

திரு எம்.ஆர்.ஜி. ரணதுங்க
தொழிற்படு பணிப்பாளர்





பொறியியலாளர் எச்.பீ. ஜயசேக்கர
பணிப்பாளர்



## பொறியியலாளர் ஜி.டீ.ஏ. பியதிலக்க

தலைவர்

பீஎஸ்சி பொறியியல் ஆனஸ்ட், ப.பி.ப. டிப்ளோமா (நிர்மாண முகாமைத்துவம்), ப.பி.ப. டிப்ளோமா (துறைமுகம், கடலோர பொறியியல்), நோர்வே **MIE (SL)** சிவில் பொறியியல், **MASCE**

இவர் 2015 ஆம் ஆண்டு பணிப்பாளர்கள் சபையின் தலைவராக நியமிக்கப்பட்டார். அதே போன்று இவர் ம.பொ.உ.ப. நிர்மாண பொறியியல் பிரிவாகிய சென்ட்ரெல் இன்ஜினியரிங் சேர்விஸெஸ் லிமிற்றட் (தனியார்) நிறுவனத்தின் தலைவராகவும் பணியாற்றுகின்றார். இவர் 2010 ஆம் ஆண்டு முதல் ஒன்றிணைந்த மேலதிகப் பொது முகாமையாளராக (**EPC**) அதன் நடவடிக்கைகளின் போது பணிப்பாளர்கள் சபைக்கு நேரடியாக உதவி வந்தார். இவர் முழுமையாக ம.பொ.உ.ப. பல பதவிகளையும் வகித்து 34 வருட காலம் பொறியியலிலும் முகாமைத்துவத்திலும் பரந்த அனுபவம் வாய்ந்தவராவார். 1983 ஆம் ஆண்டு விக்டோரியா நீர்த்தேக்கக் கருத்திட்டத்தின் வதிவிடப் பொறியியலாளராக தொழில் வாழ்க்கையை ஆரம்பித்த இவர் கருத்திட்டப் பொறியியலாளராகவும் (1995), கருத்திட்டக் குழு தலைவராகவும் (1996), பிரதிப் பொது முகாமையாளராகவும் (2005) மற்றும் 2010 ஆம் ஆண்டு மேலதிக் பொது முகாமையாளராகவும் பதவி வகித்த காலங்களில் அதிக பொறுப்புக்களையும் பதவியுயர்வுகளையும் பெற்றுள்ளார். இவரின் நீண்டகால தொழில் வாழ்க்கையில் பொறுப்பேற்ற பல கருத்திட்டங்களின் முகாமைத்துவத்தினூடாக அடைந்த சிவில் பொறியியல் பற்றிய விஷேட அறிவும் பரந்த நிபுணத்துவ அறிவும் இவரை பணிப்பாளர்கள் சபை வரைக்கும் கொண்டுசென்றுள்ளன.

## திரு எம்.ஆர்.ஜி. ரணதுங்க

தொழிற்படு பணிப்பாளர்

**LL. B** (இலங்கை), சட்டத்தரனி, பிரசித்திபெற்ற நொத்தாரிசு, கம்பனிகள் செயலாளர், பதில் கடமைபுரியும் நீதிவான்

2007 இல் பணிப்பாளர் என நியமிக்கப்பட்டார். முன்னர் 2007 முதல் 2010 வரை பணிப்பாளர் இயக்குனராக ம.பொ.உ.ப. பணியாற்றினார். மத்திய பொறியியல் சேவைகள் (பிரைவேட்) லிமிடெட் இயக்குநராகவும் பணியாற்றினார். இயக்குனர், பாதுகாப்பு அமைச்சகம் பணிபுரிந்தார்.இயக்குநர், நீர் வளத்துறை வாரியம், இயக்குனர், உர நிறுவனம் மற்றும் செயலாளர் ரக்னா லங்கா (பிரைவேட்) லிமிடெட் ஆகியோரின் பதவி பணியாற்றினார் . முன்னர் வட மத்திய மாகாணத்தின் வலய துணைத் தலைவராகவும், ஸ்ரீ லங்காவின் சட்ட சங்கம் பணியாற்றினார்.

## பொறியியலாளர் என். ரூபசிங்க

பணிப்பாளர்

பீஎஸ்சி பொறியியல் (ஆனஸ்ட்), ப.பி.ப. டிப்ளோமா (நீரியல் வலு) நோர்வே, சிவில் பொறியியல், **MIE (SL)**, **MICE** (லண்டன்), உத்தரவுபெற்ற நிலஅளவையாளர்

2015 ஆம் ஆண்டு இவர் பணிப்பாளராக பணிப்பாளர்கள் சபைக்கு நியமிக்கப்பட்டார். 2015 ஆம் ஆண்டிலிருந்து மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு ஆகியவற்றின் செயலாளராகவும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த அபிவிருத்திப் பொறுப்புக்களையும் வகிக்கின்றார். 2005 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை ம.பொ.உ.ப. தலைவராகப் பணியாற்றினார். 1981 ஆம் ஆண்டு சிவில் பொறியியலாளர் ஒருவராக ம.பொ.உ.ப. இணைந்து, வதிவிடப் பொறியியலாளர், பிரதான வதிவிடப் பொறியியலாளர், கருத்திட்ட முகாமையாளர், மேலதிகப் பொது முகாமையாளர், பொது முகாமையாளர் ஆகிய பதவிகளை வகித்து 34 வருடங்களுக்கும் அதிக கால பரந்த பொறியியல் மற்றும் முகாமைத்துவ ரீதியான அனுபவங்களை பணியகத்தினூடாகப் பெற்றுள்ளார். பொறியியல் கொள்வனவு மற்றும் நிர்மாண (**EPC**) பிரிவைத் தாபிக்கும் பொருட்டு கருத்திட்ட முகாமையாளர் (உட்கட்டமைப்பு வசதிகள் நிர்மாணம்) மற்றும் மேலதிகப் பொது முகாமையாளர் (**EPC**) ஆகிய பதவிகளை வகித்து முன்னின்று வழிகாட்டினார்.

## பொறியியலாளர் எச்.பீ. ஜயசேக்கர

பணிப்பாளர்

பீஎஸ்சி (பொறியியல்), சிவில் பொறியியல், **MICE (UK)**, **FIE (SL)**

இவர் 2015 ஆம் ஆண்டு சபைக்கு பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். இவர் முன்னர் 2000 ஆம் ஆண்டு முதல் 2004 ஆம் ஆண்டு வரை ம.பொ.உ.ப. தலைவராகப் பணியாற்றியுள்ளார். இவர் உள்நாட்டு ரீதியாகவும் வெளிநாட்டு ரீதியாகவும் பொறியியலிலும் முகாமைத்துவத்திலும் பரந்த அனுபவத்தைப் பெற்றுள்ளர். இவர் இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் வடிவமைப்பு பொறியியலாளராகவும் (1965 முதல்1967 வரை), வதிவிடப் பொறியியலாளராகவும் (1967-1968) மற்றும் வதிவிட நிர்மாண முகாமையாளராகவும் (1970 முதல் 1972 வரை) பணியாற்றினார். இவர் மத்திய பொறியியல் உசாதுணை பணியகத்தில் பிரதான கருத்திட்டப் பொறியியலாளராக (1977) இணைந்து, பின்னர் ம.பொ.உ.ப. பணியகத்தில் மேலதிகப் பொது முகாமையாளராகவும் (1978 - 1985), நீர் வளங்கள் திட்டமிடலுக்கான மேலதிகப் பொது முகாமையாளராகவும் (1986 - 1995), பொது முகாமையாளராகவும் (1995 முதல் 1996 வரை) பதவியுயர்வு பெற்றார். இவர் ஐ.இ. வனங்கள் பற்றிய ஆணைக்குழு தலைமை அலுவலகத்திலும் (1968 முதல் 1970 வரை) பணியாற்றினார். இவர் ஐ.இ. கென்ட் நாட்டு சபையில் பிரதிப் பிரிவுப் பொறியியலாளராகவும் (1972 முதல் 1977 வரை) பணியாற்றினார்.

## திரு எஸ்.எம்.என்.எல். சேனாநாயக்க

பணிப்பாளர்

பீஎஸ்சி, முகாமைத்துவ டிப்ளோமா, **FCA**, பட்டயக் கணக்காளர்

இவர் 2015 ஆம் ஆண்டு பணிப்பாளர்ள் சபைக்கு பணிப்பாளராக மீண்டும் நியமிக்கப்பட்டார். இவர் 2004 ஆம் ஆண்டு முதல் ம.பொ.உ.ப. பணியகத்தில் பணிப்பாளராக இருந்து வருகின்றார். இவர் சென்ட்ரெரல் இன்ஜினியரிங் சேர்விஸெஸ் (ப்ரைவட்) லிமிற்றட் நிறுவனத்தின் கம்பனி செயலாளராக 2016 யூனு வரைக்கும் பணியாற்றுகின்றார். இவர் நிதி முகாமைத்துவதிலும் கணக்கீடுகளிலும் பரந்த அனுபவத்தைக் கொண்டுள்ளார். இவர் 1988 ஆம் ஆண்டிலிருந்து காபரேட்டு விஷன் (ப்ரைவட்) லிமிற்றட் நிறுவனத்தின் பணிப்பாளராகவும், 1994 ஆம் ஆண்டிலிருந்து பைனான்ஸியல் கன்ஸ்ஸால்டென்ட்ஸ் என்ட் யெலீட் சேர்விஸெஸ் (ப்ரைவட்) லிமிற்றட் நிறுவனத்தின் பணிப்பாளராகவும் பணியாற்றுகின்றார்.சேர்விஸெஸ் (ப்ரைவட்) லிமிற்றட் நிறுவனத்தின் பணிப்பாளராகவும் பணியாற்றுகின்றார்.

## திரு பி.பீ.எஸ்.சி. நொரிஸ்

பணிப்பாளர்

**B.Sc.** (வியாபார நிருவாகம்) ஆனஸ்ட் - ஸ்ரீ ஜயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம், பொது நிருவாக முதுமாணிப் பட்டம் - அவுஸ்திரேலியா, **LICA** - இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகம்

இவர் 2015 ஆம் ஆண்டில் ம.பொ.உ.ப. பணியகத்தில் திறைசேரியைப் பிரதிநிதிப்படுத்தும் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். இவர் தற்பொழுது ம.பொ.உ.ப. பணியகத்தின் கணக்காய்வு முகாமைத்துவக் குழுவின் தலைவராக பணியாற்றுகின்றார். இவர் நிதி அமைமச்சினதும் பொது நிதிகள் திணைக்களத்தினதும் பணிப்பாளர் பதவியை வகிக்கின்றார். இவர் இலங்கை நிருவாக சேவையில் (இ.நி.சே.) பல பரந்த அனுபவத்தைக் கொண்டுள்ளார். இவர் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சில் இ.நி.சே. பதவியான உதவிச் செயலாளர் பதவியில் (1998) தனது தொழிலை ஆரம்பித்து, நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சினதும், அரசிறை மற்றும் பொருளாதார விவகாரங்கள் திணைக்களத்தினதும் உதவிப் பணிப்பாளராகவும் (2002), வர்த்தக வரி மற்றும் ஊக்குவிப்புக் கொள்கைத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளராகவும் (2009), அரசிறைக் கொள்கைத் திணைக்களத்தின் பணிப்பாளராகவும் (2009) பணியாற்றினார். இவர் 2011 ஆம் ஆண்டில் சுங்கப் பணிப்பாளராகவும், 2014 ஆம் ஆண்டில் பெற்றோலிய கைத்தொழில்கள் அமைச்சின் மேலதிகப் பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டார். இவர் 2014 ஆம் ஆண்டு இளைஞர் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் திறன்கள் பிரிவு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் தொழில் வழிகாட்டல் நிபுணராகவும் பணியாற்றியுள்ளார்.

## பொறியியலாளர் எஸ்.பி.பி. நாணயக்கார

பணிப்பாளர்

பீஎஸ்சி பொறியியல், சிவில் பொறியியல், **MICE (UK)**, **MIE (SL)**

இவர் 2016 ஆம் ஆண்டில் சபைக்கு பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். இவர் தற்பொழுது சென்ட்ரெல் இன்ஜினியரிங் சேர்விஸெஸ் (ப்ரைவட்) லிமிற்றட் நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளராகவும் பணியாற்றுகின்றார். இவர் 2016 செப்டம்பர் மாதம் வரை இந்த சென்ட்ரெல் இன்ஜினியரிங் சேர்விஸெஸ் (ப்ரைவட்) லிமிற்றட் நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளராக பணியாற்றினார். இவர் 1980 ஆம் ஆண்டு ம.பொ.உ.ப. பணியகத்தில் ஒரு சிவில் பொறியியலாளராக இணைந்து பணியகத்தில் 36 வருட காலம் பொறியியலிலும் முகாமைத்துவத்திலும் அதிக அனுபவத்தை பெற்றிருக்கின்றார். இவர் மாதுருஓயா நீர்ப்பாசன மற்றும் நீர்வலு மின்னுற்பத்திக் கருத்திட்டத்தில் பணி ஒழுங்கு பொறியியலாளராகவும், கன்யொன் நீர்வலு மின்னுற்பத்திக் கருத்திட்டத்தில் வடிவமைப்பு பொறியியலாளராகவும், ரந்தெனிகல நீர்வலு மின்னுற்பத்திக் கருத்திட்டத்தில் சிவில் பொறியியலாளராகவும், சமனலவெவ நீர்வலு மின்னுற்பத்திக் கருத்திட்டத்தில் சிரேஷ்ட பொறியியலாளராகவும் பணியாற்றியுள்ளார். இவர் 2001 ஆம் ஆண்டு தென் மாகாண **EPC** பிரிவில் ஒரு கருத்திட்ட முகாமையாளராக தனது சேவையை ஆரம்பித்து, 2006 ஆம் ஆண்டு முதல் 2007 ஆம் ஆண்டு வரை பிரதிப் பொது முகாமையாளராகவும் **(EPC-SP)**, 2007 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை கூட்டுத்தாபன மேலதிகப் பொது முகாமையாளராகவும் **(EPC-SP)**, 2016 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரை கூட்டுத்தாபன மேலதிகப் பொது முகாமையாளராகவும் (நீஊ) பணியாற்றியுள்ளார்.

## முகாமைத்துவ பணிக்குழு

பொறியியலாளர் ஜி.டீ.ஏ. பியதிலக்க
தலைவர்

பொறியியலாளர் கே.எல்.எஸ். சஹபந்து
பொது முகாமையாளர்

பொறியியலாளர் ரீ.டீ. விக்ரமரட்ன
கூட்டுத்தாபன பி.பொ.மு. (உசாதுணை)

பொறியியலாளர் ஏ. கல்கெட்டிய
கூட்டுத்தாபன உ.பொ.மு. (EPC) / உ.பொ.மு. (விஷேட கருத்திட்டங்கள்-2) /உ.பொ.மு. (சர்வதேச)

---

பொறியியலாளர் ஜி.டீ.ஏ. பியதிலக்க
பி.பொ.மு. **(EPC-WP-1)**

பொறியியலாளர் இ.பி.யூ.எஸ். கருணாரத்ன
உ.பொ.மு. (**EPC**-மேல் மாகாணம்-2)

பொறியியலாளர் ஐ.ஆர.பி. குணதிலக்க
பி.பொ.மு. (விஷேட கருத்திட்டங்கள்-1)

பொறியியலாளர் எச்.எம். நந்தசேன
உ.பொ.மு. (**EPC**-மத்திய மாகாணம்)

கட்டடக்கலைஞர் டப்ளியூ.கே. லலித் ஹேவகே
பி.பொ.மு. (கட்டடக்கலை)

பொறியியலாளர் ஜி.ஏ.டீ.ஐ.ஜே. செனவிரட்ன
உ.பொ.மு. (இலக்ட்ரோ, எந்திரவியல்)

பொறியியலாளர் (திருமதி) எச்.எம்.எஸ். ரூபசிங்க
பி.பொ.மு. (மத்திய மாகாணம்)

பொறியியலாளர் எஸ்.டப்ளியூ. ஜயவர்த்தன
உ.பொ.மு. (வடிவமைப்பு-1)

பொறியியலாளர் (திருமதி) ஏ.ஏ.பி. அதிகாரி
பி.பொ.மு. (வடிவமைப்பு-2) ∴ உ.பொ.மு. **(DHQC)**

பொறியியலாளர் எஸ்.ஏ.யூ.சி. ஸ்ரீவர்த்தன
உ.பொ.மு. (நீர் வளங்கள் திட்டமிடல்)

பொறியியலாளர் பி.எம்.பி.சி. குணதிலக்க
**A/**உ.பொ.மு. **(EPC-**கிழக்கு**)**

பொறியியலாளர் ஜி.ஆர்.ஏ.எஸ். குணதிலக்க
உ.பொ.மு. (உசாதுணை-கிழக்கு)

பொறியியலாளர் டப்ளியூ.ஏ.டீ.டீ. நந்தகுமார
உ.பொ.மு. (வட பிராந்திய வீதிகள்)

பொறியியலாளர் எம்.என். குணசேன
உ.பொ.மு. (**EPC**- ஊவா மாகாணம்)

பொறியியலாளர் ரீ.ஜி.டீ.ரீ. தர்மவர்த்தன
உ.பொ.மு. (கருத்திட்டங்கள்)

பொறியியலாளர் டப்ளியூ.ஈ.பி. ரஞ்ஜன் குமார
யு.'.உ.பொ.மு. (**EPC**-சபரகமுவ)

பொறியியலாளர் ஜி.ஆர்.ஏ.எஸ் குணதிலக்க
**A/**உ.பொ.து. **(EPC-**தென் கிழக்கு**)**

பொறியியலாளர் எஸ்.எஸ்.ஏ. களுகல்தெனிய
**A/**உ.பொ.மு. (வடிவமைப்பு-3)

பொறியியலாளர் ஜே.ஏ.டீ.ஆர்.எஸ். குமார
**A/**உ.பொ.மு. **(EPC-NCP)**

பொறியியலாளர் ஏ. புஷ்பராஜா
**A/**உ.பொ.மு. (**EPC**-வடக்கு)

பொறியியலாளர் ஏ.ஏ. விராஜ் டயஸ்
உ.பொ.மு. **(NRM** மற்றும் **LS)**

திரு டப்ளியூ.ரீ.டீ.பி. பத்மேந்தா
**A/**பி.பொ.மு. (ஊ மற்றும் **QS**)

பொறியியலாளர் எஸ்.பீ.ஏ.டீ. சேமசிங்க
**A/**உ.பொ.மு. **(EPC-**பொலன்னறுவை**)**

பொறியியலாளர் எல்.டப்ளியூ.ஜே.என். த அல்விஸ்
**A/**உ.பொ.மு. (**EPC**-தென் மாகாணம்)

---

திரு யூ.என்.பீ. மாவத்தகம
பி.பொ.மு. (நிதி)

திருமதி ஏ.சி. ஜயதிலக்க
பி.பொ.மு. ஐவு

திரு இ.ஆர்.எஸ். அமரசேக்கர
பிரதான உள்ளக கணக்காய்வாளர்

திருமதி எஸ்.எச்.எச்.சி.யூ. சேனாநாயக்க
**A/**சிரேஷ்ட சட்ட அலுவலர்

திரு எல்.பி. ஜயசுந்தர
பி.பொ.மு. (ம.வ. மற்றும் நிருவாகம்)

# பணிப்பாளர்களின் அறிக்கை

## பணிப்பாளர்கள் சபையின் வருடாந்த அறிக்கை - 2017

### சட்டமுறை அந்தஸ்து

மத்திய பொறியியல் உசாதுணை பணியகம் (ம.பொ.உ.ப.) நீர் வளங்கள் அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கான பல துறை சார்ந்த உசாதுணை சேவைகளை வழங்கும் நிமித்தம் 1973 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி தாபிக்கப்பட்டது. இது 1957 இன் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட ஒரு நியதிச்சட்டமுறையான ஒரு நிறுவனமாகும்.

### பணிப்பாளர்கள் சபையின் பொறுப்புப் பணிகள்

பணிப்பாளர்கள் சபை பொது வளங்களின் பாதுகாவலன் என்ற ரீதியின் தனக்கு உரித்தளிக்கப்பட்ட பொறுப்புக்களையும் மற்றும் உரிமைகளையும் நல்லெண்ணத்துடனும் நேர்மையுடனும் நிறைவேற்ற வேண்டும். இறுதியாக பொதுமக்களினால் பாரியளவில் சுமக்கப்படும் சரியான திட்டமின்றி மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளினதும் ஏதாவது தீர்மானங்களினதும் விளைவாக வரும் தனது கடினமான பொறுப்புக்கள் தொடர்பில் சபை எப்பொழுதும் விழிப்பாக இருக்க வேண்டும்

### மிகச்சிறந்த செயன்முறைகள்.

கூட்டிணைந்த நிருவாகத்திலுள்ள மிகச்சிறந்த செயற்பாடுகள் தொழில் முயற்சியின் சிறந்த அக்கறைகளில் வெளிப்படையாகவும் ஆக்கபூர்வமாக திறமுறைத்திட்டத் தீர்மானங்களை விவாதிக்கக்கூடிய வகையில் சபையின் சிறந்த தொழிற்பாட்டிற்கும் விழிப்புணர்வுக்கும் உதவியாகவும் அமையும். இந்த நோக்கத்தின் நிமித்தம், சபை உறுப்பினர்களின் புரட்சிகரமான கருத்துக்களுக்கும் செவிசாய்க்கப்படுதல் வேண்டும். தனியானவொரு புரட்சியாளரினால் சபையின் பெரும் வித்தியாசத்தை ஏற்படுத்தக் கூடிய சாத்தியம் இருக்கின்றது. “மிக உன்னதமான முறையில் செயலாற்றுகின்ற கம்பனிகள் ஒரு கடப்பாடு என்ற ரீதியிலும் பாராதீனப்படுத்த முடியாத ஒரு விடயம் என்ற ரீதியிலும் புரட்சி தொடர்பில் மிகவும் தீவிரமாக விவாதிக் ககூய பணிப்பாளர்கள் சபைகளைக் கொண்டிருக்கும்”.

### தலைமைத்துவம் சார்ந்த வகிபங்கு

ஐதனது தலைமைத்துவம் சார்ந்த வகிபங்கில் பணிப்பாளர்கள் சபையின் கடமைகளில் பின்வரும் அம்சங்கள் உள்ளடங்கியிருக்க வேண்டும்.

a) தொழில்முயற்சியின் செயற்பணியையும் அந்தத் தொழில்முயற்சி தனது பங்குதாரர்களினதும் ஏனைய அக்கறையுடைய தரப்புகளினதும் நலன்களில் எவ்வாறு சிறந்த முறையில் பணியாற்ற முடியும் என்பதையும் நிர்ணயித்தல்.

b) சட்டமுறையான தேவைப்பாடுகள் நிறைவேற்றப்படுகின்றனவா மற்றும் சங்க விஞ்ஞாபன உறுப்புரைகளின்∴ கூட்டிணைந்த சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க குறித்த தொழில்முயற்சி இயங்குகின்றதா என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளல்.

c) முகாமைத்துவத்தின் மூலம் ஆகக்கூடிய அடைவுகளையும் தனது பங்கு தாரர்களுக்கும் மற்றும் ஏனைய அக்கறையுடைய தரப்புகளுக்குமான நன்மைகளையும் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் செயற்படுத்தக் கூடிய கொள்கைகளை வகுத்தமைத்தல்.

d) எதிர்கால வளர்ச்சிக்கான நீண்டகாலக் குறிக்கோள்களையும் மற்றும் நோக்கங்களையும் வகுத்தமைக்கும் பொருட்டு வழமையான காலப் பகுதிகளில் பொதுக் கொள்கைக் குறிக்கோள்களை மீளாய்வு செய்து திறமுறை ரீதியான பணிப்புரைகளை விடுத்தல்.

e) குறிக்கோள்களையும் நோக்கங்களையும் நிறைவேற்றிக்கொள்வதற்கு தேவையான நிதி தொழில்முயற்சியின் சுமுகமான தொழிற்பாட்டிற்கு இடையூறுகள் ஏற்படாத வகையில் சமயோசிதமான அடிப்படையில் ஈட்டப்படுகின்றதா அல்லது பெற்றுக்கொள்ளப்படுகின்றதா என்பதை நிச்சயப்படுத்திற் கொள்ளல்.

f) போதிய பதிவுகளையும் கணக்குப் புத்தகங்களையும் பேணி சரியான பொறுப்புக்கூறும் தன்மையை உறுதிப்படுத்துதல்.

g) அழிவுகள், பின்னடைவுகள் முதலியவற்றுக்கு எதிராக தொழில் முயற்சியை உந்தும் வகையில் பயனுள்ள இடர் முகாமைத்துவ முறைமை காணப்படுகின்றதா என்பதை நிச்சயப்படுத்திற்கொள்ளல்.

### மேற்பார்வை வகிபங்கு

தனது மேற்பார்வை வகிபங்கைப் பொறுத்த வரையில் பணிப்பாளர்கள் சபை தொழில்முயற்சியின் ஒட்டுமொத்த முகாமைத்துவத்திற்கும் அதே நேரம் சிரேஷ்ட முகாமையாளர்களுக்கு இடையில் பரந்தளவில் பகிரப்பட்ட பொறுப்புடன் செவ்வைகளாகவும் சமநிலைகளாகவும் பயனுள்ள சிறந்த கட்டுப்பாட்டு முறைமைகளின் தாபிப்புக்கும் பொறுப்புடையதாக விளங்கும்.

இந்த நோக்கத்தின் நிமித்தம் பணிப்பாளர்கள் சபையின் பொறுப்பில் பின்வரும் அம்சங்கள் அடங்கியிருக்கும்.

a) சபையின் கொள்கைகள் அதன் வகுத்தமைக்கப்பட்ட அதே கருத்திலும் பெருமளவில் பொதுமக்களினதும் மற்றும் நிறுவனங்களினதும் சிறந்த அக்கறையிலும் நிறைவேற்றப்படுகின்றனவா என்ற விடயங்களை நிச்சயப்படுத்திற்கொள்ளல்.

b) தொழில்முயற்சி அதன் இயக்கச்செயற்பாட்டுப் போக்கிலுள்ளதா என்பதை நிச்சயப்படுத்திற்கொள்வதற்க்-காக தகவல் அறிக்கைகளை முகாமை செய்தல் மற்றும் செயலாற்றுகையை மதிப்பிடுதல் ஆகிய வழிகளில் முகாமைத்துவ சார் செயற்பாடுகளைக் கண்காணித்தல்.

c) பெறுபேறுகள் விரும்பிய எதிர்பார்ப்புகளுடன் பொருந்தவில்லை என்றால், குறிக்கோள்கள் அடையப்படுகின்றனவா என நிச்சயப் படுத்திற்கு தாமதமின்றி பரிகார நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

d) தகுதிவாய்ந்த ஆட்களை முகாமையாளர்களாக நியமித்து தத்தமது தொழிற்பாடுகளை சுயாதீனமாகவும் பொறுப்புக்கூறக்கூடிய ஒரு விதத்திலும் மேற்கொள்வதற்கான உகந்தவொரு சூழலை உருவாக்கிக் கொடுப்பதன் மூலம், சிரேஷ்ட முகாமைத்துவ ஊழியர்களுக்கு இடையில் சரியான பிரதிநிதித்துவமும் மற்றும் கூட்டு முயற்சியும் காணப்படுகின்றதா என்பதை நிச்சயப்படுத்திற்கொள்ளல்.

e) வருடாந்தப் பொதுக் கூட்டங்களிலும் ∴பொதுத் தொழில்முயற்சிகள் பற்றிய குழு (COPE) கூட்டங்களிலும் கலந்துகொள்ளும் அக்கறையுடைய தரப்புகளுக்கு அறிக்கையிடுதல்.

## பணிப்பாளர்கள் சபையினது உறுப்பினர்கள் பற்றிய விபரம்

பணிப்பாளர்கள் சபை மத்திய பொறியியல் உசாதுணைப் பணியகத்தின் தலைவர் அடங்கலாக ஏழு (07) சபை உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

பணிப்பாளர்கள் சபையினது உறுப்பினர்களின் விபரம் பின்வருமாறு:

- பொறியியலாளர் ஜி.டீ.ஏ. பியதிலக்க - தலைவர்
- திரு எம்.ஆர்.ஜி. ரணதுங்க - தொழிற்படு பணிப்பாளர்
- பொறியியலாளர் என். ரூபசிங்க - பணிப்பாளர்
- திரு எஸ்.எம்.என்.எல். சேனாநாயக்க - பணிப்பாளர்
- பொறியியலாளர் எச்.பீ. ஜயசேக்கர - பணிப்பாளர்
- திரு பி.பீ.எஸ்.சி. நொனிஸ் - பணிப்பாளர்
- பொறியிய. எஸ்.பி.பி. நாணயக்கார - பணிப்பாளர்

## கூட்டங்களும் கூட்டங்களுக்கான உறுப்பினர்களின் வரவும் பற்றிய விபரம்

சபை, 2017 நிதியாண்டில் 13 தடவைகள் கூடியது. பணிப்பாளர்கள் சபை உறுப்பினர்களினது வரவு பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| பெயர் | பதவி | 2017 | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | சன 30 | பெப் 23 | மார்ச் 27 | ஏப் 27 | மே 24 | யூன் 15 | யூன் 22 | யூலை 27 | ஆகஸ் 25 | செப் 28 | ஒற் 26 | திச 11 | திச 28 |
| பொறியியலாளர் ஜி.டீ.ஏ. பியதிலக்க | தலைவர் | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |
| திரு எம்.ஆர்.ஜி. ரணதுங்க | தொழிற்படு பணிப்பாளர் | ✓ | ✓ | ✓ | ✓ | - | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |
| பொறியியலாளர் என். ரூபசிங்க | பணிப்பாளர் | - | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |
| திரு எஸ்.எம்.என்.எல். சேனாநாயக்க | பணிப்பாளர் | - | ✓ | ✓ | - | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | - | - | ✓ | ✓ |
| பொறியியலாளர் எச்.பீ. ஜயசேக்கர | பணிப்பாளர் | ✓ | ✓ | ✓ | ✓ | - | - | - | ✓ | ✓ | - | ✓ | ✓ | ✓ |
| பொறியியலாளர் ஜி.டீ.ஏ. பியதிலக்க | பணிப்பாளர் | ✓ | ✓ | - | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |
| பொறியியலாளர் எஸ்.பி.பி. நாணயக்கார | பணிப்பாளர் | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |

# கணக்காய்வுக் குழு அறிக்கை

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு **PED** 55 ஆம் இலக்க பொதுத் தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையிலுள்ள நியதிகளின் கீழ் பணிப்பாளர்கள் சபை குறிப்பீடுசெய்யும் விஷேட குறிப்பு நியதிகளினால் (கு.நி.) நிருவகிக்கப் படுகின்றது. கணக்காய்வுக் குழு அரசாங்கத்தின் தேவைப்பாடுகளுக்கும் குறிப்பு நியதிகளுக்கும் இணங்க தனது பொறுப்புக்களை நிறைவேற்றுதில் தான் அடைய வேண்டிய குறிக்கோள்களில் ஒருமுகப்படுகின்றது. நிதி அறிக்கையிடுகை பொருத்தமான இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கும் ஏனைய ஏற்புடைய சட்டமுறையான தேவைப்பாடுகளுக்கும் அமைவாக மேற்கொள்ளப்படுகின்றதா என்பதை உறுதிசெய்துகொள்ளும் நிமித்தம் மேற்பார்வை பணியில் சபைக்கு உதவும் பொறுப்பை கணக்காய்வுக் குழு கொண்டுள்ளது. அரசாங்கத்தினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகள், ஒழுங்குவிதிகள், உரிய விதிமுறைகள் சகலதும் அனுசரிக்கப்படுகின்றனவா என்பதை நிச்சயப்படுத்திற்கொள்ளும் பொருட்டு ஒவ்வாமை தொடர்பில் சபைக்கு சிபாரிசுகளை முன்வைத்தல், தொடர்ச்சியாக மீளாய்வு செய்தல், கண்காணித்தல் என்பவற்றினூடாக குழு மேலும் சபைக்கு உதவ வேண்டும். கணக்காய்வுக் குழு உள்ளக/வெளிக்களக் கணக்காய்வு அறிக்கைகள், முகாமைத்துவ சுற்று நிரூபங்கள், COPE குழுவின் சிபாரிசுகள் என்பவற்றை மீளாய்வு செய்து பரிகார நடவடிக்கைகளை எடுக்கும் பொருட்டு சபைக்கு உதவ வேண்டும். இந்தக் குழு மேலும் போதிய உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை அறிமுகப்படுத்துவதற்கும் செயற்படுத்துவதற்கும் சபைக்கு உதவ வேண்டும். குழு ஆகக்குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு தடவையாவது கூடி அதன் பின்னர் சரியான உகந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதை இலகுபடுத்த கூட்டத்தின் கூட்டறிக்கைகளுடன் சேர்த்து உடனடியாக தனது சிபாரிசுகளை பணிப்பாளர் சபைக்கு அறிக்கையிடுதல் வேண்டும். கணக்காய்வுக் குழுவின் குறிப்பு விதிமுறைகள் பணிப்பாளர்கள் சபையினால் வெளியிடப்படுகின்றன.

உள்ளகக் கணக்காய்வு பிரிவின் பொறுப்புக்களையும் மற்றும் வருடாந்த கணக்காய்வு திட்டங்களின் மீளாய்வையும் நிர்ணயித்தல், பணியகத்தின் சகல செயற்பாடுகளுக்குமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளை மதிப்பிட்டு மீளாய்வு செய்தல், ஆகுசெலவு பயன்களுக்காகவும் வீணான செலவினம் முதலியவற்றை ஒழிப்பதற்கும் வழமையான இடைவெளிகளில் செயலாற்றுகையை மீளாய்வு செய்தல், உள்ளகக் கணக்காய்வாளர்களுடன் இணைந்து கணக்காய்வாளர் அதிபதி.'. வெளிக்கள கணக்காய்வாளர்கள் சமர்ப்பிக்கும் முகாமைத்துவம் சார்ந்த ஆவணங்களை பின்பற்றுதல், நியதிச் சட்டமுறைகள், ஒழுங்குவிதிகள், நியதிகள் மற்றும் சுற்றிக்கைகள் முதலியன அனுசரிக்கப்படுகின்றனவா என்பது பற்றி நிச்சயப்படுத்திக் கொள்ளல், கணக்கீட்டு நியமங்கள் அனுசரிக்கப்படுகின்றனவா என்பதை உறுதிசெய்து கொள்ளும் பொருட்டு நிதிக் கூற்றுக்களை மீளாய்வு செய்தல், பரிகார நடவடிக்கைக்கான உள்ளகக் கணக்காய்வு / வெளிக்களக் கணக்காய்வு அறிக்கைகள், முகாமைத்துவ ஆவணங்கள் என்பவற்றை மீளாய்வு செய்தல், பொதுத் தொழில்முயற்சிகள் குழுவின் சிபாரிசுகளின்/ பணிப்புரைகளின் செயற்படுத்துகையை மீளாய்வு செய்தல், மற்றும் வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கும் பொருட்டு குழுவின் முடிவுகள் பற்றிய அறிக்கைகளை தயாரித்தல், ஏதுமிருப்பின் வழமையான ஒரு அடிப்படையில் தொழில் முயற்சி துணை நிறுவனங்களுடன் தொடர்புடைய குறித்த பொருத்தமான விடயங்களை அடையாளப்படுத்துதல் முதலிய பொறுப்புப் பணிகளும் குழுவுக்கு இருக்கின்றன.

## குழுவின் உறுப்பினர்கள்

**PED** 55 ஆம் இலக்கப் பொதுத் தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க, கணக்காய்வுக் குழு தனக்குத் தலைமை வகிக்கும் திறைசேரியினது பிரதிநிதி அடங்கலாக நிறைவேற்று சாராத மூன்று (03) சபை உறுப்பினர்களை உள்ளடக்கியிருக்கின்றது.

கணக்காய்வுக் குழுவின் தற்போதைய உறுப்பினர்கள் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- திரு பி.பீ.எஸ்.சி. நொனிஸ் - குழுவின் பணிப்பாளர்/தலைவர்
- திரு எஸ்.எம்.என்.எல். சேனாநாயக்க - பணிப்பாளர்
- பொறியியலாளர் எச்.பீ. ஜயசேக்கர - பணிப்பாளர்

குழு நிதி மற்றும் முகாமைத்துவ நிபுணத்துவத்துடன் வர்த்தக மற்றும் அரச துறைகளில் கலப்பு அனுபவத்தைக் கொண்டுள்ளது.

சபையின் செயலாளர் திருமதி எஸ்.எச்.எச்.சி.யூ. சேனாநாயக்க கணக்காய்வு குழுவுக்கான செயலாளராக தொழிற்படுகின்றார். பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் திரு இ.ஆர்.எஸ். அமரசேக்கர கணக்காய்வு குழுவுக்கான ஏற்பாட்டாளராக தொழிற்படுகின்றார்.

### கூட்டங்களும் கூட்டங்களுக்கான உறுப்பினர்களின் வரவும் பற்றிய விபரம்

கணக்காய்வுக் குழு 2017 நிதியாண்டில் ஆரு தடவைகள் கூடியது. குழு உறுப்பினர்களினது வரவு பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| பெயர் | 2017 | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | பெப் 2 | ஏப் 05 | யூன் 21 | செப் 12 | திச 23 | திச 28 |
| திரு பி.பீ.எஸ்.சி. நொனிஸ் | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |
| திரு எஸ்.எம்.என்.எல். சேனாநாயக்க | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |
| பொறியியலாளர் எச்.பீ. ஜயசேக்கர | ✓ | ✓ | - | - | ✓ | ✓ |

குழுவினது ஏனைய உறுப்பினர்கள், சிரேஷ்ட முகாமையாளர்கள் அதே போன்று வெளிக்களக் கணக்காய்வாளர்கள் ஆகியோர் பொருத்தமான நேரத்தில் கலந்துரையாடல்களில் பங்கேற்குமாறு அழைக்கப்படுகின்றனர். கணக்காய்வின் நடவடிக்கைகள் பற்றி வழமையாக பணிப்பாளர்கள் சபைக்கு அறிக்கையிடப்படுகின்றது.

## இணக்கப்பாடு

நிதிக் கூற்றுக்கள் இலங்கைக் கணக்கீட்டு நியமங்களை அனுசரித்து காணப்படுகின்றனவா என்பதை நிச்சயப்படுத்திற் கொள்ளும் பொருட்டு உரிய சட்டவாக்கங்களுக்கும் ஒழுங்குறுத்துகை தேவைப்பாடுகளுக்கும் இணங்கத் தொழிற்படும் பொறுப்பை குழு சபைக்கு ஒப்படைத்துள்ளது. ஏற்கெனவேயிருக்கின்ற போதிய கட்டுப்பாடுகளையும் இடர் முகாமைத்துவ நடைமுறைகளையும் மதிப்பீடு செய்த குழு ஏற்கெனவே இருக்கின்ற உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை வலுப்படுத்துவதற்குத் தேவையான மேலதிகக் கட்டுப்பாடுகள் மற்றும் இடர் தணிப்புத் திறமுறைத்திட்டங்கள் என்பன தொடர்பில் சபைக்கு சிபாரிசுகளை முன்வைத்தது.

மேலும், குழு பணியகத்தின் வழமையான இயக்கச்செயற்பாடுகளை மீளாய்வு செய்து வியாபார நடவடிக்கைகளுக்கான எதிர்கால நன்மைகளை மதிப்பிட்டுள்ளது. அதற்கிணங்க, நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதில் பிரயோகிக்கப்பட்ட நிகழ் அக்கறை எடுகோள் சரியானது என்பதை குழு உறுதிசெய்கின்றது.

## வெளிக்கள கணக்காய்வு

கணக்காய்வாளர் அதிபதி பணியகத்தின் வெளிக்களக் களக்காய்வாளராக தொழிற்படுகின்றார்.

### திரு பி.பீ.எஸ்.சி. நொனிஸ்
**Chairman - Audit and Management Committee**

# கூட்டிணைந்த தகவல்களும் கணக்கீட்டுக் கொள்கைகளும்

## 1. கூட்டுத்தாபனத் தகவல்கள்

### 1.1 அமைவிடமும் சட்டமுறையான அமைப்பும்

மத்திய பொறியியல் உசாதுணை பணியகம் 1957 இன் 49 ஆம் இலக்கக் கைத்தொழில் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தினது ஏற்பாடுகளின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கையில் அமைந்திருக்கும் ஒரு அரச கூட்டுத் தாபனமாகும். இந்தப் பணியகத்தின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் இலக்கம் 415, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 07 என்ற முகவரியில் அமைந்துள்ளது.

2017 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான மத்திய பொறியியல் உசாதுணை பணியகத்தினது திரண்ட நிதிக் கூற்றுக்கள் பணியகத்தினதும் மற்றும் துணை நிறுவனங்களினதும் (இதனகத்துப் பின்னர் குழு எனக் குறிப்பீடு செய்யப்படும்) திரண்ட நிதிக் கூற்றுக்களை உள்ளடக்கியிருக்கும்.

பணியகத்தினது சகல கம்பனிகளினதும் நிதிக் கூற்றுக்கள் திசம்பர் மாதம் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஒரு பொதுவான நிதியாண்டை கொண்டிருக்கும்.

### 1.2 அடிப்படை செயற்பாடுகளும் மற்றும் இயக்கச்செயற்பாடுகளின் தன்மையும்

மத்திய பொறியியல் உசாதுணை பணியகம் அடிப்படை ரீதியில் நிர்மாணம் சார்ந்த வியாபார நடவடிக்கைகளிலும், உசாதுணை, மற்றும் பொறியியல் சம்பந்தப்பட்ட ஏதாவது செயற்பாடுகளிலும் ஈடுபடுகின்றது.

சென்ட்ரல் இன்ஜினியரிங் சேர்விஸெஸ் (ப்ரைவட்) லிமிற்றட் நிறுவனம் (**CESL**) ம.பொ.உ.ப. இற்கு முற்றிலும் சொந்தமான ஒரு துணைக் கம்பனியாகும். இது ஒரு குழு உறுப்பினராக அல்லது கூட்டு வியாபார ஸ்தாபனமாக விளங்குகின்றது என்ற ரீதியில் அல்லது அதன் சொந்தத்தில் அதற்கான இணைந்த அல்லது இடைநேர் சம்பந்தப்பட்ட சகல அம்சங்களிலும் அதே நேரம் சிவில், மின்சாரம் மற்றும் எந்திரப் பொறியியல் ஆகிய துறைகளிலும் வடிவமைப்பு நிர்மாண, சுழற்சிச் சாவி மற்றும் ஏனைய வகை நிர்மாணப் பணிகள் முதலியயவற்றை இலங்கையிலும் இலங்கைக்கு வெளியிலும் ஏற்று நிறைவேற்றுவதில் ஈடுபடுகின்றது.

## 2 கணக்குகள் தயாரித்தல் அடிப்படை

### 2.1 இணக்கப்பாடு பற்றிய கூற்று

பணியகத்தினதும் குழுவினதும் நிதிக் கூற்றுக்கள் முழுமையான வருமானக் கூற்று, நிதி நிலைக் கூற்று, ஒப்புரவு மாற்றங்கள் பற்றிய கூற்று, காசுப் பாய்ச்சல்கள் கூற்று, கணக்கீட்டுக் கொள்கைகள், நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் என்பவற்றை உள்ளடக்கி இருக்கும். இந்த நிதிக் கூற்றுக்கள் இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தினால் (இ.ப.க.நி.) வெளியிடப்பட்டுள்ள இலங்கைக் கணக் கீட்டு நியமங்களுக்கு இணங்க (**SLFRS**, **LKAS**) தயாரிக்கப்பட்டுள்ளன.

துணை நிறுவனங்களின் நிதி கூற்றுக்கள் பணியகம் எடுத்துரைக்காத வரையில் பணியகத்தின் கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்க தயாரிக்கப் படுகின்றன.

### 2.2 அளவீட்டு அடிப்படை

நிதி நிலைக் கூற்றிலுள்ள பின்வரும் விடயங்கள் தவிர, திரண்ட நிதிக் கூற்றுக்கள் வரலாற்று ஆகுசெலவின் பேரில் தயாரிக்கப்பட்டுள்ளன.

- நிதி சார் சொத்துக்களும் பொறுப்புக்களும் நியாய விலைப் பெறுமானத்தில் அளவிடப்பட்டுள்ளன (LKAS -39)
- சொத்துக்களினதும், பொறித் தொகுதிகளினதும் அதே நேரம் உபகரணங்களினதும் நியாய விலைப் பெறுமானங்களினது பரிவர்த்தனைத் திகதியிலுள்ள ஊகிக்கப்பட்ட ஆகுசெலவாக இனங்காணப்படுகின்றன **(LKAS -16)**
- அட்டுறு விலைமதிப்பீட்டு அடிப்படையில் ஊழியர்கள் நன்மைக் கடப்பாடுகள் இனங்காணப்படுகின்றன (LKAS-19)

பணியகத்தின் பணிப்பாளர்கள் எதிர்காலத்தில் எதிர்வுகூறக்கூடிய நிகழும் ஒரு கருசனை விடயமாக பணியகத்தின் ஆற்றல் தொடர்ந்தும் நிலைத்திருக்குமா என்பதற்கு ஒரு மதிப்பீட்டை மேற்கொண்டுள்ளனர். எனினும் இவர்கள் வியாபாரத்தை ஒழிப்பதற்கான அல்லது அதனை முடிவுறுத்துவதற்கான ஒரு தேவை பற்றி எதிர்வுகூறவில்லை.

### 2.3 தொழிற்படு மற்றும் சமர்ப்பண நாணயம்

திரண்ட நிதிக் கூற்றுக்கள் பணியகத்தின் தொழிற்படு நாணயமான இலங்கை ரூபாவில் (இ.ரூ.) எடுத்துரைக்கப்படுகின்றன.

### 2.4 முக்கிய கணக்கீட்டு தீர்மானங்களினதும், மதிப்பீடுகளினதும், எடுகோள்களினதும் பயன்பாடு

இலங்கைக் கணக்கீட்டு நியமங்களை **(SLFRSs)** அனுசரித்து நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் விடயம் கொள்கைப் பிரயோகத்திற்கும், சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினங்கள் என்பவற்றின் பதிவுத் தொகைகளுக்கும் பயனுள்ள தீர்வுகளையும், மதிப்பீடுகளையும் மற்றும் எடுகோள்களையும் மேற்கொள்வதற்கு முகாமைத்துவத்தை தேவைப்படுத்தும். உண்மையான பெறுபேறுகள் இந்த மதிப்பீடுகளிலிருந்து வேறுபடலாம்.

மதிப்பீடுகளும் மற்றும் சம்பந்தப்பட்ட எடுகோள்களும் வரலாற்று அனுபவத்தினதும் மற்றும் ஏனைய வளங்களிலிருந்து உடனடியாகத் தென்படாத சொத்துக்களினதும் அதே நேரம் பொறுப்புக்களினதும் கொணரப்படும் பெறுமானங்கள் பற்றிய தீர்வுகளை மேற்கொள்ளும் அடிப்படையை உருவாக்குவதன் பயனாக எழுகின்ற சந்தர்ப்ப சூழ்நிலையின் கீழ் நியாயமனளவில் நம்பப்படுகின்ற ஏனைய பல காரணிகளினதும் அடிப்படையில் அமைந்திருக்கும்.

மதிப்பீடுகளும் முக்கிய எடுகோள்களும் ஒரு நிகழும் அடிப்படையில் மீளாய்வு செய்யப்படுகின்றன. மீளாய்வு நடைமுறை நிதியாண்டையும் எதிர்கால நிதியாண்டையும் பாதிக்குமாயின் அந்த மீளாய்வு காலப் பகுதியில் அல்லது அந்த மீளாய்வு அந்த நிதியாண்டை மாத்திரம் பாதிக்குமாயின், மதிப்பீடுகள் மீளாய்வு செய்யப்படும் கால பகுதியில், கணக்கீட்டு மதிப்பீடு பற்றிய திருத்தங்கள் இனங்காணப்படுகின்றன.

திரண்ட நிதிக் கூற்றுக்களில் இனங்காணப்பட்ட தொகைகள் மீது மிக முக்கியமான பயனைக்கொண்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளைப் பிரயோகிப்பதில் காணப்படும் முக்கிய தீர்வுகள் பற்றிய விபரங்கள் கீழ்காணும் குறிப்புகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

| முக்கிய கணக்கீட்டு மதிப்பீடு/தீர்மானம் | குறிப்பு இலக்கம் | பக்க இலக்கம் |
|---|---|---|
| ஒப்பந்த வருமானம், ஆகுசெலவு, நிறைவு விகிதம் | 09 | 30 |

நிதிக் கூற்றுக்களில் பொருண்மையான ஒரு தீர்வின் பயனாக வரும் முக்கிய ஒரு பொறுப்பைக் கொண்டுள்ள எடுகோள்கள், மதிப்பீடுகள், நிச்சயமற்றதன்மைகள் என்பன தொடர்பான விபரங்கள் கீழ்காணும் அட்டவணையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

| முக்கிய கணக்கீட்டு மதிப்பீடு/தீர்மானம் | குறிப்பு இலக்கம் | பக்க இலக்கம் |
|---|---|---|
| சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள் | 15 | 31/32 |
| ஊழியர் நன்மைகள் | 22 | 34 |
| பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புக்கள் | 23 | 35 |

## 3 முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள்

### 3.1 திரட்டு அடிப்படை

#### (a) வியாபாரத் திரட்டு

"திரண்ட நிதிக் கூற்றுக்கள்" எனும் இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள் ளுடுகுசுளு 10 இன் பிரகாரம் கம்பனியினதும் அதன் துணை நிறுவனங்களினதும் திரண்ட நிதிக் கூற்றுக்கள் குழுவின் நிதிக் கூற்றுக்களில் உள்ளடங்குகின்றன.

#### (b) துணை நிறுவனங்கள்

துணை நிறுவனங்கள் அனைத்தையும் குழு கட்டுப்படுத்தும். துணை நிறுவனங்களின் நிதிக் கூற்றுக்கள் அந்தக் கட்டுப்பாடு ஆரம்பமாகுகின்ற திகதியிலும் அந்தக் கட்டுப்பாடு முடிவுறாத திகதியிலும் இருந்து அவற்றின் திரண்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படுகின்றன. துணை நிறுவனங்களின் கணக்கீட்டுக் கொள்கைகள் குழுவினால் பின்பற்றப்படுகின்ற கணக்கீட்டுக் கொள்கைக்கு இணங்க தேவையானவாறு மாற்றப்பட்டுள்ளன.

#### (c) திரண்ட நிதி மீது மதிப்பிடப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள்

குழுவுக்கு இடையிலான நிலுவைகள், கொடுக்கல்வாங்கல்கள், மற்றும் குழுவின் கொடுக்கல்வாங்கள் என்பவற்றுக்கு இடையில் எழும் ஏதாவது மாற்றம் பெறாத வருமானம் மற்றும் செலவுகள் ஆகியன திரண்ட நிதிக் கூற்றுக்கள் முன்வைக்கப்படும் நேரத்தில் விட்டுவிடப்படுகின்றன. கணக்கீடு செய்யப்பட்ட முதலீட்டை பெறுகின்ற தரப்பு, ஒப்புரவுகள் கொடுக்கல் வாங்கல்களிலிருந்து எழுகின்ற மாற்றம்பெறாத இலாபங்கள் முதலீட்டைப் பெறும் தரப்பில் குழுவினது அக்கறையின் அளவுக்கான முதலீடுகளுக்கு எதிராக விட்டுவிடப்படுகின்றன. மாற்றம் பெறாத நட்டங்கள் மாற்றம் பெறாத இலாபங்கள் மாற்றம் பெறாத அதே விதத்தில் விட்டுவிடப்படுகின்றன. எவ்வாறாயினும், நட்டம் ஏற்படவில்லை என்பதற்கான சான்று இல்லை என்ற அளவுக்கு மாத்திரமே அவ்வாறு செய்யப்படுகின்றது.

### 3.2 வெளிநாட்டு நாணயக் கொடுக்கல்வாங்கல்கள்

சகல நாணயமாற்றுக் கொடுக்கல்வாங்கல்களும் அத்தகைய கொடுக்கல் வாங்கல்கள் செயல்வலுப்பெற்றிருக்கின்ற நேரத்திலுள்ள நாணயமாற்று வீதத்தில் தொழிற்படு நாணயத்திற்கு மாற்றப்படுகின்றன. வெளிநாட்டு நாணயத்தில் பெறுமானம் குறிக்கப்பட்ட நிதி சார்ந்த சொத்துக்களும் பொறுப்புக்களும் அறிக்கையிடப்படும் திகதியிலுள்ள அதேவிடத்து நாணயமாற்று வீதத்தில் தொழிற்படு நாணய ஒப்புரவுகளுக்குப் பரிவர்த்தனை செய்யப்படுகின்றன. ஒரு வெளிநாட்டு நாணயப் பெறுமதியில் வரலாற்று ஆகுசெலவு அடிப்படையில் அளவிடப்படும் நிதி சாராத சொத்துக்கள் ஆரம்பக் கொடுக்கல்வாங்கல் திகதியிலுள்ள நாணயமாற்று வீதங்களைப் பிரயோகித்து பரிவர்த்தனை செய்யப் படுகின்றன. நிதி சாரா சொத்துக்களும் பொறுப்புக்களும் பெறுமானங்கள் நிர்ணயிக்கப்பட்ட நேரத்திலிருந்த நாணயமாற்று வீதங்களைப் பிரயோகித்து பரிவர்த்தனை செய்யப்படுகின்றன. நிதி சாராத சொத்துக்களின் பரிவர்த்தனை மீது எழுகின்ற இலாபம் அல்லது நட்டம் கொடுக்கல்வாங்கல் வித்தியாசத்திற்கு உயர்வைக் கொடுக்கும் சொத்தின் இலாபத்திற்கு அல்லது நடத்திற்கு இணங்க இனங்காணப் படுகின்றது.

வெளிநாட்டுக் கொடுக்கல்வாங்கல்களின் பரிவர்த்தனை அடிப்படையில் எழுகின்ற வெளிநாட்டு நாணயமாற்று வித்தியாசங்கள் இலாப அல்லது நட்டக் கூற்றில் ஒரு இலாபமாக அல்லது நட்டமாக இனங்காணப் படுகின்றது.

## 3.3 நிதி சார்ந்த கருவிசாதனங்கள்

### (a) நிதி சார்ந்த சொத்துக்கள்

குழு ஆரம்பத்தில் கடன்களையும், வருமதிகளையும் மற்றும் வைப்புகளையும் அவை உருவாகும் நேரத்தில் இனங்காணுகின்றது. ஏனைய சகல நிதி சார்ந்த சொத்துக்களும் அடிப்படை ரீதியில், குழு அந்தச் சொத்தின் தொடர்புடைய ஏற்பாடுகளுக்கு ஒரு தரப்பாக மாறுகின்ற வர்த்தகத் திகதியில் இனங்காணப்படுகின்றன.

நிதி சார்ந்த சொத்துக்களின் உரித்துடமை வழங்கல்களும் மற்றும் சகல பொறுப்புக்களும் பொருண்மையாளவில் மாற்றப்படுகின்ற ஒரு கொடுக்கல் வாங்கலிலுள்ள நிதி சார்ந்த சொத்துக்கள் மீது தொடர்புடைய காசுப் பாய்ச்சல்களைப் பெறுவதற்கு குழு உரிமைகளை மாற்றுகின்ற அல்லது காலாவதியாகும் சொத்துக்களிலிருந்து வரும் காசுப் பாய்ச்சலுடன் தொடர்புடைய உரிமைகளை குழு கொண்டிருக்கின்ற போது குழு ஒரு நிதி சார்ந்த சொத்தை இனங்காணாமல் விட்டுவிடுகின்றது. குழுவினால் உருவாக்கப்பட்டு அல்லது பிடித்து வைக்கப்பட்டு மாற்றப்படும் நிதி சார்ந்த சொத்துக்களிலுள்ள ஏதாவதொரு அக்கறை விடயம் தனியானவொரு சொத்தாக அல்லது பொறுப்பாக இனங்காணப்படுகின்றது.

ஒரே நேரத்தில் சொத்துக்களை மாறச்செய்து பொறுப்புக்களைத் தீர்ப்பனவு செய்தல் அல்லது தேறிய ஒரு அடிப்படையில் தீர்ப்பனவு செய்தல் ஆகிய இரண்டிலொன்றை குழு மேற்கொள்ள எண்ணுகின்ற போதும் மற்றும் தொகைகளை சமப்படுத்துவதற்கு குழு சட்ட உரிமையைக் கொண்டிருக்கின்ற போதும் மாத்திரமே சொத்துக்களும் பொறுப்புக்களும் சமநிலைப்படுத்தப்பட்டு நிதி நிலைக் கூற்றில் சமர்ப்பிக்கப்படுகின்றன.

குழுவு பின்வரும் பிரித்துப்பெற முடியாத நிதி சார்ந்த சொத்துக்களைக் கொண்டிருக்கும்: கடன்கள், வருமதிகள், மற்றும் விற்பனைக்குக் கிடைக்கக் கூடிய நிதி சார்ந்த சொத்துக்கள்.

#### *(i)* கடன்களும் வருமதிகளும்

கடன்களும் வருமதிகளும் என்பது நிலையான அல்லது நிர்ணயிக்கக்கூடிய கொடுப்பனவுகளையுடைய துல்லியமானவொரு சந்தையில் குறிப்பிட்டவொரு விலையைக் கொண்டிருக்காத நிதி சார்ந்த சொத்துக்களாகும். இத்தகைய சொத்துக்கள் நேரடியாக சேரக்கூடிய ஏதாவது கொடுக்கல்வாங்கல் ஆகுசெலவுகள் அடங்கலாக நியாய விலைப் பெறுமானத்தின் அடிப்படை ரீதியில் இனங்காணப்படுகின்றன. ஆரம்ப இனங்காணலையடுத்து, கடன்களும் வருமதிகளும் ஏதாவது குறைந்தளவான நட்டங்களுக்கு பயனுள்ள வட்டி முறையியலைப் பிரயோகித்து கழிக்கப்பட்ட ஆகுசெலவில் அளவிடப்படுகின்றன. கடன்களும் வருமதிகளும் சம்பந்தப்பட்ட தரப்புகளிடமிருந்து கிடைக்க வேண்டியவைகள் அடங்கலாக பங்கிலும், வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகளிலும் காணப்படும் காசும் காசு ஒப்புரவுகளையும் மற்றும் முதலீடுகளையும் உள்ளடக்கியிருக்கும்.

#### *(ii)* காசும் காசு ஒப்புரவுகளும்

காசு நிலுவைகளில் காசும் அதே நேரம் காசு ஒப்புரவுகளும் உள்ளடங்குகின்றன. தேவையின் அடிப்படையில் மீளச்செலுத்தக் கூடியதும் குழுவினது காசு முகாமைத்துவத்தின் இன்றியமையாத ஒரு பாகமாக உருவாகுகின்றதுமான வங்கி மேலதிகப் பற்றுக்கள் காசுப் பாய்ச்சல்கள் பற்றிய கூற்றின் நோக்கத்திற்காக காசும் காசு ஒப்புரவுகளினதும் ஒரு ஆக்கக்கூறாக உள்ளடக்கப்படும்.

#### *(iii)* முதிர்ச்சிக்காக ஒதுக்கிவைக்கப்பட்ட சொத்துக்கள்

நிலையான அல்லது நிர்ணயிக்கக்கூடிய கொடுப்பனவுகள் மற்றும் நிலையான முதிர்ச்சிகள் என்பவற்றுடன் கூடிய பிரித்தெடுக்க இயலாத நிதி சார்ந்த சொத்துக்கள் அவற்றை முதிர்ச்சிக்காக ஒதுக்கிவைப்பதற்கு குழு சாத்தியமான எண்ணத்தையும் ஆற்றலையும் கொண்டுள்ள போது முதிர்ச்சிக்கான ஒதுக்கிவைக்கப்படும் சொத்துக்கள் என வகைப்படுத்தப்படுகின்றன. ஆரம்ப மதிப்பீட்டின் பின்னர், முதிர்ச்சிக்காக ஒதுக்கிவைக்கப்படும் முதலீடுகள் குறைந்த நட்ட பயனுள்ள வட்டி முறையியலை பிரயோகித்து கழிக்கப்பட்ட ஆகுசெலவில் அளவிடப்படுகின்றன. **EIR** இன் இன்றியமையாத ஒரு பாகமாக விளங்குகின்ற ஏதாவது தள்ளுபடி, கொள்வனவு பேரிலான தவணைக்கட்டணம் மற்றும் கட்டணங்கள், ஆகுசெலவுகள் என்பவற்றைக் கருத்திற்கொண்டு, கழிக்கப்பட்ட ஆகுசெலவு கணிப்பிடப்படுகின்றது.

**EIR** கழிவு விபரம் முழுமையான வருமானக் கூற்றிலுள்ள நிதி சார் வருமானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

#### *(iv)* விற்பனைக்காகக் கிடைக்கக்கூடிய நிதி சார்ந்த சொத்துக்கள்

விற்பனைக்காகக் கிடைக்கக்கூடிய நிதி சார்ந்த சொத்துக்கள் பிரிக்க முடியாத நிதி சார்ந்த சொத்துக்களாகும். அத்தகைய சொத்துக்கள் விற்பனைக்காகக் கிடைக்கக்கூடிய சொத்துக்கள் என குறித்தொதுக்கப்படுகின்றனவேயொழிய ஏனைய நிதி சார்ந்த சொத்துக்களின் எந்த வகுதியாகவும் வகைப்படுத்தப் படுவதில்லை. ஒப்புரவுப் பிணைமுறிகளிலுள்ள குழுவினது முதலீடுகள் விற்பனைக்காகக் கிடைக்கக்கூடிய நிதி சார்ந்த சொத்துக்களாக வகைப்படுத்தப்படுகின்றன. ஆரம்ப இனங்காணலை அடுத்து, அவை நியாய விலைப் பெறுமானத்தில் அளவிடப்படுகின்றன. அவற்றிலுள்ள மாற்றங்கள் ஏனைய முழுமையான வருமானத்தில் இனங்காணப்பட்டு நியாய விலைப் பெறுமான ஒதுக்கத்திலுள்ள ஒப்புரவினுள் எடுத்துரைக்கப் படுகின்றன. ஒரு முதலீடு இனங்காணப்படாமல் விட்டுவிடப் படுகின்ற போது, ஏனைய முழுமையான வருமானத்திலுள்ள திரண்ட இலாபம் அல்லது நட்டம் இலாபத்திற்கு அல்லது நட்டத்திற்கு மாற்றப்படுகின்றது. எனினும், துல்லியமான ஒரு சந்தையில் குறித்தவொரு சந்தை விலையைக் கொண்டிருக்காத மற்றும் நியாய விலைப் பெறுமானம் நம்பத்தகுந்தளவில் அளவிட முடியாத ஒப்புரவு சாதனங்களிலுள்ள முதலீடுகள் தொடர்பில் ஒப்புரவு சாதனங்கள் ஆகுசெலவில் அளவிடப்படுகின்றன.

### (b) நிதி சார்ந்த பொறுப்புக்கள்

குழு விநியோகிக்கப்பட்ட பற்றுப் பிணைமுறிகளை அவை உருவாகிய திகதியில் அடிப்படை ரீதியில் இனங்காணுகின்றது. ஏனைய சகல நிதி சார்ந்த பொறுப்புக்களும் சாதனத்தின் ஒப்பந்த சார் ஏற்பாடுகளுக்கான தரப்பாக குழு மாறுகின்ற திகதியில் அடிப்படை ரீதியில் இனங்காணப்படுகின்றன.

குழு ஒரு நிதி சார்ந்த பொறுப்பை அதன் ஆக்கபூர்வமான கடப்பாடுகள் விடுவிக்கப்படும், இரத்துச்செய்யப்படும் அல்லது முடிவடையும் நேரத்தில் இனங்காணாமல் விட்டுவிடுகின்றது.

குழு பிரித்துப்பெறவியலாத நிதி சார்ந்த பொறுப்புக்களை ஏனைய நிதி சார்ந்த பொறுப்புக்கள் வகுதியில் வகைப் படுத்துகின்றது. அத்தகைய நிதி சார்ந்த பொறுப்புக்கள் ஆரம்பத்தில் நேரடியாக சேரக்கூடிய ஏதாவது கொடுக்கல் வாங்கல் ஆகுசெலவுகள் அடங்கலாக நியாய விலைப் பெறுமானத்தில் இனங்காணப்படுகின்றன. ஆரம்ப இனங்காணலையடுத்து, இந்த நிதி சார்ந்த பொறுப்புக்கள் கழிக்கப்பட்ட ஆகுசெலவில் மதிப்பிடப்படுகின்றன. கடன்கள், பற்றுக்கள், வர்த்தக மற்றும் ஏனைய கொடுமதிகள் என்பன ஏனைய நிதி சார்ந்த பொறுப்புக்களில் உள்ளடங்குகின்றன.

## 3.4 நட்டம்

### 3.4.1 பிரித்துப்பெறவியலாத நிதி சார்ந்த சொத்துக்கள்

இலாபத்தினூடாக அல்லது நட்டத்தினூடாக நியாய விலைப் பெறுமானத்தில் கொணரப்படாத நிதி சார்ந்த ஒரு சொத்து நட்டத்திற்கு தெளிவான சான்றிருக்கின்றதா என்பதை நிர்ணயித்துக்கொள்ளும் பொருட்டு அறிக்கையிடப்படும் ஒவ்வொரு திகதியிலும் மதிப்பிடப்படுகின்றது. தெளிவான சான்று சொத்தின் ஆரம்ப இனங்காணலின் பின்னரும் நட்ட நிகழ்வொன்று ஏற்பட்டுள்ளது என்பதையும் மற்றும் அந்த நட்ட நிகழ்வு நம்பத்தகுந்தளவில் மதிப்பிடக்கூடிய அந்த சொத்தின் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்களின் மீது பாதகமானவொரு தாக்கத்தைக் கொண்டிருந்தது என்பதையும் தெளிவாக சுட்டிக்காட்டுமாயின் அப்போது அத்தகைய நிதி சார்ந்த சொத்துக்களை நம்பத்தகுந்த ரீதியில் மதிப்பிடலாம்.

நிதி சார்ந்த சொத்துக்களுக்கு நட்டம் ஏற்பட்டிருக்கின்றது என்பதற்கான தெளிவான சான்றை குழு கருத்திற்கொள்ளாது என்ற நிபந்தனைகளின் பேரில் குழுவுக்கு வரவேண்டிய ஒரு தொகையை மீள்சீராக்குகின்ற ஒரு பற்றின் மூலம் வரும் இயல்புநிலையை அல்லது தவறுகையை, இல்லையெனில் ஒரு கடனாளி அல்லது கடன் வழங்குநர் திவால்நிலைக்கு உள்ளாகுவார் அல்லது ஒரு பிணைமுறிக்கான ஒரு துல்லியமான சந்தை காணப்படாமை என்பவற்றை சுட்டிக்காட்டும் சுட்டிகளையும் உள்ளடக்கியிருக்கும். அது தவிர, ஒரு ஒப்புரவுப் பிணைமுறியிலுள்ள ஒரு முதலீடு தொடர்பில், அதன் நியாய விலைப் பெறுமானத்திலுள்ள குறிப்பிடத்தக்க அல்லது நீடித்த ஒரு வீழ்ச்சி அதன் ஆகுசெலவுக்குக் குறைவாக இருக்கும் பட்சத்தில் அது நட்டத்தின் தெளிவான சான்றாகக் காணப்படும்.

### 3.4.2 நிதி சார்ந்த சொத்துக்கள்

குழு வருமதிகளுக்கான நட்டத்தின் சான்றை குறித்த சொத்து மட்டத்தில் கருத்திற்கொள்கின்றது. தனிப்பட்ட ரீதியான சகல முக்கியமான வருமதிகளும் விஷேட நட்டமாக மதிப்பிடப்படுகின்றன.

கழிக்கப்பட்ட ஆகுசெலவில் அளவிடப்படும் ஒரு நிதி சார்ந்த சொத்து தொடர்பான ஒரு நட்டம் அதன் கொணரப்படும் தொகைக்கும் சொத்தின் உண்மையான பயனுள்ள வட்டி வீதத்தில் தள்ளுபடி செய்யப்படும் எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்களின் மதிப்பிடப்பட்ட தற்போதைய பெறுமானத்திற்கும் இடையிலான வித்தியாசமாகக் கணிக்கப்படுகின்றது. நட்டங்கள் இலாபத்தில் அல்லது நட்டத்தில் இனங்காணப்பட்டு வருமதிகளுக்கு எதிரான ஒரு கொடுப்பனவுக் கணக்கில் பிரதிபலிக்கப்படுகின்றன. நட்டம் ஏற்பட்ட சொத்துக்கள் மீதான வட்டி தொடர்ந்தும் நெகிழாத தள்ளுபடியினூடாக இனங்காணப்படுதல் வேண்டும். அடுத்தடுத்து வரும் ஒரு நிகழ்வு நட்டத் தொகை குறைவடைவதற்கு காரணமாக அமைகின்ற போது, நட்டத்திலுள்ள குறைவு இலாபத்தினூடாக அல்லது நட்டத்தினூடாக மாற்றப்படுகின்றது. விற்பனைக்குக் கிடைக்கக்கூடிய முலீட்டுப் பிணைமுறிகள் மீதான நட்டங்கள் ஏனைய முழுமையான வருமானத்தில் இனங்காணப்பட்டுள்ள திரண்ட நட்டத்தை மாற்றுவதன் மூலம் இனங்காணப்பட்டு, இலாபத்திற்கு அல்லது நட்டத்திற்கு ஒப்புரவிலுள்ள நியாய விலை ஒதுக்கத்தில் முன்வைக்கப் படுகின்றன. ஏனைய முழுமையான வருமானத்திலிருந்து அகற்றப்படுகின்ற மற்றும் இலாபத்தில் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுகின்ற திரண்ட நட்டமே இலாபத்தில் அல்லது நட்டத்தில் முன்னர் இனங்காணப்பட்ட ஏதாவது குறைந்த நட்டம், தற்போதைய நியாய விலைப் பெறுமானம், ஏதாவது அடிப்படை மீள்கொடுப்பனவினதும் கழிவினதும் தேறிய கொள்முதல் செலவு என்பவற்றுக்கு இடையிலுள்ள வித்தியாசமாகும். நேரப் பெறுமானத்திற்கு சேரக்கூடிய நட்ட ஏற்பாடுகளிலுள்ள மாற்றங்கள் வட்டி வருமானத்தின் ஒரு ஆக்கக்கூறாக பிரதிபலிக்கப்படுகின்றன.

### 3.4.3 நிதி சாராத சொத்துக்கள்

பொருப்பதிவேடுகளும் பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களும் தவிர குழுவினது நிதி சாராத சொத்துக்களின் கொணரப்படும் தொகைகள் ஏதாவது நட்டத்திற்கான அறிகுறி இருக்கின்றதா என்பதை நிர்ணயித்துக்கொள்ளும் நிமித்தம் அறிக்கையிடப்படும் ஒவ்வொரு திகதியிலும் மீளாய்வு செய்யப்படுகின்றன. அத்தகைய ஏதாவது நட்ட அறிகுறி தென்படுமாயின், சொத்தின் அறவிடக்கூடிய தொகை மதிப்பிடப்படும்.

ஒரு சொத்தின் அல்லது அதன் காசு ஈட்டும் அலகின் அறவிடக்கூடிய தொகையே அதன் பாவனையிலுள்ள அதன் பெறுமானத்திலும் விற்பனைக்கான அதன் நியாய விலைப் பெறுமான குறைந்தளவான ஆகுசெலவுகளிலும் பெரிதாகக் காணப்படும். பாவனையிலுள்ள பெறுமானத்தை மதிப்பிடுவதில், மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்கள் சொத்துக்கான குறித்த பொறுப்பினதும் பணத்தின் காலப் பெறுமானத்தினதும் தற்போதைய சந்தை மதிப்பீடுகளைப் பிரதிபலிக்கும் முன்கூட்டிய வரித் தள்ளுபடி வீதத்தைப் பிரயோகித்து அவற்றின் தற்போதைய பெறுமானத்திற்குத் தள்ளுபடி செய்யப்படுகின்றன. நட்டம் தொடர்பில் சோதனையிடும் நோக்கத்திற்காக, சொத்துக்கள் ஏனைய சொத்துக்களின் அல்லது குழுவின் சொத்துக்களின் (□காசு ஈட்டும் அலகுகள்□) பாரியளவான சுயாதீனக் காசுப் பாய்ச்சல்களான தொடர் பாவனையிலிருந்து வரும் காசுப் பாய்ச்சல்களை உருவாக்குகின்ற சொத்துக்களின் சிறு பிரிவுக்கு ஒன்றாக வகைப்படுத்தப்படுகின்றன. ஒரு வியாபார இணைப்பில் பெற்றுக்கொள்ளப்படும் நன்மதிப்பு, நட்டம் தொடர்பில் சோதனையிடும் நோக்கத்திற்காக அந்த இணைப்பின் கூட்டிணைவுகளிலிருந்து நன்மை பயக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்ற காசு ஈட்டும் அலகுகளுக்கு ஒதுக்கப்படுகின்றது.

ஒரு சொத்தின் கொணரப்படும் தொகை அல்லது அதன் காசு ஈட்டும் அலகு அதன் மதிப்பிடப்பட்ட அறவிடக்கூடிய தொகையை விஞ்சினால் இனங்காணப்படுகின்றது. அத்தகைய நட்டங்கள் இலாபத்தில் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுகின்றன. காசு ஈட்டும் அலகுகள் தொடர்பில் இனங்காணப்படும் நட்டங்கள் முதலில் அந்த அலகுகளுக்கு அமைந்திருக்கும் ஏதாவது கொணரப்படும் நன்மதிப்புத் தொகையைக் குறைப்பதற்கும் அதன் பின்னர் ஒரு விகித அடிப்படையில் பிரிவிலுள்ள ஏனைய சொத்துக்களின் (குழுப் பிரிவுகள்) கொணரப்படும் தொகையைக் குறைப்பதற்கும் ஒதுக்கப்படுகின்றன.

நன்மதிப்பு தொடர்பான ஒரு நட்டம் மாற்றப்படுவதில்லை. ஏனைய சொத்துக்கள் தொடர்பில், முன்னைய காலத்தில் இனங்காணப்பட்ட நட்டங்கள் அத்தகைய நட்டங்கள் குறைந்துள்ளன அல்லது ஒருபோதுமில்லை என்றளவுக்கு ஏதாவது சுட்டிகள் தொடர்பில் ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் மதிப்பிடப்படுகின்றன. ஒரு நட்டம், அறவிடக்கூடிய தொகையை நிர்ணயிப்பதற்கு பயன்படுத்தப்படும் மதிப்பீடுகளில் ஒரு மாற்றம் இருந்துள்ளது என்றால் மாத்திரம் மாற்றப்படும். சொத்தின் கொணரப்படும் தொகை அந்தக் கொணரப்படும் தொகை நிர்ணயிக்கப்பட்டிருக்கக்கூடும் எனும் தேறிய தேய்மான அல்லது கழிவுத் தொகையை விஞ்சும் அளவுக்கு மாத்திரம் மாற்றப்படுகின்றது. இல்லையெனில் நட்டம் இனங்காணப்பட்டிருக்கும்.

## 3.5 சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள்

### 3.5.1 இனங்காணலும் அளவீடும்

சொத்துக்களுடன் இணைந்த எதிர்கால பொருளாதார நன்மைகள் அநேகமாக குழுவுக்கு செல்லக்கூடியதாகவும் சொத்துக்களின் ஆகுசெலவுகள் நம்பத்தகுந்தளவில் மதிப்பிடக்கூடியதாகவும் இருக்குமாயின் சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள் என்பன இனங்காணப்படுகின்றன.

சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள் என்பன ஆகுசெலவில் ∴குறைந்த திரண்ட தேய்மான மீள்மதிப்பீட்டில், திரண்ட நட்டத்தில் எடுத்துரைக்கப்படுகின்றன.

### 3.5.2 ப்ரீஹோல்ட் சொத்துக்கள்

ஒவ்வொரு சொத்தினதும், பொறித்தொகுதியினதும், உபகரணத்தினதும் ஆகுசெலவு அதன் கொள்வனவு விலையையும், அதன் எதிர்பார்க்கப்பட்ட பாவனையின் நிமித்தம் தொழில்படும் நிலைக்குக் கொண்டுவருவதற்கு நேரடியாக ஏற்பட்ட ஏதாவது செலவையும் உள்ளடக்கியிருக்கும். சுயமாக நிர்மாணம் பெற்ற சொத்துக்களின் ஆகுசெலவு மூலப்பொருட்களின் செலவையும், நேரடித் தொழிலாளர் செலவையும், அதன் எதிர்பார்க்கப்பட்ட பாவனையின் நிமித்தம் அதனைத் தொழிற்படும் நிலைக்குக் கொண்டுவருதில் ஏற்பட்ட ஏதாவது பிற நேரடியான செலவுகளையும் உள்ளடக்கியிருக்கும். சொத்துக்களும் பொருட்களும் இருக்கின்ற இடத்தில் அவற்றை துண்டுதுண்டுகளாக கழற்றல், அகற்றல், மீள்தாபித்தல், முதலியவற்றுடன் தொடர்புடைய ஆகுசெலவும் தகுதிவாய்ந்த சொத்துக்களாக மாறச்செய்வதன் பேரிலான இரவல் ஆகுசெலவும் இந்த ஆகுசெலவில் உள்ளடங்கும்.

ஒவ்வொரு சொத்தினதும், பொறித்தொகுதியினதும், உபகரணத்தினதும் பாகங்கள் வித்தியாசமான பயனுள்ள பாவனை காலத்தைக் கொண்டிருக்கின்ற பொது அத்தகைய பாகங்கள் அத்தகைய சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் தனித்தனியான பொருட்களாக (பெரும் பாகம்) கணக்கீடு செய்யப்படுகின்றன.

### 3.5.3 குத்தகைக்கு விடப்பட்ட சொத்துக்கள்

குழு பொருண்மையளவில் சகல பொறுப்புக்களையும் உரித்துடமைகளையும் பொறுப்பேற்கும் அடிப்படையிலான குத்தகைகள் நிதி சார்ந்த குத்தகைகளாக வகுக்கப்படுகின்றன. ஆரம்ப இனங்காணலின் பேரில், குத்தகைக்கு விடப்பட்ட சொத்துக்கள் அளவிடப்பட்டு ஆகக்குறைந்த குத்தகைக் கொடுப்பனவுகளின் தற்போதைய பெறுமானத்திற்கும் அதன் நியாய விலைப் பெறுமானத்திற்கும் குறைந்த பெறுமானத்திற்கு சமனான ஒரு தொகையில் மூலதனமாக்கப் படுகின்றன. ஆரம்ப இனங்காணலைத் தொடர்ந்து, அந்தச் சொத்து அதற்கு ஏற்புடைய கணக்கீட்டுக் கொள்கைக்கு இணங்க கணக்கீடு செய்யப்படுகின்றது.

### 3.5.4 அடுத்தடுத்து வரும் ஆகுசெலவுகள்

ஒவ்வொரு சொத்தினதும், பொறித்தொகுதியினதும், உபகரணத்தினதும் பாகத்தை மீளிடும் ஆகுசெலவு நம்பத்தகுந்தளவில் அளவிடக்கூடிய அதன் ஆகுசெலவுக்கும் குழுவுக்கும் அந்தப் பாகம் செல்வதினுள் அநேகமாக எதிர்காலப் பொருளாதார நன்மைகள் நிலைத்திருக்குமாயின் அதன் கொணரப்படும் தொகையில் இனங்காணப்படுகின்றது. மீளிடப்பட்ட பாகத்தின் கொணரப்படும் தொகை இனங்காணாமல் விட்டுவிடப்படுகின்றது. சொத்துக்களினதும், பொறித்தொகுதிகளினதும், உபகரணங்களினலும் பராமரிப்பு□ககான நாளாந்த செலவுகள் ஏற்பட்ட இலாபத்தில் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுகின்றன.

### 3.5.5 இனங்காணாது விட்டுவிடுதல்

ஒவ்வொரு சொத்தினதும், பொறித்தொகுதியினதும், உபகரணத்தினதும் கொணரப்படும் தொகை அதன் பாவனையிலிருந்து அல்லது அகற்றலிலிருந்து மேலும் பொருளாதார நன்மைகளை எதிர்பார்க்க இயலாத போது அல்லது அது அகற்றப்படும் போது இனங்காணாமல் விட்டுவிடப்படுகின்றது. இனங்காணாமல் விட்டுவிடுவதன் பேரிலான இலாபங்கள் அல்லது நட்டங்கள் ஏனைய வருமானத்தினுள் இலாபத்தில் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுகின்றன.

### 3.5.6 தேய்மானம்

தேய்மானம் சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணம் ஆகியவற்றின் ஒவ்வொரு பாகத்தினதும் மதிப்பிடப்பட்ட பயனுள்ள பாவனை காலத்தின் அடிப்படையில், இலாபத்தில் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுகின்றது. குத்தகைக்கு விடப்பட்ட ஆதனங்கள் குத்தகை காலம் முடிவில் குழு அவற்றின் உரித்துடமையைப் பெறும் நியாயமான நிச்சயத்தில் அவற்றின் பயனுள்ள பாவனை காலம் மற்றும் குறுகிய குத்தகை காலம் ஆகியவற்றின் அடிப்படையில் தேய்மானம் கணிக்கப்படுகின்றது. ஒரு சொத்தின் தேய்மானம் அது பாவனைக்காகக் கிடைக்கச்செய்யப்படும் போது ஆரம்பமாகும். அதேபோன்று ஒரு சொத்தின் தேய்மானம் அந்தச் சொத்து இனங்காணப்படாத நாளிலும் மற்றும் விற்பனைக்காக (அல்லது குழு விற்பனைக்காக வகைப்படுத்தி அகற்றலுக்காக ஒதுக்கப்படுதல் அடங்கலாக) வகைப்படுத்தப்பட்டு ஒதுக்கப்படும் நாளுக்கு முன்னைய நாளிலும் முடிவுறும். ப்ரீஹோல்ட் காணிகள் மற்றும் நிகழும் மூலதனப் பணிகள் என்பன தொடர்பில் தேற்மானத்திற்கான ஏற்பாடு மேற்கொள்ளப்படுவதில்லை.

| சொத்துக்கள் வகுதி | பயனுள்ள பாவனை காலம் |
|---|---|
| ப்ரீஹோல்ட் கட்டிடங்கள் | 13-14 ஆண்டுகள் |
| அலுவலக உபகரணங்கள், தளபாடங்கள், பொருத்துக்கள் | 5-8 ஆண்டுகள் |
| நிர்மாண கருவிசாதனங்கள் மற்றும் உபகரணங்கள் | 4-5 ஆண்டுகள் |
| வாகனங்கள் | 4 ஆண்டுகள் |
| பொறித்தொகுதிகள், இயந்திராதிகள் | 5 ஆண்டுகள் |
| கொள்கலன்கள் | 5 ஆண்டுகள் |
| கணனிகள் | 5 ஆண்டுகள் |
| வாசிகசாலைப் புத்தகங்கள் | 8 ஆண்டுகள் |

மீதமுள்ள மதிப்பு மற்றும் ஒரு சொத்துக்கான பயனுள்ள வாழ்க்கை ஒவ்வொரு நிதியாண்டில் குறைந்தபட்சம் மதிப்பாய்வு செய்யப்படும் மற்றும் எதிர்பார்ப்புகள் முந்தைய மதிப்பீட்டிற்கு மாறுபடும் என்றால், மாற்றங்கள் **LKAS** 08 கணக்குக் கொள்கைக்கு ஏற்ப கணக்கியல் மதிப்பீட்டில் மாற்றாக கணக்கிடப்படும்.

### 3.5.7 நிகழும் மூலதனப் பணிகள்

அறிக்கையிடப்படும் திகதிற்கு நிறைவு செய்யப்படாத குறித்த ஆண்டு காலப் பகுதியில் ஏற்பட்ட மூலதனச் செலவுகள் நிகழும் மூலதனப் பணிகளாகக் காட்டப்படுகின்றன. இதே நேரம் குறித்த ஆண்டு காலப் பகுதியில் நிறைவு செய்யப்பட்டு பாவனைக்குக் கிடைக்கச் செய்யப்பட்டுள்ள மூலதனச் சொத்துக்கள் பொறித்தொகுதிகளுக்கும், உபகரணங்களுக்கும், சொத்துக்களுக்கும் மாற்றப்பட்டுள்ளன.

## 3.6 பொருட்பதிவேடுகள்

பொருட்பதிவேடுகள் குறைந்த ஆகுசெலவிலும் மாறக்கூடிய பெறுமானத்திலும் மதிப்பிடப்படுகின்றன. ஆகுசெலவு அளவிடப்பட்ட சராசரி ஆகுசெலவின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகின்றது. பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கும் அவற்றை ஏற்கெனவேயிருந்த இடங்களுக்கும் முன்பிருந்த நிலைகளுக்கும் கொண்டுவருவதற்கும் ஏற்பட்ட செலவுகள் இதில் உள்ளடங்கியிருக்கும்.

### 3.6.1 நிகழும் பணி

நிகழும் நிர்மாண ஒப்பந்தங்கள் நிர்மாணப் பணி நிறைவேற்றப்படும் திகதிற்கு வாடிக்கையாளர்களிடமிருந்து சேகரிப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படும் செலவுப்பட்டியல்படுத்தப்படாத முழுமொத்தத் தொகையைப் பிரதிபலிக்கும். இது குறைந்த முன்னேற்றப் பட்டியல்களினதும் இனங்காணப்பட்ட நட்டங்களினதும் அடிப்படையில் குறித்த திகதிற்கு இனங்காணப்படும் இலாபம் அடங்கலாக ஆகுசெலவில் அளவிடப்படுகின்றது. ஆகுசெலவு விஷேட கருத்திட்டங்களுடன் நேரடியாக சம்பந்தப்படும் சகல செலவினங்களையும், வழமையான இயக்கச்செயற்பாட்டு அகற்றலின் அடிப்படையில் குழுவினது ஒப்பந்தம் சார்ந்த செயற்பாடுகளில் நிலையான வித்தியாசமான மேன்தலைகளின் ஒதுக்கத்தையும் உள்ளடக்கியிருக்கும். நிகழும் நிர்மாண ஒப்பந்தங்கள் முன்னேற்ற செலவுப்பட்டியல்களை விஞ்சும் இனங்காணப்பட்ட இலாபங்கள் அடங்கலாக ஏற்பட்ட ஆகுசெலவில் சகல ஒப்பந்தங்களுக்கும் நிதி நிலைக் கூற்றில் வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகளின் பாகமாக எடுத்துரைக்கப்படுகின்றன. முன்னேற்ற செலவுப்பட்டியல்கள் இனங்காணப்பட்ட இலாபங்களையும் ஏற்பட்ட ஆகுசெலவுகளையும் விஞ்சினால், வித்தியாசம் நிதி நிலைக் கூற்றில் வர்த்தக மற்றும் ஏனைய கொடுமதிகளின் பாகமாக எடுத்துரைக்கப்படுகின்றது.

## 3.7 ஊழியர் நன்மைகள்

### (a) திட்டவட்டமான பங்களிப்புத் திட்டங்கள்

ஒரு திட்டவட்டமான பங்களிப்புத் திட்டம் என்பது தொழிலுக்குப் பிற்பட்டகால நன்மைகள் திட்டமாகும். இந்தத் திட்டத்தின் கீழ் பங்களிப்புகள் தனியான ஒரு நிதியத்திற்கு மேற்கொள்ளப்படுகின்றன. ஆகையால், நிறுவனம் மேலும் மேலதிகத் தொகைகளைச் செலுத்துவதற்கு சட்டபூர்வமான அல்லது ஆக்கபூர்வமான ஒரு பொறுப்பைக் கொண்டிருக்காது. திட்டவட்டமான பங்களிப்புத் திட்டத்திற்குரிய பங்களிப்புகளுக்கான பொறுப்புக்கள் ஊழியர்களினால் வழங்கப்படும் சேவை காலப் பகுதியில் இலாபத்தின் அல்லது நட்டத்தின் அடிப்படையில் ஊழியர்கள் நன்மை சார்ந்த செலவாக இனங்காணப்படுகின்றன. முன்கூட்டி செலுத்தப்பட்ட பங்களிப்புகள் எதிர்காலக் கொடுப்பனவுகளில் கிடைக்கக்கூடிய ஒரு மீளளிக்கத்தக்கு காசு அல்லது ஒரு குறைப்பு என்ற அளவுக்கு ஒரு சொத்தாக இனங்காணப்படுகின்றன.

### திட்டவட்டமான பங்களிப்புத் திட்டங்கள் - ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம்

ஊழியர் சேமலாப நிதிப் பங்களிப்புக்கும் ஊழியர் நம்பிக்கை நிதிப் பங்களிப்புக்கும் தகுதியுடைய சகல ஊழியர்களும் அந்தந்த நியதிச்சட்டங்களினதும் ஒழுங்குவிதிகளினதும் உரிய பங்களிப்பு நிதியங்களினால் அணவப்பட்டுள்ளனர். குழு ஊழியர்களின் மொத்த சம்பாத்தியத்தின் 12 % வீதத்தை ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் 3மு வீதத்தை ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் பங்களிப்புச் செய்கின்றது.

### (b) திட்டவட்டமான ஓய்வூதிய நன்மைகள் திட்டம் - பணிக்கொடை

அறிக்கையிடப்படும் திகதியில் திட்டவட்டமான ஓய்வூதிய நன்மைகள் திட்டத்தின் தற்போதைய பெறுமானமே திட்டவட்டமான ஓய்வூதிய நன்மைகள் திட்டம் தொடர்பில் நிதி நிலைக் கூற்றில் இனங்காணப்படும் பொறுப்பாகும். திட்டவட்டமான ஓய்வூதிய நன்மைகள் கடப்பாடு "ஊழியர் நன்மைகள்" என்ற **LKAS** 19 நியமத்தினால் சிபாரிசு செய்யப்பட்டவாறு கருத்திட்ட அலகுக் கடன் (க.அ.க.) முறையியலைப் பிரயோகித்து சுயாதீனக் கணிப்பாளர்களினால் வருடாந்த ரீதியில் கணிப்பிடப்படுகின்றது. திட்டவட்டமான ஓய்வூதிய நன்மைகள் திட்டத்திற்கான அத்தகைய கணிப்பு இலாபங்கள் அல்லது நட்டங்கள் அவை ஏற்படும் முழுமையான காலத்தில் ஏனைய முழுமையான வருமானத்தில் இனங்காணப்படுகின்றன.

குழு ஆகக்குறைந்தது மூன்று வருடங்களுக்கு ஒரு தடவையாவது உண்மையான பெறுமானத்தை மதிப்பிடுவதற்கு எதிர்பார்க்கின்றது.

பணிக்கொடைப் பொறுப்பு திட்டவட்டமான ஓய்வூதிய நன்மைக் கடப்பாட்டின் தற்போதைய பெறுமானத்தை அடைவதற்குத் தேவைப்படுத்தப்படும் எடுகோள்களைக் கருத்திற்கொண்டு கருத்திட்ட அலகுக் கடன் (க.அ.க.) முறையியலைப் பிரயோகித்து பெறுமானம் கணிக்கப்படுகின்றது.

எனினும், 1983 இன் 12 ஆம் இலக்கப் பணிக்கொடைச் சட்டத்திற்கு இணங்க, தொடர்ச்சியான 5 வருட சேவைப் பூர்த்தியின் பின்னரே ஊழியர் ஒருவருக்கான பணிக்கொடைக் கொடுப்பனவு தொடர்பான பொறுப்பு எழுகின்றது.

## 3.8 ஏற்பாடுகள்

கடந்தவொரு நிகழ்வின் காரணமாக குழு அநேகமாக பொறுப்பைத் தீர்ப்பனவு செய்வதற்குத் தேவைப்படுத்தப்படும் பொருளாதார நன்மையின் ஒரு வெளிப் பாய்ச்சலாக விளங்குகின்றதும் நம்பத்தகுந்தளவில் அளவிடக்கூடியதுமான ஒரு நிகழ்கால சட்ட அல்லது ஆக்கபூர்வமான கடப்பாட்டைக் கொண்டிருந்தால், ஏற்பாடுகள் இனங்காணப்படுகின்றன. ஏற்பாடுகளும் பொறுப்புக்களும் நிதி நிலைக் கூற்றில் இனங்காணப்படுகின்றன. ஏற்பாடுகள் பொறுப்புக்கான குறித்த கடப்பாட்டினதும் பணத்தின் நேரப் பெறுமானத்தினதும் நடைமுறை சந்தை மதிப்பீட்டைப் பிரதிபலிக்கும் முன்கூடிய வரி வீதத்தில் எதிர்பார்க்கப்படும் எதிர்காலக் காசுப் பாய்ச்சல்களைக் கழிப்பதன் மூலம் நிர்ணயிக்கப்படுகின்றன. நெகிழ்தன்மை வாய்ந்த தள்ளுபடி நிதி சார்ந்த ஆகுசெலவாக இனங்காணப்படுகின்றது.

## 3.9 முழுமையான வருமானக் கூற்று

### 3.9.1 வருமானம்

### (a) நிர்மாண ஒப்பந்தங்கள்

### ஒப்பந்த வருமான அளவீட்டிற்கு நியம தொழில்நுட்பக் குழுவின் (நி.தொ.கு.) அங்கீகாரத்தை தேவைப்படுத்தும் ஒப்பந்தங்கள்

நி.தொ.கு. அங்கீகாரமின்றி கருத்திட்டங்கள் நிறைவு பெறாதிருக்கின்ற போது, அநேகமாக வருமானத்திற்கு பயனாகவும் நம்பந்தகுந்தளவில் அளவிடக்கூடியதாகவும் இருக்கும் அளவுக்கு, ஒப்பந்தப் பணி, கோரல்கள் மற்றும் ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் என்பவற்றின் ஏதாவது வித்தியாசங்கள் அடங்கலாக ஒப்பந்தத்தில் உடன்பட்ட ஆரம்பத் தொகையின் 90% வீதத்திற்கு மாத்திரம் வருமானம் இனங்காணப்படுகின்றது. நிர்மாண வருமானம் கிடைத்தவுடன் நி.தொ.கு. அங்கீகரித்த ஒப்பந்த வருமானத்திற்கு மீளத்திருத்தப்படுகின்றது.

### ஏனைய ஒப்பந்தங்கள்

இது வருவாயை விளைவிக்கும் என்று நம்பக்கூடிய அளவுக்கு நம்பகமான அளவைக் கணக்கிட முடியும் மற்றும் ஒப்பந்த வருவாயானது **STC** அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்த வருவாய்க்கு திருப்தி அளிக்கப்படும் என்று கருதப்படுகிறது.

ஒரு நிர்மாண ஒப்பந்தத்தின் பயன் நம்பத்தகுந்தளவில் அளவிடக்கூடியதாக இருக்கும் போது, ஒப்பந்த வருமானம் அந்த ஒப்பந்தத்தின் நிறைவுக் கட்டத்திற்கான விகித அடிப்படையில், இலாபத்தில் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுகின்றது.

மதிப்பிடப்பட்ட மொத்த ஆகுசெலவுகளை ஏற்கும் திகதிற்கு நிறைவேற்றப்படும் பணிகளுக்கான ஏற்படும் ஒப்பந்த ஆகுசெலவு விகிதத்திற்கான குறிப்பைக் கொண்டு, நிறைவுக் கட்டம் மதிப்பிடப்படுகின்றது. நிர்மாண ஒப்பந்தத்தின் பலன்கள் நம்பத்தகுந்தளவில் மதிப்பிடப்பட முடியாதுள்ள போது, அநேகமாக மீளறவிடக்கூடிய ஏற்படும் ஒப்பந்த ஆகுசெலவுகளின் அளவுக்கு மாத்திரம் நிர்மாண வருமானம் இனங்காணப்படுகின்றது.

#### (b) உசாதுணை சார்ந்த சேவைகள்

இந்த பணியகம் பொறியியல் கருத்திட்டங்களுடன் சம்பந்தமான உசாதுணை சேவைகளிலிருந்து வருமானத்தை ஈட்டுகின்றது. உசாதுணை சேவைகளிலிருந்து வரும் வருமானம் உசாதுணை ஒப்பந்தங்களின் தன்மை, நோக்கெல்லை, பெறுமானம் மற்றும் காலம் என்பவற்றுக்கு இணங்க கீழ்காணும் விதத்தில் இனங்காணப்படுகின்றது.

#### 1. நிறைவு முறையியல் கட்டம்

உசாதுணை சேவைகளிலிருந்து வரும் வருமானம் அறிக்கை இடப்படும் திகதியிலுள்ள கொடுக்கல்வாங்கல் கட்டத்திற்கு உரிய விகிதத்தில் இனங்காணப்படுகின்றது. நிறைவு கட்டம் மேற்கொள்ளப்பட்ட வேலையின் மதிப்பீட்டிற்கான குறிப்பு மூலம் மதிப்பிடப்படும்.

#### 2. செலவுப்பட்டியல் முறையியல்

ஒரு ஒப்பந்தத்தின் நிறைவு கட்டத்திற்கான உசாதுணை சேவைகளிலிருந்து வரும் வருமானம் நம்பத்தகுந்தளவில் நிர்ணயிக்க முடியாத சந்தர்ப்பத்தில் அது செலவுப்பட்டியல் முறையியலின் மூலம் இனங்காணப்படும்.

#### 3. சேகரிப்பு முறையியல்

“பராமரிப்பு கோரல்கள்” எனும் கருத்திட்டங்களிலிருந்து வரும் வருமானம் காசு சேகரிப்பு முறையியல் அடிப்படையில் இனங்காணப்படும்.

### 3.9.2 வட்டி வருமானம்

விற்பனைக்காக வகைப்படுத்தப்பட்டுக் கிடைக்கக்செய்யக்கூடிய நிதி சார்ந்த சொத்துக்களுடன் வரும் வட்டியிலும் கழிக்கப்பட்ட ஆகுசெலவிலும் அளவிடப்படும் நிதி சார்ந்த சகல சொத்துக்களுக்குமான வட்டி வருமானம் அல்லது செலவினம் நிதி சார்ந்த சொத்தின் அல்லது பொறுப்பின் கொணரப்படும் தேறிய தொகைக்குப் பொருத்தமானவிடத்து நிதி சார்நத சாதனத்தின் எதிர்பார்க்கப்பட்ட பாவனை காலத்தினூடாக அல்லது குறுகியவொரு காலப் பகுதியினூடாக மதிப்பிடப்படும் எதிர்காலக் காசுக் கொடுப்பனவுகளை அல்லது பெறுகைகளை சரியான விதத்தில் தள்ளுபடிசெய்வதற்கு உதவும் வீதமாகிய பயன்தகு வட்டி வீதத்தை (ப.வ.வீ.) பிரயோகித்துப் பதியப்படுகின்றது. வட்டி வருமானம் முழுமையான வருமானக் கூற்றிலுள்ள நிதிக் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### 3.9.3 பங்குலாப வருமானம்

பங்குலாப வருமானம் கொடுப்பனவைப் பெறுவதற்கு பங்குதாரரின் உரிமை தாபிப்புப் பெறுகின்ற நேரத்தில் கணிப்பிடப்படுகின்றது.

### 3.9.4 ஏனைய வருமானம்

சொத்துக்களினதும், பொறித்தொகுதிகளினதும், உபகரணங்களினதும் அகற்றலின் மூலம் வரும் இலாபங்கள் அல்லது எற்படும் நட்டங்கள் அந்தச் சொத்துக்களின் அகற்றல், கொணரப்படும் பெறுமானம் மற்றும் சம்பந்தப்பட்ட செலவுகள் என்பன கழிக்கப்பட்ட பின்னர் இனங்காணப்படுகின்றன.

வெளிநாட்டு நாணய இலாபங்களும் நட்டங்களும் ஒரு தேறிய அடிப்படையில் அறிக்கையிடப்படுகின்றன.

### 3.9.5 செலவின இனங்காணல்

#### (a) நிர்மாண மற்றும் உசாதுணை ஆகுசெலவுகள்

ஒப்பந்தம் சார்ந்த செலவினங்கள் அவை எதிர்கால ஒப்பந்த செயற்பாட்டுடன் சம்பந்தப்பட்ட சொத்தாக உருவாகாத வரையில் ஏற்பட்ட செலவினங்களாக இனங்காணப்படுகின்றன. ஏற்பட்ட நட்டங்கள் நிர்மாண ஒப்பந்தங்களுடன் சம்பந்தப்பட்ட மொத்த ஆகுசெலவு அநேகமாக அதன் வருமானத்தை விஞ்சுகின்ற போது ஒரு செலவினமாக இனங்காணப்படுகின்றன.

#### (b) ஏனைய செலவுகள்

வினைத்திறன் வாய்ந்த விதத்தில் வியாபார நடவடிக்கைகளை நிருவகிப்பதிலும், சொத்துக்களையும், பொறித்தொகுதிகளையும் உபகரணங்களையும் பேணிப்பராமரிப்பதிலும் ஏற்படும் சகல செலவினங்களும் குறித்த ஆண்டிற்கான இலாபத்தில் வரும் வருமானத்திற்கு கணக்குக் காட்டப்பட்டுள்ளன.

### 3.9.6 வரி விதிப்பு

#### (a) நடைமுறை வரிகள்

நடைமுறை காலத்திற்கும் முன்னைய காலங்களுக்குமான நடைமுறை வருமான வரிப் பொறுப்புக்கள் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு செலுத்தப்படுதல் அல்லது அறவிடப்படுதல் வேண்டும் என்ற தொகையில் அளவிடப்படுகின்றன. அந்தத் தொகையைக் கணிப்பிடுவதற்குப் பிரயோகிக்கப்படும் வரி வீதங்களும் சட்டங்களும் அறிக்கையிடப்படும் திகதியளவில் பொருண்மையாக சட்டமாக்கப்படும் அல்லது சட்டமாக்கப் பட்டிருக்கின்ற அத்தகைய சட்டங்களாகவும் வீதங்களாகவும் இருக்கும்.

வருமான வரிக்கான ஏற்பாடு நிதிக் கூற்றுக்களில் அறிக்கையிடப்பட்ட செலினவினங்களினதும் வருமானத்தினதும் அடிப்படைகளில் அமைந்திருக்கும் என்பதுடன் உள்நாட்டு இறைவரிச் சட்டத்திற்கு இணங்க கணிப்பிடவும் படுகின்றது.

உரிய விபரங்கள் நிதிக் கூற்றுக்களுக்கான அந்தந்தக் குறிப்புகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

### (b) பிற்போடப்பட்ட வரி

பிற்போடப்பட்ட வரி நிதி சார்ந்த அறிக்கையிடும் நோக்கங்களுக்கான சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் கொணரப்படும் தொகைகளுக்கும் வரி விதிப்பு நோக்கங்களுக்கான தொகைகளுக்கும் இடையில் காணப்படும் தற்காலிக வித்தியாசங்கள் தொடர்பில் இனங்காணப்படுகின்றது. பிற்போடப்பட்ட வரி பின்வரும் விடயங்களின் நிமித்தம் இனங்காணப்படுவதில்லை.

- கணக்கீட்டை அல்லது வரி விதிக்கக் கூடிய இலாபத்தை அல்லது நட்டத்தைப் பாதிக்காத ஒரு வியாபாரத் தொடர்பற்ற ஒரு கொடுக்கல்வாங்கலிலுள்ள சொத்துக்களின் அல்லது பொறுப்புக்களின் அடிப்படை இனங்காணலின் பேரிலான தற்காலிக வித்தியாசங்கள்

- எதிர்கூவு கூறக்கக்கூடிய எதிர்காலத்தில் அநேகமாக ஒதுக்கம் பெறாத அளவுக்கு துணை நிறுவனங்களிலும் கூட்டாகக் கட்டுப்பாடுடைய தாபனங்களிலும் காணப்படும் முதலீடுகளுடன் சம்பந்தப்பட்ட தற்காலிக வித்தியாசங்கள், மற்றும்

- நன்மதிப்பின் அடிப்படை இனங்காணலின் பேரில் எழுகின்ற வரி விதிக்கக்கூடிய தற்காலிக வித்தியாசங்கள்

பிற்போடப்பட்ட வரி அறிக்கையிடப்படும் திகதியளவில் பொருண்மையாக சட்டமாக்கப்படும் அல்லது சட்டமாக்கப்பட்டுள்ள சட்டங்களின் அடிப்படையில் தற்காலிக வித்தியாசங்கள் ஒதுக்கத்திற்குப் பிரயோகிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் வரி வீதங்களில் அளவிடப்படுகின்றது.

## 4 சாதாரணப் பங்கு மூலதனம்

சாதாரணப் பங்குகள் ஒப்புரவாக வகைப்படுத்தப்படுகின்றன. சாதாரண பங்குகளின் விநியோகத்திற்கு நேரடியாக சேரும் அதிகரிக்கும் ஆகுசெலவுகள் ஏதாவதொரு வரிப் பயன்களின் ஒப்புரவிலிருந்து வரும் ஒரு குறைப்பாக இனங்காணப்படுகின்றன.

## 5 தொடர்ந்தும் இயங்கக்கூடிய தன்மை

முகாமைத்துவம் தொடர்ந்தும் தனது நிறுவனம் இயங்கக்கூடிய சாத்தியம் பற்றிய ஒரு மதிப்பாய்வை மேற்கொண்டுள்ளது. எதிர்காலத்தில் தனது வியாபார நடவடிக்கைகளை தொடர்ந்தும் மேற்கொண்டு செல்வதற்கு தன்னிடம் போதிய வளங்கள் உண்டு என திருப்திகொள்கின்றது. மேலும், குழு தொடர்ந்தும் இயங்கக் கூடிய தனது ஆற்றல் மீது கணிசமானளவு சந்தேகங்களை ஏற்படுத்தலாம் எனும் ஏதாவது பொருண்மையான நிச்சயமற்ற தன்மைகள் பற்றி தெரியாது. ஆகையால், நிதிக் கூற்றுக்கள் தொடர் அடிப்படையில் தயாரிக்கப் படுகின்றன.

## 6 சம்பந்தப்பட்ட தரப்பு கொடுக்கல்வாங்கல்கள்

ஒரு விலை மாற்றம் நிகழ்ந்திருக்கின்றதா என்பது பாராமல், ஒரு தரப்பு மற்றைய தரப்பின் நிதி மற்றும் இயக்க சார் கொள்கைகள் ∴ தீர்மானங்கள் மீது கட்டுப்பாட்டை கொண்டிருப்பதற்கு அல்லது கணிசமான செல்வாக்கை பிரயோகிப்பதற்கு ஒரு தரப்புக்கு இருக்கின்ற ஆற்றலிலுள்ள கொடுக்கல்வாங்கல்கள் வெளிப்படுத்துகை மேற்கொள்ளப்பட்டுள்ளது. உரிய விபரங்கள் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பு 27 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

## 7 காசுப்பாய்ச்சல்கள் பற்றிய கூற்று

காசுப் பாய்ச்சல்கள் பற்றிய கூற்று இலங்கைக் கணக்கீட்டு நியமம் **LKAS** 7 (காசுப் பாய்ச்சல்கள் பற்றிய கூற்று) நேரடி முறையியலைப் பிரயோகித்துத் தயாரிக்கப்பட்டுள்ளது.

## 8 அறிக்கையிடப்படும் திகதிற்கு பின்னர் நிகழும் சம்பவங்கள்

அறிக்கையிடப்படும் திகதிற்கு பின்னர் நிகழ்கின்ற அந்த சம்பவங்கள் அனுகூலமாகவும் அனுகூலமற்றதாகவும் அமையலாம். இவை பிரச்சினையின் நிமித்தம் நிதிக் கூற்றுக்கள் அதிகாரமளிக்கப்படும் திகதிற்கும் அறிக்கையிடப்படும் திகதி இறுதிக்கும் இடையில் நிகழ்கின்றன.

அறிக்கையிடப்படும் காலத்தின் பின்னர் நிகழ்கின்ற சம்பவங்களின் பொருண்மை கருத்திற்கொள்ளப்பட்டு, தேவையான போது நிதிக் கூற்றுக்களில் பொருத்தமான சீராக்கல்கள் அல்லது வெளிப்படுத்துகைகள் மேற்கொள்ளப் படுகின்றன.

## 9 வெளியிடப்பட்ட ஆனால் அறிக்கையிடப்படும் திகதியில் செயல்வலுப்பெறாத புதிய கணக்கீட்டு நியமங்கள்

வெளியிடப்பட்ட நியமங்களும் அவற்றின் விளக்கங்களும் கீழே வெளிப்படுத்தப்பட்டுள்ள கம்பனியின் நிதிக் கூற்றுக்களின் வெளியீட்டுத் திகதி வரை இன்னும் செயல்வலுப்பெறவில்லை. இந்த நியமங்கள் செயல்வலுப் பெறும் போது எற்புடையதாக இருந்தால் அவற்றைப் பின்பற்றுவதற்கு குழு எதிர்பார்க்கின்றது.

### (a) நிதி சார்ந்த சொத்துக்கள் சாதனங்கள் - நியமம் **SLFRS** 09

நியமம் **SLFRS** 9 வெளியிடப்பட்டது போல் நியமம் **LKAS** 39 இல் விவரிக்கப்பட்டவாறு நிதி சார்ந்த சொத்துக்களினதும் மற்றும் பொறுப்புக்களினதும் அளவுக்கும் வகைப்படுத்தலுக்கும் ஏற்புடைய நியமம் LKAS 39 இன் பிரதியீட்டைப் பிரதிபலிக்கின்றது. இந்த நியமம் 2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆம் திகதியில் அல்லது அதன் பின்னர் ஆரம்பமாகும் ஆண்டு காலப் பகுதிகளுக்கு செயல்வலுப்பெற்றிருக்கும். நியமம் **SLFRS** 9 ஐ பின்பற்றுவதானது கம்பனியினதும் குழுவினதும் நிதி சார்ந்த சொத்துக்களினதும் சாதனங்களினதும் அளவிலும் வகைப்படுத்தலிலும் தாக்கத்தைக் கொண்டிருக்கும்.

## (b) வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தத்திலிருந்து கிடைக்கும் வருமானம் - நியமம் SLFRS 15

நியமம் **SLFRS** - 15 வருமானம் எவ்வளவு மற்றும் அந்த வருமானம் எப்போது இனங்காணப்படுகின்றது என்பதை நிர்ணயித்துக் கொள்ளும் பொருட்டு முழுமையான ஒரு வேலைச்சட்டகத்தைத் தாபிக்கச்செய்கின்றது. இது நியமம் **LKAS** 18 "வருமானம்", நியமம் **LKAS** 11 "நிர்மாண ஒப்பந்தங்கள்" ஆகியன அடங்கலாக ஏற்கெனவே காணப்படும் வருமான இனங்காணல் வழிகாட்டல்களுக்கு பிரதியீடு செய்வதாக அமைகின்றது. நியமம் **SLFRS** 15 ஐ பின்பற்றுவதானது முன்னர் அனுமதிக்கப்பட்டவை அடங்கலாக 2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆம் திகதியில் அல்லது அதற்கு பின்னர் ஆரம்பமாகும் ஆண்டு காலப் பகுதிகளுக்கு செயல்வலுப் பெற்றிருக்கும்.

குழு இந்த நியமங்கள் செயல்வலுப்பெறும் போது அவற்றைப் பின்பற்றும். நிறைவு பெறாத விரிவான மீளாய்வு, நிதி சார்ந்த தாக்கம் ஆகியன இந்த நிதிக் கூற்றுக்கள் வெளிப்படுத்தப்படும் திகதியில் நியாயமான விதத்தில் மதிப்பிடக் கூடியதாக இருக்காது.

# மத்திய பொறியியல் உசாதுணை பணியகம்
## முழுமையான வருமான கூற்று

| | | குழு | | ம.பொ.உ.ப. | |
|---|---|---|---|---|---|
| 2017 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான முழுமையான வருமான கூற்று | | 2017<br>ரூ. | 2016<br>ரூ. | 2017<br>ரூ. | 2016<br>ரூ. |
| | குறிப்பு | | | | |
| **வருமானம்** | 9 | **15,209,624,006** | 11,674,570,503 | **13,195,637,498** | 10,333,280,821 |
| விற்பனை ஆகுசெலவு | 10 | (13,312,355,493) | (9,853,816,338) | (12,075,714,656) | (9,179,818,923) |
| **முழு இலாபம்** | | **1,897,268,513** | 1,820,754,165 | **1,119,922,842** | 1,153,461,898 |
| ஏனைய வருமானம் | 11 | 134,210,273 | 218,971,425 | 179,759,198 | 272,930,388 |
| நிருவாக செலவுகள் | | (1,395,814,503) | (1,151,207,809) | (718,018,736) | (601,403,438) |
| விற்பனை, பகிர்ந்தளிப்பு செலவுகள் | | (140,237,585) | (222,937,513) | (131,766,570) | (213,573,602) |
| **இயக்கச்செயற்பாடுகளிலிருந்து வரும் பெறுபேறுகள்** | | **495,426,698** | 665,580,269 | **449,896,734** | 611,415,245 |
| நிதி சார்ந்த வருமானம் | | 445,958,333 | 282,598,968 | 316,507,931 | 210,668,182 |
| நிதி சார்ந்த ஆகுசெலவு | | (26,342,723) | (22,135,246) | (9,753,126) | (6,263,475) |
| **தேறிய நிதி வருமானம்** | 12 | **419,615,611** | 260,463,722 | **306,754,804** | 204,404,707 |
| **வரிக்கு முன்னருள்ள இலாபம்** | 13 | **915,042,308** | 926,043,990 | **756,651,538** | 815,819,952 |
| வருமான வரி தொடர்பான செலவுகள் | 14 | (392,859,134) | (401,823,227) | (355,346,282) | (376,156,549) |
| **குறித்த ஆண்டிற்கான இலாபம்** | | **522,183,174** | 524,220,763 | **401,305,256** | 439,663,403 |
| **ஏனைய முழுமையான வருமானம்** | | | | | |
| தொழிலுக்கு பிற்பட்ட கால ஓய்வூதிய நன்மைகள் தொடர்பான உண்மையான இலாபம் | | (6,529,540) | 20,297,204 | (5,919,064) | 20,282,110 |
| **குறித்த ஆண்டிற்கான மொத்த முழுமையான வருமானம்** | | **515,653,634** | 544,517,967 | **395,386,192** | 459,945,513 |

*அடைப்புக்குறிக்குள்ளிருக்கும் இலக்கங்கள் கழித்தலை சுட்டிக்காட்டும்.*

30 முதல் 38 வரையான பக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் இந்த நிதிக் கூற்றுக்களுக்கான இன்றியமையாத பாகமாகும்.

# மத்திய பொறியியல் உசாதுணை பணியகம்
## நிதி நிலைக் கூற்று

| 2017 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி நிலைக் கூற்று | | குழு | | ம.பொ.உ.ப. | |
|---|---|---|---|---|---|
| | | 2017 ரூ. | 2016 ரூ. | 2017 ரூ. | 2016 ரூ. |
| **சொத்துக்கள்** | **குறிப்பு** | | | | |
| **நடைமுறையல்லாத சொத்துக்கள்** | | | | | |
| சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள் | 15 | **2,852,702,138** | 2,905,911,035 | **2,372,710,383** | 2,509,023,699 |
| முதலீடுகள் | 16 | **51,117,849** | 38,489,824 | **61,117,869** | 46,957,402 |
| **மொத்த நடைமுறையல்லாத சொத்துக்கள்** | | **2,903,819,987** | 2,944,400,859 | **2,433,828,252** | **2,555,981,101** |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | | |
| பொருட்பதிவேடுகள் | 17 | **832,849,205** | 785,057,154 | **10,638,501** | 16,857,933 |
| வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகள் | 18 | **14,779,002,414** | 11,485,838,621 | **14,400,921,345** | 11,013,443,138 |
| குறுங்கால முதலீடுகள் | 16 | **4,094,534,947** | 4,081,356,846 | **2,983,463,922** | 3,035,639,354 |
| காசும் காசு ஒப்புரவுகளும் | 20 | **691,640,433** | 648,439,480 | **461,781,166** | 440,730,586 |
| சம்பந்தப்பட்ட தரப்புகளிடமிருந்து வரவேண்டிய தொகை | 19 | | | **1,565,621,738** | 1,371,069,905 |
| **மொத்த நடைமுறைச் சொத்துக்கள்** | | **20,398,026,998** | 17,000,692,101 | **19,422,426,671** | **15,877,740,916** |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **23,301,846,985** | 19,945,092,960 | **21,856,254,923** | **18,433,722,017** |
| **ஒப்புரவும் பொறுப்புக்களும்** | | | | | |
| பங்களிப்பு செய்யப்பட்ட மூலதனம் | | **500,000** | 500,000 | **500,000** | 500,000 |
| மூலதன ஒதுக்கீடு | 26 | **3,028,000** | 3,028,000 | **3,028,000** | 3,028,000 |
| பிடித்துவைக்கப்பட்ட சம்பாத்தியங்கள் | | **6,012,648,538** | 5,496,994,903 | **5,599,699,524** | 5,204,313,332 |
| **மொத்த ஒப்புரவுகள்** | | **6,016,176,538** | 5,500,522,903 | **5,603,227,524** | **5,207,841,332** |
| **நடைமுறையல்லாத பொறுப்புக்கள்** | | | | | |
| குத்தகை கடன்கள் | 21 | **-** | - | **-** | - |
| ஊழியர் நன்மைகள் | 22 | **165,820,347** | 158,063,895 | **161,242,343** | 156,587,664 |
| பிற்போடப்பட்ட வரி | 23 | **22,581,183** | 21,820,955 | **-** | - |
| **மொத்த நடைமுறையல்லாத பொறுப்புக்கள்** | | **188,401,530** | **179,884,851** | **161,242,343** | **156,587,664** |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | | | |
| வர்த்தக மற்றும் ஏனைய கொடுமதிகள் | 24 | **16,124,875,069** | 13,293,081,842 | **15,156,893,565** | 12,120,903,654 |
| செலுத்த வேண்டிய வருமான வரி | 25 | **972,393,849** | 971,603,364 | **934,891,491** | 948,389,368 |
| **மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள்** | | **17,097,268,918** | 14,264,685,206 | **16,091,785,056** | **13,069,293,022** |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **17,285,670,447** | 14,444,570,057 | **16,253,027,399** | **13,225,880,686** |
| **மொத்த ஒப்புரவும் பொறுப்புக்களும்** | | **23,301,846,985** | 19,945,092,960 | **21,856,254,923** | **18,433,722,017** |

*அடைப்புக்குறிக்குள்ளிருக்கும் இலக்கங்கள் கழித்தலை சுட்டிக்காட்டும்.*

50 முதல் 38 வரையான பக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் இந்த நிதிக் கூற்றுக்களுக்கான இன்றியமையாத பாகமாகும்.

நிதிக் கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன என உறுதிப்படுத்தப்படுகின்றது.

யூ.என்.பீ. மாவத்தாகம
**பிரதிப் பொது முகாமையாளர் (நிதி)**

இந்த நிதிக் கூற்றுக்களை தயாரித்து வழங்கும் பொறுப்பு பணிப்பாளர்கள் சபைக்குரியதாகும்.
இந்த நிதிக் கூற்றுக்கள் பணிப்பாளர்கள் சபைக்காகவும் அதன் சார்பாகவும் அங்கீகரிக்கப்பட்டு கையொப்பமிடப்படுகின்றன.

பொறியியலாளர் ஜி.டீ.ஏ. பியதிலக்க
**தலைவர்**

பொறியியலாளர் எஸ்.பி.பி. நாணயக்கார
**பணிப்பாளர்**

2018 ஏப்ரல் 11
கொழும்பு

# மத்திய பொறியியல் உசாதுணை பணியகம்

## ஒப்புரவு மாற்றங்கள் பற்றிய கூற்று

| | ம.பொ.உ.ப. | | | |
|---|---|---|---|---|
| 2017 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான | பங்களித்த மூலதனம் ரூ. | மூலதன ஒதுக்கீடு ரூ. | பிடித்துவைக்கப்பட்ட சம்பாத்தியங்கள் ரூ. | மொத்தம் ரூ. |
| **2016 சனவரி 01 ஆம் திகதியிலுள்ள நிலுவை** | 500,000 | 3,028,000 | 4,744,367,819 | **4,747,895,819** |
| குறித்த ஆண்டிற்கான தேறிய இலாபம் | - | | 439,663,403 | **439,663,403** |
| குறித்த ஆண்டிற்கான ஏனைய முழுமையான வருமானம் | | | 20,282,110 | **20,282,110** |
| **2016 திசம்பர் 31 ஆம் திகதியிலுள்ள நிலுவை** | 500,000 | 3,028,000 | 5,204,313,332 | **5,207,841,332** |
| **2017 சனவரி 01 ஆம் திகதியிலுள்ள நிலுவை** | 500,000 | 3,028,000 | 5,204,313,332 | **5,207,841,332** |
| குறித்த ஆண்டிற்கான தேறிய இலாபம் | - | - | 401,305,256 | **401,305,256** |
| குறித்த ஆண்டிற்கான ஏனைய முழுமையான வருமானம் | - | - | (5,919,064) | **(5,919,064)** |
| **2017 திசம்பர் 31 ஆம் திகதியிலுள்ள நிலுவை** | **500,000** | **3,028,000** | **5,599,699,524** | **5,603,227,524** |

| | குழு | | | |
|---|---|---|---|---|
| 2017 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான | பங்களித்த மூலதனம் ரூ. | மூலதன ஒதுக்கீடு ரூ. | பிடித்துவைக்கப்பட்ட சம்பாத்தியங்கள் ரூ. | மொத்தம் ரூ. |
| **2016 சனவரி 01 ஆம் திகதியிலுள்ள நிலுவை** | 500,000 | 3,028,000 | 4,952,476,936 | **4,956,004,936** |
| குறித்த ஆண்டிற்கான தேறிய இலாபம் | - | - | 524,220,763 | **524,220,763** |
| குறித்த ஆண்டிற்கான ஏனைய முழுமையான வருமானம் | | | 20,297,204 | **20,297,204** |
| **2016 திசம்பர் 31 ஆம் திகதியிலுள்ள நிலுவை** | 500,000 | 3,028,000 | 5,496,994,903 | **5,500,522,903** |
| **2017 சனவரி 01 ஆம் திகதியிலுள்ள நிலுவை** | 500,000 | 3,028,000 | 5,496,994,903 | **5,500,522,903** |
| குறித்த ஆண்டிற்கான தேறிய இலாபம் | | | 522,183,174 | **522,183,174** |
| குறித்த ஆண்டிற்கான ஏனைய முழுமையான வருமானம் | | | (6,529,540) | **(6,529,540)** |
| **2017 திசம்பர் 31 ஆம் திகதியிலுள்ள நிலுவை** | **500,000** | **3,028,000** | **6,012,648,538** | **6,016,176,538** |

30முதல் 38 வரையான பக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் இந்த நிதிக் கூற்றுக்களுக்கான இன்றியமையாத பாகமாகும்.

# மத்திய பொறியியல் உசாதுணை பணியகம்

## காசுப்பாய்ச்சல் கூற்று

| | குழு | | ம.பொ.உ.ப. | |
|---|---|---|---|---|
| 2017 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான | 2017 Rs | 2016 Rs | 2017 Rs | 2016 Rs |
| **இயக்கச்செயற்பாடுகளிலிருந்து காசுப்பாய்ச்சல்** | | | | |
| வரிக்கு முன்னருள்ள இலாபம் | **915,042,308** | 926,043,990 | **756,651,538** | 815,819,952 |
| ***பின்வருவனவற்றுக்கான சீராக்கல்கள்:*** | | | | |
| சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள் மீதான தேய்மானம் | **341,735,552** | 349,758,461 | **188,697,441** | 208,416,548 |
| தீராத, சந்தேகத்திற்கிடமான பற்றுக்களுக்கான ஏற்பாடு | **133,851,153** | 216,792,372 | **127,634,446** | 210,702,562 |
| தீராத, சந்தேகத்திற்கிடமான பற்றுக்களுக்கான ஒதுக்கீடு | **(35,000,000)** | (134,410,740) | **(35,000,000)** | (130,120,258) |
| பணிக்கொடைக்கான நிதியேற்பாட/(ஒதுக்கீடு) | **35,910,237** | 28,667,377 | **33,418,940** | 28,186,313 |
| தேறிய நிதி வருமானம் | **(419,615,611)** | (260,463,722) | **(306,754,804)** | (204,404,707) |
| | **-** | | | |
| சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள் எண்னபவற்றின் அகற்றல் மீதான (இலாபம்)/நட்டம் | **25,577** | (10,563,480) | **(342,369)** | (5,719,648) |
| தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னருள்ள இயக்கச்செயற்பாட்டு இலாபம் | **971,949,217** | 1,115,824,259 | **764,305,192** | 922,880,761 |
| பொருட்பதிவேடுகளிலுள்ள (அதிகரிப்பு)/குறைவு | **(47,792,051)** | (190,375,089) | **6,219,432** | 75,633,401 |
| வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகளிலுள்ள (அதிகரிப்பு)/குறைவு | **(3,392,014,946)** | (2,630,441,263) | **(3,480,112,652)** | (1,651,016,359) |
| சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து வரவேண்டிய தொகைகளிலுள்ள (அதிகரிப்பு)/குறைவு | | | **(194,551,833)** | (223,603,876) |
| வர்த்தக மற்றும் ஏனைய கொடுமதிகளிலுள்ள (அதிகரிப்பு)/குறைவு | **2,831,793,227** | 2,415,627,019 | **3,035,989,911** | 1,189,147,596 |
| **இயக்கச்செயற்பாடுகளிலிருந்து ஈட்டிய காசு** | **363,935,446** | 710,634,925 | **131,850,049** | 313,041,523 |
| செலுத்திய வட்டி | **(26,342,723)** | (22,135,246) | **(9,753,126)** | (6,263,475) |
| செலுத்திய வரி | **(391,308,423)** | (200,458,436) | **(368,844,159)** | (179,132,891) |
| செலுத்திய பணிக்கொடை | **(34,683,325)** | (27,764,111) | **(34,683,325)** | (27,755,450) |
| **இயக்கச்செயற்பாடுகளிலிருந்து தேறிய காசுப்பாய்ச்சல்** | **(88,399,024)** | 460,277,133 | **(281,430,561)** | 99,889,707 |
| **முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து வரும் காசுப்பாய்ச்சல்** | | | | |
| சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள் என்பவற்றிலுள்ள முதலீடு | **(300,348,314)** | (157,028,151) | **(71,917,615)** | (30,958,688) |
| நிகழும் மூலதன பணியிலுள்ள முதலீடு | **(9,385,324)** | (13,102,338) | **-** | |
| சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள் என்பவற்றின் அகற்றல் மீதான விற்பனை வருமானம் | **21,181,405** | 13,702,671 | **19,875,859** | 6,067,772 |
| நீண்டகால வைப்பு முதலீடு/அகற்றல் | **(12,628,025)** | 988,039 | **(14,160,467)** | (2,703,815) |
| குறுங்கால வைப்பு முதலீடு/அகற்றல் | **(13,178,100)** | (739,505,984) | **52,175,432** | (464,660,405) |
| வட்டி வருமானம் | **445,958,333** | 282,598,968 | **316,507,931** | 210,668,182 |
| **முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து வரும் தேறிய காசுப்பாய்ச்சல்** | **131,599,977** | (612,346,795) | **302,481,141** | (281,586,955) |
| **நிதியீட்டு செயற்பாடுகளிலிருந்து வரும் காசுப்பாய்ச்சல்** | | | | |
| நிதி சார்ந்த குத்தகை பொறுப்புக்கள் கொடுப்பனவு | **-** | (883,827) | **-** | - |
| நிதியீட்டு செயற்பாடுகளிலிருந்து வரும் தேறிய காசுப்பாய்ச்சல் | **-** | (883,827) | **-** | - |
| **காசும் காசு ஒப்புரவுகளிலுமுள்ள தேறிய அதிகரிப்பு/(குறைவு)** | **43,200,953** | (152,953,490) | **21,050,580** | (181,697,248) |
| குறித்த ஆண்டு ஆரம்பத்திலுள்ள காசும் காசு ஒப்புரவும் | **648,439,480** | 801,392,970 | **440,730,586** | 622,427,835 |
| **குறித்த ஆண்டு இறுதியிலுள்ள காசும் காசு ஒப்புரவும் (குறிப்பு 20)** | **691,640,433** | 648,439,480 | **461,781,166** | 440,730,586 |

*அடைப்புக்குறிக்குள்ளிருக்கும் இலக்கங்கள் கழித்தலை சுட்டிக்காட்டும்.*

30முதல் 38 வரையான பக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் இந்த நிதிக் கூற்றுக்களுக்கான இன்றியமையாத பாகமாகும்.

# மத்திய பொறியியல் உசாதுணை பணியகம்

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

| 2017 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான | குழு 2017 ரூ. | குழு 2016 ரூ. | ம.பொ.உ.ப. 2017 ரூ. | ம.பொ.உ.ப. 2016 ரூ. |
|---|---|---|---|---|
| **9 வருமானம்** | **12,806,742,018** | 9,562,536,642 | **10,768,630,876** | 8,209,198,474 |
| நிர்மாணம் சார்ந்த வருமானம் | **2,402,881,988** | 2,112,033,861 | **2,427,006,622** | 2,124,082,347 |
| உசாதுணை சார்ந்த வருமானம் | **15,209,624,006** | 11,674,570,503 | **13,195,637,498** | 10,333,280,821 |
| **10 விற்பனை ஆகுசெலவு** | **11,675,869,253** | 8,479,188,921 | **10,415,157,725** | 7,790,481,593 |
| நிர்மாணம் சார்ந்த ஆகுசெலவு | **1,636,486,240** | 1,374,627,417 | **1,660,556,930** | 1,389,337,330 |
| உசாதுணை சார்ந்த ஆகுசெலவு | **13,312,355,493** | 9,853,816,338 | **12,075,714,656** | 9,179,818,923 |
| **11 ஏனைய வருமானம்** | | | | |
| நானாவித வருமானம் | **86,727,323** | 71,354,350 | **71,082,503** | 62,430,692 |
| வாடகை வருமானம் | **10,362,049** | 6,266,318 | **38,144,281** | 37,526,306 |
| நடைமுறையல்லாத கணக்கு வைப்பு | **350,827** | 5,785,636 | **350,826** | 5,785,636 |
| மீதான இலாபம் | - | - | **33,411,513** | 35,913,113 |
| மீளளிக்கத்தகு செலவுகள் | **1,770,074** | 1,154,382 | **1,770,074** | 1,154,382 |
| வெளிநாட்டு நாணயமாற்று இலாபம் | **35,000,000** | 134,410,740 | **35,000,000** | 130,120,258 |
| தீராத பற்றுக்கான ஒதுக்கீடு | **134,210,273** | 218,971,425 | **179,759,198** | 272,930,388 |
| **12 நிதி சார் வருமானம்** | | | | |
| **நிதி சார் வருமானம்** | **445,958,333** | 282,598,968 | **316,507,931** | 210,668,182 |
| வட்டி வருமானம் | **445,958,333** | 282,598,968 | **316,507,931** | 210,668,182 |
| **நிதி சார் ஆகுசெலவு** | **(26,342,723)** | (22,135,246) | **(9,753,126)** | (6,263,475) |
| **தேறிய நிதி சார் வருமானம்** | **419,615,611** | 260,463,722 | **306,754,804** | 204,404,707 |
| **14 வருமான வரி** | 392,098,907 | 397,620,085 | 355,346,282 | 376,156,549 |
| 14.1 நடைமுறை வரி சார் செலவு | 760,227 | 4,203,142 | - | - |
| பிற்போடப்பட்ட வரி ஏற்பாடு | **392,859,134** | **401,823,227** | **355,346,282** | **376,156,549** |
| **14.2 வரி விதிக்கத்தகு இலாபத்திற்கான இலாப கணிப்பீட்டு இணக்கல்** | | | | |
| நிர்மாண வருமானம் மீதான வரி @ 12% | 11,294,687 | 27,050,366 | 11,294,687 | 27,050,366 |
| ஏனை வருமானம் மீதான வரி @ 28% | 233,571,118 | 203,776,311 | 196,818,493 | 182,312,775 |
| பிற்போடப்பட்ட வரி | 147,233,101 | 166,793,408 | 147,233,101 | 166,793,408 |
| நடைமுறை வருமான வரி செலவுகள் | **392,098,907** | **397,620,085** | **355,346,282** | **376,156,549** |

# மத்திய பொறியியல் உசாதுணை பணியகம்

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி)

### 15 சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள்

15.1 ம.பொ.உ.ப.

| 2017 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான | காணி ரூ. | கட்டிடங்கள் ரூ. | தளபாடங்களும் பொருத்துக்களும் ரூ. | நிர்மாண கருவிகள், உபகரணங்கள் ரூ. | அலுவலக உபகரணங்கள் ரூ. | பொறித் தொகுதிகள், இயந்திராதிகள் ரூ. | கொல்கலன்கள் ரூ. | கணனிகள் ரூ. | வாகனங்கள் ரூ. | வாசிகசாலை நூல்கள் ரூ. | நிகழும் மூலதன பணி ரூ. | மொத்தம் ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **ஆகுசெலவு** | | | | | | | | | | | | |
| **2017 சனவரி 01 ஆம் திகதியிலுள்ள நிலுவை** | 1,701,736,867 | 820,129,995 | 67,037,896 | 223,719,126 | 72,639,548 | 502,540,042 | 12,380,896 | 144,675,350 | 382,708,511 | 1,776,940 | 19,331,449 | 3,948,676,619 |
| குறித்த ஆண்டு காலப்பகுதியிலுள்ள சேர்வுகள் | 6,149,578 | 36,104,934 | 4,417,967 | 2,227,006 | 8,438,717 | 1,068,430 | - | 9,902,354 | 3,395,210 | 213,418 | - | 71,917,615 |
| குறித்த ஆண்டு காலப்பகுதியில் பதிவழிக்கப்பட்டவை/ அகற்றல்கள் | - | - | (132,765) | (104,094) | (614,955) | (2,613,863) | - | (984,592) | - | - | (19,331,449) | (23,781,718) |
| **2017 திசம்பர் 31 ஆம் திகதியிலுள்ள நிலுவை** | 1,707,886,445 | 856,234,929 | 71,323,099 | 225,842,037 | 80,463,310 | 500,994,609 | 12,380,896 | 153,593,111 | 386,103,721 | 1,990,358 | - | 3,996,812,515 |
| **திரண்ட தேய்மானம்** | | | | | | | | | | | | |
| 2017 சனவரி 01 ஆம் திகதியிலுள்ள நிலுவை | - | 303,173,342 | 36,333,855 | 181,174,824 | 42,026,463 | 387,844,388 | 12,115,525 | 105,409,263 | 370,548,485 | 1,026,776 | - | 1,439,652,920 |
| குறித்த ஆண்டிற்கான கட்டணங்கள் | - | 67,698,817 | 8,151,267 | 14,691,928 | 8,627,247 | 66,382,497 | 250,017 | 15,498,587 | 7,171,782 | 225,297 | - | 188,697,441 |
| குறித்த ஆண்டு காலப்பகுதியிலுள்ள அகற்றல்கள் | - | - | (93,892) | (104,094) | (468,368) | (2,597,281) | - | (984,592) | - | - | - | (4,248,229) |
| **2017 திசம்பர் 31 ஆம் திகதியிலுள்ள நிலுவை** | **-** | **370,872,159** | **44,391,229** | **195,762,658** | **50,185,342** | **451,629,604** | **12,365,543** | **119,923,258** | **377,720,267** | **1,252,073** | **-** | **1,624,102,133** |
| **தேறிய புத்தக பெறுமானம்** | | | | | | | | | | | | |
| 2016 திசம்பர் 31 ஆம் திகதியிலுள்ள நிலுவை | 1,701,736,867 | 516,956,653 | 30,704,042 | 42,544,302 | 30,613,085 | 114,695,655 | 265,371 | 39,266,086 | 12,160,026 | 750,164 | 19,331,449 | 2,509,023,699 |
| **2017 திசம்பர் 31 ஆம் திகதியிலுள்ள நிலுவை** | 1,707,886,445 | 485,362,770 | 26,931,870 | 30,079,379 | 30,277,968 | 49,365,006 | 15,353 | 33,669,853 | 8,383,454 | 738,285 | - | 2,372,710,383 |

# மத்திய பொறியியல் உசாதுணை பணியகம்

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி)

### 15 சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள்

15.2 குழு

| 2017 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான | காணி ரூ. | கட்டிடங்கள் ரூ. | தளபாடங்களும் பொருத்துக்களும் ரூ. | நிர்மாண கருவிகள், உபகரணங்கள் ரூ. | அலுவலக உபகரணங்கள் ரூ. | பொறித் தொகுதிகள், இயந்திராதிகள் ரூ. | கொல்கலன்கள் ரூ. | கணனிகள் ரூ. | வாகனங்கள் ரூ. | வாசிகசாலை நூல்கள் ரூ. | நிகழும் மூலதன பணி ரூ. | மொத்தம் ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **ஆகுசெலவு** | | | | | | | | | | | | |
| 2017 சனவரி 01 ஆம் திகதியிலுள்ள நிலுவை | 1,710,152,014 | 876,854,429 | 84,887,422 | 380,413,486 | 96,897,579 | 704,353,506 | 28,190,362 | 179,751,121 | 770,345,431 | 2,224,110 | 43,553,168 | 4,877,622,626 |
| குறித்த ஆண்டு காலப்பகுதியிலுள்ள சேர்வுகள் | 6,149,578 | 37,449,525 | 10,184,136 | 97,533,255 | 21,074,342 | 79,843,618 | 15,773,550 | 24,440,351 | 6,990,210 | 909,748 | 9,385,324 | 309,733,637 |
| குறித்த ஆண்டு காலப்பகுதியிலுள்ள அகற்றல்கள் | - | - | (185,655) | (909,841) | (772,061) | (4,328,257) | - | (2,239,392) | - | - | (19,331,449) | (27,766,655) |
| **2017 திசம்பர் 31 ஆம் திகதியிலுள்ள நிலுவை** | 1,716,301,592 | 914,303,954 | 94,885,903 | 477,036,900 | 117,199,860 | 779,868,867 | 43,963,912 | 201,952,080 | 777,335,641 | 3,133,858 | 33,607,043 | 5,159,589,608 |
| **திரண்ட தேய்மானம்** | | | | | | | | | | | | |
| 2017 சனவரி 01 ஆம் திகதியிலுள்ள நிலுவை | - | 318,940,293 | 41,327,105 | 246,860,886 | 49,161,807 | 479,884,957 | 21,136,040 | 119,294,827 | 694,062,513 | 1,043,163 | - | 1,971,711,591 |
| குறித்த ஆண்டிற்கான கட்டணங்கள் | - | 71,213,812 | 10,744,654 | 63,013,504 | 13,336,500 | 112,588,237 | 7,436,517 | 24,000,023 | 39,162,722 | 239,583 | - | 341,735,552 |
| குறித்த ஆண்டு காலப்பகுதியிலுள்ள அகற்றல்கள் | - | - | (116,170) | (626,952) | (551,450) | (3,265,319) | - | (1,999,782) | - | - | - | (6,559,673) |
| **2017 திசம்பர் 31 ஆம் திகதியிலுள்ள நிலுவை** | **-** | **390,154,104** | **51,955,589** | **309,247,438** | **61,946,857** | **589,207,875** | **28,572,557** | **141,295,068** | **733,225,235** | **1,282,746** | **-** | **2,306,887,470** |
| **தேறிய புத்தக பெறுமானம்** | | | | | | | | | | | | |
| 2016 திசம்பர் 31 ஆம் திகதியிலுள்ள நிலுவை | 1,710,152,014 | 557,914,136 | 43,560,317 | 133,552,600 | 47,735,771 | 224,468,549 | 7,054,322 | 60,456,294 | 76,282,918 | 1,180,946 | 43,553,168 | 2,905,911,035 |
| **2017 திசம்பர் 31 ஆம் திகதியிலுள்ள நிலுவை** | 1,716,301,592 | 524,149,849 | 42,930,313 | 167,789,461 | 55,253,003 | 190,660,992 | 15,391,355 | 60,657,012 | 44,110,406 | 1,851,112 | 33,607,043 | 2,852,702,139 |

* துணை நிறுவனத்தில் (சென்ட்ரெல் இன்ஜினியரிங் சேர்விஸெஸ் (ப்ரைவட்) லிமிற்றட்) உள்ளக ரீதியில் அபிவிருத்தி செய்யப்பட்ட மென்பாகங்களின் ஆகுசெலவு நிகழும் மூலதன பணியில் உள்ளடங்குகின்றது. விபரங்கள் பின்வருமாறு:

| | **2017.12.31 ஆம் திகதியிலுள்ள** | **2016.12.31 ஆம் திகதியிலுள்ள** |
|---|---|---|
| குறித்த ஆண்டு ஆரம்பத்திலுள்ள நிலுவை | 4,785,714 | 2,785,714 |
| குறித்த ஆண்டில் ஏற்பட்ட செலவு | 4,580,000 | 2,000,000 |
| | **9,365,714** | **4,785,714** |

# மத்திய பொறியியல் உசாதுணை பணியகம்

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி)

| | குழு | | ம.பொ.உ.ப. | |
|---|---|---|---|---|
| 2017 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான | 2017<br>ரூ. | 2016<br>ரூ. | 2017<br>ரூ. | 2016<br>ரூ. |
| **16 முதலீடுகள்** | | | | |
| நீண்டகால முதலீடு (குறிப்பு 16.1) | **51,117,849** | 38,489,824 | **61,117,869** | 46,957,402 |
| குறுங்கால முதலீடு (குறிப்பு 16.2) | **4,094,534,947** | 4,081,356,846 | **2,983,463,922** | 3,035,639,354 |
| | **4,145,652,796** | 4,119,846,670 | **3,044,581,791** | 3,082,596,756 |
| **16.1 நீண்டகால முதலீடு** | | | | |
| **கடன்களும் கிடைக்க வேண்டிய நிதி சொத்துக்களும்** | | | | |
| நிலையான வைப்பிலுள்ள முதலீடுகள் | **49,117,849** | 36,489,824 | **49,117,849** | 34,957,382 |
| **விற்பனைக்கு கிடைக்க கூடிய நிதி சொத்துக்கள்** | | | | |
| பங்குகளிலுள்ள முதலீடு | **2,000,000** | 2,000,000 | **2,000,000** | 2,000,000 |
| | **51,117,849** | 38,489,824 | **51,117,849** | 36,957,382 |
| **துணை நிறுவனத்திலுள்ள முதலீடு (குறிப்பிடப்படாத)** | | | | |
| சென்ட்ரெல் இன்ஜினிரிங் சேர்விஸெஸ் (ப்ரைவட்) லிமிற்றட் | **-** | - | **10,000,020** | 10,000,020 |
| | **-** | - | **10,000,020** | 10,000,020 |
| | **51,117,849** | 38,489,824 | **61,117,869** | 46,957,402 |
| **16.2 குறுங்கால முதலீடுகள்** | | | | |
| ரெபோ | **10,000,000** | 58,749,548 | **10,000,000** | 58,749,548 |
| குறுங்கால முதலீடுகள் | **4,084,534,947** | 4,022,607,298 | **2,973,463,922** | 2,976,889,806 |
| | **4,094,534,947** | 4,081,356,846 | **2,983,463,922** | 3,035,639,354 |
| **17 பொருட்பதிவேடுகள்** | **832,849,205** | 785,057,154 | **10,638,501** | 16,857,933 |
| **18 வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகள்** | | | | |
| வர்த்தக சார் வருமதிகள் குறிப்பு18.1) | **14,359,088,555** | 11,144,567,276 | **11,114,025,430** | 8,051,064,521 |
| ஏனைய வருமதிகள் (குறிப்பு 18.2) | **107,228,112** | 74,425,943 | **65,471,318** | 56,874,387 |
| வைப்புக்கள், முற்கொடுப்பனவுகள் முற்பணங்கள் (குறிப்பு 18.3) | **312,685,748** | 266,845,402 | **3,221,424,597** | 2,905,504,230 |
| | **14,779,002,414** | 11,485,838,621 | **14,400,921,345** | 11,013,443,138 |
| **18.1 வர்த்தக சார் வருமதிகள்** | | | | |
| பற்றுக்கள் | **9,241,972,617** | 6,838,763,494 | **8,475,707,071** | 5,863,186,580 |
| வாடிக்கையாளர் தரப்புகளிடமிருந்து வரவேண்டிய தொகை | **3,446,997,122** | 2,876,396,109 | **1,166,933,362** | 940,101,284 |
| வரவேண்டிய பிடித்துவைக்கப்பட்ட தொகை | **3,055,459,146** | 2,715,896,852 | **2,840,665,241** | 2,524,422,456 |
| கழிக்குக: நட்டத்திற்கான ஏற்பாடு (குறிப்பு 18.1.1) | **(1,385,340,330)** | (1,286,489,179) | (1,369,280,245) | (1,276,645,799) |
| | **14,359,088,555** | 11,144,567,276 | **11,114,025,430** | 8,051,064,521 |
| **18.1.1 நட்டத்திற்கான ஏற்பாடு** | | | | |
| குறித்த ஆண்டு ஆரம்பத்திலுள்ள நிலுவை | **1,286,489,178** | 1,221,474,256 | **1,276,645,799** | 1,213,430,205 |
| இனங்காணப்பட்ட நட்டத்திற்கான ஏற்பாடு | **133,851,153** | 216,792,372 | **127,634,446** | 210,702,562 |
| பதிவழிக்கப்பட்ட/ஒதுக்கப்பட்ட தொகைகள் | **(35,000,000)** | (151,777,449) | **(35,000,000)** | (147,486,967) |
| குறித்த ஆண்டு இறுதியிலுள்ள நிலுவை | **1,385,340,330** | 1,286,489,179 | **1,369,280,245** | 1,276,645,799 |

குழு அறிக்கையிடும் திகதியில் மதிப்பிடுகின்ற போது, வர்த்த சார் வருமதிகளில் நட்டம் ஏற்பட்டுள்ளது என்பதற்கு தெளிவான சான்று காணப்படுகின்ற வேளையில், ஏற்கெனவேயிருக்கின்ற வருமதிகளின் நடைமுறை நிலையினதும் வரலாற்று சேகரிப்புகளின் அனுபவத்தினதும் மீளாய்வின் அடிப்படையில் நட்டத்திற்கான ஏற்பாடு கணிப்பிடப்படுகின்றது. அத்தகைய ஏற்பாடுகள் உண்மையான நட்டத்தையும் எதிர்பார்த்த நட்டத்தையும் பிரதிபலிக்கும் வகையில் வழமையான காலப்பகுதியில் சீராக்கப்படுகின்றன.

| | குழு 2017 ரூ. | குழு 2016 ரூ. | ம.பொ.உ.ப. 2017 ரூ. | ம.பொ.உ.ப. 2016 ரூ. |
|---|---|---|---|---|
| **18.2 ஏனைய வருமதிகள்** | | | | |
| ஊழியர் கடன்கள் | **37,481,440** | 35,664,283 | **36,913,705** | 35,664,283 |
| ஊழியர்களுக்கு முன்கூட்டி செலுத்தப்பட்ட செலவு | **4,372,592** | 3,624,582 | **4,372,592** | 3,624,582 |
| பொது தொங்கு கணக்கு | **64,747,403** | 34,433,470 | **23,558,344** | 16,891,443 |
| நானாவித பற்றுக்கள் | **626,677** | 703,608 | **626,677** | 694,079 |
| கிடைக்கவேண்டிய நி.வை.வ. | **107,228,112** | 74,425,943 | **65,471,318** | 56,874,387 |
| **18.3 வைப்புக்கள், முற்கொடுப்பனவுகள், முற்பணங்கள்** | | | | |
| வைப்புக்கள் | **15,869,689** | 13,294,380 | **10,041,455** | 9,539,091 |
| செலுத்தப்பட்ட ஊக்குவிப்பு முற்பணம் | **41,334,292** | 47,878,609 | **3,167,826,373** | 2,862,914,925 |
| முற்பணங்கள் | **238,032,937** | 186,029,459 | **36,012,267** | 24,369,808 |
| முற்கொடுப்பனவுகள் | **17,448,830** | 19,642,954 | **7,544,502** | 8,680,405 |
| | **312,685,748** | 266,845,402 | **3,221,424,597** | 2,905,504,230 |
| **19 சம்பந்தப்பட்ட தரப்பு நிறுவனங்களிலிருந்து கிடைக்க வேண்டிய தொகை** | | | | |
| சென்ட்ரெல் இன்ஜினிரிங் சேர்விஸெஸ் (ப்ரைவட்) லிமிற்றட் | **-** | - | **1,565,621,738** | 1,371,069,905 |
| | **-** | - | **1,565,621,738** | 1,371,069,905 |

# மத்திய பொறியியல் உசாதுணை பணியகம்

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி)

| | குழு | | ம.பொ.உ.ப. | |
|---|---|---|---|---|
| 2017 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான | 2017<br>ரூ. | 2016<br>ரூ. | 2017<br>ரூ. | 2016<br>ரூ. |
| **20 காசும் காசு ஒப்புரவுகளும்** | | | | |
| **சாதகமான நிலுவைகள்** | | | | |
| கையிலும் வங்கியிலுமுள்ள காசு | **672,602,070** | 625,895,435 | **443,083,574** | 430,012,186 |
| வங்கி வசக்கட்டுநிதி | **269,607** | 269,607 | **269,607** | 269,607 |
| பரிமாற்றத்திலுள்ள காசு | **18,768,755** | 22,274,438 | **18,427,985** | 10,448,793 |
| காசுப்பாய்ச்சல் நோக்கங்களுக்கான காசும் காசு ஒப்புரவுகளும் | **691,640,433** | **648,439,480** | **461,781,166** | **440,730,585** |
| **21 குத்தகை கடன்கள்** | | | | |
| ஒரு வருடத்திற்குள் செலுத்த வேண்டிய தொகை | **-** | - | **-** | - |
| ஒரு வருடத்தின் பின்னர் செலுத்த வேண்டிய தொகை | **-** | - | **-** | - |
| | **-** | **-** | **-** | **-** |
| **22** ஊழியர் நன்மைகள் | | | | |
| சனவரி 01 ஆம் திகதியிலுள்ள நிலுவை | **158,063,895** | 177,457,833 | **156,587,664** | 176,438,911 |
| குறித்த ஆண்டிற்கான ஏற்பாடு | **35,910,237** | 28,667,377 | **33,418,940** | 28,186,313 |
| எடுகோளிலுள்ள மாற்றங்களிலிருந்து அல்லது முன்னைய ஆண்டின் (மிகை)/குறை காரணமாக வரும் (இலாபம்)/நட்டம் | **6,529,540** | (20,297,204) | **5,919,064** | (20,282,110) |
| குறித்த ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் | **(34,683,325)** | (27,764,111) | **(34,683,325)** | (27,755,450) |
| **திசம்பர் 31 ஆம் திகதியிலுள்ள நிலுவை** | **165,820,347** | **158,063,895** | **161,242,343** | **156,587,664** |

**a)** ம.பொ.உ.ப. இன் ஊழியர் ஓய்வூதிய நன்மைகள் கடப்பாடு அக்சுவரிஸ் என்ட் மெனேஜ்மென்ட் கன்ஸல்ட்டென் (ப்ரைவட்) லிமிற்றட் எனும் தொழில் ரீதியில் தகுதி வாய்ந்த அக்சுவரிஸ் மெஸெஸ் தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்ட உண்மையான விலைமதிப்பீட்டு அடிப்படையில் காணப்படுகின்றது. அதற்கிணங்க, ம.பொ.உ.ப. மற்றும் அதன் குழு ஆகியவற்றின் 2017 திசம்பர் 31 ஆம் திகதியிலுள்ள திட்டவட்டமான ஊழியர் ஓய்வூதிய நன்மைகள் கடப்பாடுகளின் நிதியிடப்படாத தற்போதைய பெறுமானம்166 மில்லியன் ரூபாவாகும்.

**b)** கணிப்பீட்டின் போது பிரயோகிக்கப்பட்ட முக்கிய எடுகோள்களில் பின்வருவன உள்ளடங்குகின்றன.

| | குழு 2017 | குழு 2016 | ம.பொ.உ.ப. 2017 | ம.பொ.உ.ப. 2016 |
|---|---|---|---|---|
| விலைத்தள்ளுபடி வீதம் | **11%** | 11% | **11%** | 11% |
| ஊழியர் புறழ்வு காரணி | **0.01% - 0.18%** | 0.01% - 0.18% | **0.01% - 0.18%** | 0.01% - 0.18% |
| ஓய்வூதிய வயது | **60 Years** | 60 Years | **60 Years** | 60 Years |

**c)** முழுமையான வருமான கூற்றில் உடனடியாக இனங்காணப்பட்ட செலவுகள்

| | குழு 2017 | குழு 2016 | ம.பொ.உ.ப. 2017 | ம.பொ.உ.ப. 2016 |
|---|---|---|---|---|
| வட்டி ஆகுசெலவு | **17,372,266** | 17,681,182 | **17,224,643** | 17,643,891 |
| தற்போதைய சேவை ஆகுசெலவு | **18,537,971** | 10,986,195 | **16,194,297** | 10,542,422 |
| உடனடியாக இனங்காணப்பட்ட தேறிய உண்மையான இலாபம்/(நட்டம்) | **6,529,540** | (20,297,204) | **5,919,064** | (20,282,110) |
| குறித்த ஆண்டிற்கான ஏற்பாடு | **42,439,777** | **8,370,173** | **39,338,004** | **7,904,203** |

# மத்திய பொறியியல் உசாதுணை பணியகம்
## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

| 2017 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான | குழு 2017 ரூ. | குழு 2016 ரூ. | ம.பொ.உ.ப. 2017 ரூ. | ம.பொ.உ.ப. 2016 ரூ. |
|---|---|---|---|---|
| **23 பிற்போடப்பட்ட வரி** | | | | |
| குறித்த ஆண்டு ஆரம்பத்திலுள்ள நிலுவை | 21,820,956 | 17,617,814 | - | - |
| குறித்த ஆண்டு காலப்பகுதியிலுள்ள ஏற்பாடு | 760,227 | 4,203,142 | - | - |
| குறித்த ஆண்டு இறுதியிலுள்ள நிலுவை | 22,581,183 | 21,820,955 | | |
| **24 வர்த்தக மற்றும் ஏனைய கொடுமதிகள்** | | | | |
| வர்த்தக சார் கொடுமதிகள் (குறிப்பு 24.1) | 15,479,423,962 | 12,486,695,002 | 14,731,952,617 | 11,768,254,216 |
| ஏனைய கொடுமதிகள் (குறிப்பு 24.2) | 645,451,104 | 806,386,837 | 424,940,945 | 352,649,434 |
| | 16,124,875,069 | 13,293,081,842 | 15,156,893,565 | 12,120,903,650 |
| **24.1 வர்த்தக சார் கொடுமதிகள்** | | | | |
| கடன்கள் | 3,334,457,509 | 2,929,131,100 | 5,338,238,467 | 4,061,207,167 |
| வாடிக்கையாளர் தரப்புகளுக்கு கொடுக்க வேண்டிய கொடுமதிகள் | 6,840,692,367 | 4,674,673,186 | 3,514,238,015 | 2,400,071,753 |
| ஊக்குவிப்பு மற்றும் ஏனைய முற்பணங்கள் | 4,744,736,743 | 4,418,734,914 | 3,877,389,406 | 3,864,822,978 |
| ஒப்பந்தத் தரப்புகளுக்கு செலுத்த வேண்டிய பிடித்துவைக்கப்பட்ட தொகைகள் | 559,537,342 | 464,155,803 | 2,002,086,729 | 1,442,152,319 |
| | 15,479,423,962 | 12,486,695,002 | 14,731,952,617 | 11,768,254,216 |
| **24.2 ஏனைய கொடுமதிகள்** | | | | |
| செலுத்தப்படாத சம்பளங்கள் | 636,773 | 964,983 | 144,009 | 214,870 |
| நானாவித கடன்கள் | 60,354,494 | 51,829,482 | 47,546,107 | 47,498,952 |
| மீளளிக்கத்தகு வைப்புக்கள் | 8,122,232 | 8,538,310 | 8,122,232 | 8,437,970 |
| அட்டுறு செலவுகள் | 274,972,227 | 505,205,680 | 201,362,694 | 201,586,760 |
| VAT வரிக்கான ஏற்பாடு | - | - | - | - |
| செலுத்துநர் வரி | 8,535,505 | 5,915,352 | 6,523,995 | 5,251,890 |
| ஏனைய வரிகள் | 292,829,873 | 233,933,030 | 161,241,909 | 89,658,992 |
| | 645,451,104 | 806,386,837 | 424,940,945 | 352,649,434 |
| **25 செலுத்த வேண்டிய வருமான வரி** | | | | |
| குறித்த ஆண்டு ஆரம்பத்திலுள்ள நிலுவை | 971,603,364 | 774,441,715 | 948,389,368 | 751,365,710 |
| குறித்த ஆண்டிற்கான வருமான வரி | 392,098,907 | 397,620,085 | 355,346,282 | 376,156,549 |
| குறித்த ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் | (363,727,664) | (183,500,000) | (345,542,500) | (165,000,000) |
| நிறுத்திவைத்தல் வரி | (27,580,759) | (16,958,436) | (23,301,659) | (14,132,891) |
| குறித்த ஆண்டு இறுதியிலுள்ள நிலுவை | 972,393,849 | 971,603,364 | 934,891,491 | 948,389,368 |

**26 மூலதன ஒதுக்கீடு**

வாகனங்கள் 1995 ஆம் ஆண்டில் மீள்விலைமகிக்கப்பட்டன. அத்தகைய மீள்விலைமதிப்பீட்டு பெறுபேறுகள் மூலதன ஒதுக்கீட்டின் கீழ் நிதிக் கூற்றுக்களில் கூட்டிணைக்கப்பட்டன.

# மத்திய பொறியியல் உசாதுணை பணியகம்
## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி)

2017 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான

27.0 சம்பந்தப்பட்ட தரப்பு கொடுக்கல்வாங்கல்கள்

27.1 துணை நிறுவனங்களுடனான கொடுக்கல்வாங்கல்கள்

a பொறியியலாளர் ஜி.டீ. பியதிலக்க தலைமை நிறுவனத்தினதும் (ம.பொ.உ.ப.) குழு துணை நிறுவனத்தினதும் (செ.இ.சே.லி) தலைவராவார். திரு எம்.ஆர்.ஜி. ரணதுங்க, பொறியியலாளர் எஸ்.பி.பி. நாணயக்கார ஆகியோர் 2017 திசம்பர் 31 ஆம் திகதியில் ம.பொ.உ.ப. பணியகத்தினதும் அதே நேரம் செ.இ.சே.லி. நிறுவனத்தினதும் பணிப்பாளர்களாக இருந்தனர். கம்பனி குறித்த ஆண்டு காலப்பகுதியில் ம.பொ.உ.ப. பணியகத்துடன் கொடுக்கல்வாங்கல்களை செய்துள்ளது. அத்தகைய கொடுக்கல்வாங்கல்கள் பற்றிய விபரங்கள் பின்வருமாறு காணப்படும்.

| பெயர் | பதவி | |
|---|---|---|
| | ம.பொ.உ.ப. | செ.இ.சே.லி. |
| பொறியியலாளர் கே.எல்.எஸ். சகபந்து | பொது முகாமையாளர் | பணிப்பாளர் |
| பொறியியலாளர் ரீ.டீ. விக்ரமரட்ன | கூட்டுத்தாபன மேலதிக முகாமையாளர் (உசாதுணை) | பணிப்பாளர் |
| பொறியியலாளர் ஏ. கல்கெட்டிய | கூட்டுத்தாபன மேலதிக முகாமையாளர் (EPC) | பணிப்பாளர் |
| திரு யூ.என்.பீ. மாவத்தாகம | பிரதி பொது முகாமையாளர் (நிதி) | பணிப்பாளர் |

b)

| கொடுக்கல்வாங்கல்களின் தன்மை | தொகை | |
|---|---|---|
| | 2017<br>ரூ. | 2016<br>ரூ. |
| உப நிர்மாண ஆகுசெலவுகள் | 10,256,040,492 | 7,332,478,747 |
| இயந்திராதிகள் வாடகைக்குப் பெறல் தொடர்பான ஆகுசெலவு | 36,754,093 | 33,133,098 |
| வாகனங்கள் வாடகைக்குப் பெறல் தொடர்பான ஆகுசெலவு | 14,137,611 | 17,747,240 |
| IT பராமரிப்பு மற்றும் ஏனைய சேவைகள் | 10,920,584 | 11,499,743 |
| சம்பளக் கொடுப்பனவு மீளளிப்பு மேன்தலை செலவுகள் | 33,411,513 | 35,913,113 |
| உசாதுணை சார்ந்த கட்டணங்கள் | 13,704,051 | 12,048,485 |
| ஏனைய நானாவித சேவைகள் | 43,097,286 | 3,718,832 |

27.2 சம்பந்தப்பட்ட தரப்புகளுடனான கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான நியதிகளும் நிபந்தனைகளும்

சம்பந்தப்பட்ட தரப்பிடமிருந்து கிடைக்கும் வருமானம் மற்றும் ஏற்பட்ட செலவினம் அல்லது சம்பந்தப்பட்ட தரப்புகளிடமிருந்து வரும் கொள்வனவுகள் என்பன மிக நெருங்கிய கொடுக்கல்வாங்கல்களிலுள்ள அந்தளவுக்கு சமனான நிபந்தனைகளின் அடிப்படையில் கனிக்கப்படுகின்றன. ஆண்டின் இறுதியிலுள்ள நிலுவைகள் பெறப்படவில்லை. வட்டி நீங்கிய தீர்ப்பனவு காசு அடிப்படையில் நிகழ்கின்றது. சம்பந்தப்பட்ட எந்தத் தரப்பிடமிருந்தும் கிடைக்க வேண்டிய தொகைகள் அல்லது எந்தத் தரப்புக்கும் செலுத்த வேண்டிய தொகைகள் தொடர்பாக எந்தவித பிணையுத்தரவாதங்களும் இருக்கவில்லை. இந்தக் குறிப்பானது இந்த நிதிக் கூற்றுக்களுக்கான 19 ஆம் இலக்க குறிப்புடன் சேர்த்து வாசிகப்படுதல் வேண்டும்.

சம்பந்தப்பட்ட தரப்புகளுடனான கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான நியதிகளும் நிபந்தனைகளும்

சம்பந்தப்பட்ட தரப்பிடமிருந்து கிடைக்கும் வருமானம் மற்றும் ஏற்பட்ட செலவினம் அல்லது சம்பந்தப்பட்ட தரப்புகளிடமிருந்து வரும் கொள்வனவுகள் என்பன மிக நெருங்கிய கொடுக்கல்வாங்கல்களிலுள்ள அந்தளவுக்கு சமனான நிபந்தனைகளின் அடிப்படையில் கனிக்கப்படுகின்றன. ஆண்டின் இறுதியிலுள்ள நிலுவைகள் பெறப்படவில்லை. வட்டி நீங்கிய தீர்ப்பனவு காசு அடிப்படையில் நிகழ்கின்றது. சம்பந்தப்பட்ட எந்தத் தரப்பிடமிருந்தும் கிடைக்க வேண்டிய தொகைகள் அல்லது எந்தத் தரப்புக்கும் செலுத்த வேண்டிய தொகைகள் தொடர்பாக எந்தவித பிணையுத்தரவாதங்களும் இருக்கவில்லை. இந்தக் குறிப்பானது இந்த நிதிக் கூற்றுக்களுக்கான 19 ஆம் இலக்க குறிப்புடன் சேர்த்து வாசிகப்படுதல் வேண்டும்.

| | குழு | | ம.பொ.உ.ப. | |
|---|---|---|---|---|
| | 2017<br>ரூ. | 2016<br>ரூ. | 2017<br>ரூ. | 2016<br>ரூ. |
| **முக்கிய முகாமைத்து ஊழியர்களுக்கு செலுத்தப்பட்ட நஷ்டஈடு** | | | | |
| சம்பளங்கள் மற்றும் ஏனைய தொழில் சாரா நன்மைகள் | 3,171,000 | 3,293,250 | 1,722,500 | 1,730,000 |

# மத்திய பொறியியல் உசாதுணை பணியகம்

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி)

2017 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான

### 28 இடைநேர் பொறுப்புக்கள்

பின்வருவன தவிர, அறிக்கையிடும் திகதியில் ம.பொ.உ.ப. பணியகத்தில் அல்லது அதன் குழுவில் எந்தவித பொருண்மையான கடப்பாடுகளும் இடைநேர் பொறுப்புக்களும் காணப்படவில்லை.

### 28.1 கடப்பாடுகளும் இடைநேர் பொறுப்புக்களும்

**a) ம.பொ.உ.ப. பணியகத்திற்கு எதிராக தாக்கல்செய்யப்பட்ட சட்ட வழக்குகள்**

**- "வழக்கு இலக்கம்: SC (விஷேட LA) 48/2017 உயர் நீதிமன்றம்"**

MR/ 8748 என்ற இலக்கத்தின் கீழ் மாத்தளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தொடர்பான தீர்ப்பு 2014.05.16 ஆம் திகதி ம.பொ.உ.ப. ஏதிராக வழங்கப்பட்டதையடுத்து மத்திய மாகாணத்தின் மாகாண மேன்முறையீட்டு மேல் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யப்பட்டது (எச்.டீ.ஆர்.எஸ். தெத்தெனியா மற்றும் ஏ.ஜே.ஏ.பி. இந்திரசிறி ஆகியோர் தம்புள்ள கந்தளம வீதிக்கு அருகில் அமைந்துள்ள அவர்களின் இல்லத்திற்கு ஏற்பட்ட பாதிப்புகளுக்காக 8,000,000.00 ரூபா தொகையை நஷ்டஈடாக கோருகின்றனர். 3,000,000.00 ரூபா தொகையை நஷ்டஈடாக வழங்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. மேற்குறித்த தீர்ப்புக்கு எதிராக குயு 11/2015 என்ற வழக்கு இலக்கத்தின் கீழ் கண்டி மாகாண மேன்முறையீட்டு மேல் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யப்பட்டதையடுத்து அந்த நீதிமன்றம் மாத்தளை மாவட்ட நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை உறுதிசெய்து குறித்த மேன்முறையீட்டை தள்ளுபடிசெய்தது. ஆகையால், இந்த மாகாண மேன்முறையீட்டு மேல் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளது.

உரிய விதத்தில் ஆலோசனையை பெற்ற பின்னர் 2017.12.31 ஆம் திகதிற்கு ரூ. 3,000,000.00 நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**- வழக்கு இலக்கம் 296/நஷ்டஈடு - அம்பாறை மாவட்ட நீதிமன்றம்**

சி. சமந்த நந்த சில்வா ம.பொ.உ.ப. வாகன விபத்தினால் தனது மகன் இறந்ததற்காக 2,500,000.00 ரூபா தொகையை நஷ்டஈடாக கோருகின்றார்.

**- வழக்கு இலக்கம் 155/நஷ்டஈடு - கடுவளை மாவட்ட நீதிமன்றம்**

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் ம.பொ.உ.ப. நிர்மாண ஸ்தலத்திலிருந்து நிர்மாண மூலப்பொருட்கள் விழுந்ததால் தனது மின்பிறப்பாக்கி சேதமடைந்ததாக கூறி 1,664,677.00 ரூபா தொகையை நஷ்டஈடாக வழங்குமாறு கோரியுள்ளது. ம.பொ.உ.ப. வேலைகளுக்காக அத்தகைய மூலப்பொருட்களை பயன்படுத்தவில்லை. ஆதலால், ம.பொ.உ.ப. வழக்கை எதிர்த்து வாதாடுகின்றது.

**- வழக்கு இலக்கம்1564/13 - கொழும்பு மாவட்ட நீதிம ன்றம்**

பொறியியலாளர் டப்ளியூ.கே.பி.ஐ. ரொட்ரிகோ மான நஷ்டஈட்டு வழக்கை தாக்கல்செய்து 500,000,000.00 ரூபா தொகையை நஷ்டஈடாக வழங்குமாறு கோருகின்றார்.

**- வழக்கு இலக்கம் 1820/13 DMR - கொழும்பு மாவட்ட நீதிமன்றம்**

துவான் வம்ச காசிம் ம.பொ.உ.ப. பணியகத்திடமிருந்து தொழிலாளர் ஆகுசெலவாக 1,000,000.00 ரூபா தொகையை கோருகின்றார். .

**-வழக்கு இலக்கம் L 446 - வெலிமட மாவட்ட நீதிமன்றம்**

மொஹமட் அலி அப்துல் ஹமீட் என்பவர் வீ.அ.அ.ச. மற்றும் ம.பொ.உ.ப. ஆகியவற்றிலிருந்து ரூ. 4,108,000/- தொகையை நஷ்டஈடாக கோருகின்றார்.

**b) ம.பொ.உ.ப. தாக்கல் செய்த சட்டமுறையான வழக்குகள்**

**- "வழக்கு இலக்கம் ர்.ஊ.ஊ. யுசுடீ 208.ீ.2016 - வர்த்தக மேல் நீதிமன்றம், கொழும்பு "**

இந்த பணியகம் சோலா பவர் ரெக்னொலஜி (ப்ரைவட்) லிமிற்றட் நிறுவனத்திடமிருந்து மின்பிறக்கி இயந்திரம் தொடர்பில் 1,708,000 ரூபா நஷ்டஈட்டை கோரி வழக்கை தாக்கல் செய்துள்ளது.

**- "வழக்கு இலக்கம் DMR 2677/16 - கொழும்பு மாவட்ட நீதிமன்றம்"**

இந்த பணியகத்துடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் தனது பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு தவறியமை தொடர்பில் ரூ. 257,326.67 தொகையை நஷ்டஈடாக கோரி இந்த பணியகம் பொறியியலாளர் (திருமதி) கே.ஜி.எஸ். சந்மாலி என்பவருக்கு எதிராக ஒரு வழக்கை தாக்கல் செய்துள்ளது.

**ம.பொ.உ.ப. மற்றும் EN கருத்திட்டங்கள் ஆகியவற்றுக்கு இடையிலான நடுத்தீர்ப்பு**

"அம்பாந்தோட்டை மாவட்ட பொது வைத்தியசாலை நிர்மாண கருத்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்தை பொறுப்பேற்றுக்கொள்வது தொடர்பில் ம.பொ.உ.ப. மற்றும் EN கருத்திட்டங்கள் ஆகியவற்றுக்கு இடையில் எழுந்த பிணக்கு: வரவேண்டிய மொத்தத் தொகை ரூ.100,748,377/93 மற்றும் ரூ. 14,160,456/19 வட்டித் தொகை அடங்கலாக ரூ. 114,908,834/12 தொகை EN கருத்திட்டங்களிடமிருந்து கோரப்படுகின்றது. (நடுத்தீர்ப்பு அடிப்படையில் 2017.10.17 ஆம் திகதி தீர்வு வழங்கப்பட்டது)."

சட்ட ஆலோசனை பெற்ற பின்னர், கூறப்பட்ட வழக்குகள் பேரில் இந்த பணியகத்திற்கு எந்தவிதமான பொறுப்பும் கிடையாது என்பதில் முகாமைத்துவம் நம்பிக்கைகொண்டுள்ளது. ஆகையால், கணக்குகளில் நிதியேற்பாடு மேற்கொள்ளப்படவில்லை.

# மத்திய பொறியியல் உசாதுணை பணியகம்

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி)

2017 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான

**29 நிதி சார் ஆபத்து முகாமைத்துவம்**

**பொதுவான கண்ணோட்டம்**

நிதி சார் சாதனங்களிலிருந்து எழுகின்ற பின்வரும் ஆபத்துக்கள் குழுவுக்கு இருக்கின்றன.

கடன் ஆபத்து

ஒழித்துக்கட்டும் ஆபத்து

சந்தை ஆபத்து

இந்தக் குறிப்பானது மேற்குறித்த ஒவ்வொரு ஆபத்துக்கும் குழு உட்படுவது பற்றிய தகவல்களை வழங்குகின்றது. குழுவின் ஆபத்து முகாமைத்துவ குறிக்கோள்கள், கொள்கைகள், ஆபத்துக்களை அளவிட்டு முகாமை செய்வதற்கான நடபடிமுறைகள், குழுவின் மூலதன முகாமைத்துவம்.

**ஆபத்து முகாமைத்துவ வேலைச்சட்டகம்**

பணிப்பாளர்கள் குழுவின் ஆபத்து முகாமைத்துவ வேலைச்சட்டகத்தைத் தாபித்து மேற்பார்வை செய்வதற்கான ஒட்டுமொத்த பொறுப்பைக் கொண்டுள்ளது. சபை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவை தாபித்துள்ளது. குழுவின் ஆபத்து முகாமைத்துவ கொள்கைகளை தயாரித்து கண்காணிப்பது இந்தக் குழுவின் பொறுப்பாகும். இந்தக் குழு தனது செயற்பாடுகள் பற்றி பணிப்பபாளர்கள் சபைக்கு வழமையாக அறிக்கையிடும். முகாமைத்துவம் குழுவின் முகாமைத்துவ கொள்கைகளையும் நடைமுறைகளையும் அனுசரித்து எவ்வாறு கண்காணிக்கின்றது என்பதை இந்த கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு மேற்பார்வை செய்து, குழு எதிர்நோக்கும் ஆபத்துக்கள் தொடர்பான ஆபத்து முகாமைத்துவ வேலைச்சட்டத்தின் போதிய தன்மை பற்றி மீளாய்வு செய்யும். உள்ளகக் கணக்காய்வு பிரிவு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் மேற்பார்வை வகிபங்கிக்கு உதவும். உள்ளகக் கணக்காய்வு பிரிவு ஆபத்து முகாமைத்துவ கட்டுப்பாடுகளினதும் நடைமுறைகளினதும் வழமையான மற்றும் சமயோசித மீளாய்வுகளை மேற்கொள்ளும். அதன் பெறுபேறுகள் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவுக்கு அறிக்கையிடப்படுகின்றன.

**29.1 கடன் ஆபத்து**

ஒரு நிதி சார் சாதனத்திற்கான ஒரு வாக்கையாளர் தரப்பு அல்லது ஒரு நிகரொத்த தரப்பு தனது ஒப்பந்த கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு தவறுகின்ற பட்சத்தில் குழுவுக்கு ஏற்படும் நிதி ரீதியான நட்ட ஆபத்தே கடன் ஆபத்தாகும். இந்த ஆபத்து அடிப்படை ரீதியில் வாடிக்கையாளர் தரப்புகளிடமிருந்து குழுவுக்கு கிடைக்க வேண்டிய தொகைகளிலிருந்து எழும்.

**29.2 ஒழித்துக்கட்டும் ஆபத்து**

குழு ரொக்கப் பணத்தை அல்லது வேறு ஏதாவது நிதி சார்ந்த சொத்துக்களை வழங்குவதன் மூலமாக தீர்ப்பனவு செய்யப்படுகின்ற தனது நிதி சார்ந்த பொறுப்புக்களுடன் இணைந்த கடப்பாடுகளை நிறைவேற்றுவதில் கஷ்டத்தை எதிர்நோக்குவதால் வரும் ஆபத்தே ஒழித்துக்கட்டும் ஆபத்தாகும். ஒழித்துக்கட்டுவதை நிருவகிப்பதற்கான குழுவினது அணுகுமுறையானது ஏற்றுக்கொள்ள இயலாத நட்டங்கள் ஏற்படாமல், தனது பொறுப்புக்கள் வழமையான மற்றும் அழுத்தமான நிலைமைகளில் காணப்படுகின்ற போது அத்தகைய பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு எப்பொழுதும் போதிய ஒழித்துக்கட்டும் தன்மையை கொண்டுள்ளதா என்பதை கூடுமான வரையில் உறுதிசெய்துகொள்வதற்காக காணப்படுகின்றது.

**29.3 சந்தை ஆபத்து**

நிதி சார் சாதனங்களின் எதிர்கால காசுப்பாய்ச்சல்களின் நியாயப் பெறுமானம் சந்தை விலையில் ஏற்படும் மாற்றங்களினால் ஏற்றத்தாழ்வுகள் நிகழ்வதால் வரும் ஆபத்தே சந்தை ஆபத்தாகும். புறழ்வுகளை அனுகூலப்படுத்தும் அதே வேளையில், ஏற்றுக்கொள்ளக்கூடிய வழியலகுகளினுள் சந்தை ஆபத்துக்களை சமாளித்து கட்டுப்படுத்துவது சந்தை ஆபத்து முகாமைத்துவத்தின் குறிக்கோளாகும்.

பின்வரும் ஆபத்து வகைகள் சந்தை ஆபத்தில் உள்ளடங்கும்.

**வட்டி வீத ஆபத்து**

நிதி சார் சாதனங்களின் எதிர்கால காசுப்பாய்ச்சல்களின் நியாயப் பெறுமானம் சந்தை வட்டி வீதங்களில் ஏற்படும் மாற்றங்களினால் வரும் ஏற்றத்தாழ்வுகள் நிகழ்வதால் வரும் ஆபத்தே வட்டி வீத ஆபத்தாகும்.

**வெளிநாட்டு நாணயமாற்று ஆபத்து**

நிதி சார் சாதனங்களின் எதிர்கால காசுப்பாய்ச்சல்களின் நியாயப் பெறுமானம் வெளிநாட்டு நாணயமாற்று வீதங்களில் ஏற்படும் மாற்றங்களினால் வரும் ஏற்றத்தாழ்வுகள் நிகழ்வதால் வரும் ஆபத்தே வெளிநாட்டு நாணயமாற்று ஆபத்தாகும். வெளிநாட்டு ரீதியான இயக்கச்செயற்பாடுகளுடன் தொடர்புடைய குழுவின் இயக்கச்செயற்பாடுகளுடன் அடிப்படை ரீதியி; சம்பந்தப்படுகின்ற வெளிநாட்டு நாணயமாற்று வீதங்களிலுள்ள மாற்றங்களின் ஆபத்துக்கு குழு உட்படுகின்றது.

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல.<br>My No. | CEN/B/CECB/01/17/58 | ඔබේ අංකය<br>உமது இல.<br>Your No. | | දිනය<br>திகதி<br>Date | 31 December 2018 |

The Chairman,

Central Engineering Consultancy Bureau

**Report of the Auditor General on the Financial Statements of the Central Engineering Consultancy Bureau (CECB) and the Consolidated Financial Statements of the CECB and its Subsidiary for the year ended 31 December 2017 in terms of section 14(2)(c) of the Finance Act, No.38 of 1971**

---

Reference to my letter of even number dated 31 December 2018 on the above subject.

02. The Tamil version of the above mentioned report is sent herewith

W.P.C.Wickramaratne

Additional Auditor General

For Auditor General

Copies to - 01. Secretary, Ministry of Mahaweli Development and Environment

02. Secretary, Ministry of Finance and Mass Media

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.auditorgeneral.gov.lk

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය
எனது இல.
My No.
சீஈஎன;/பீ/சீஈசீபீ/01/17/58

මබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date
31 December 2018

தலைவர்,
மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகம்

**மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்தினதும் (சீஈசீபீ) சீஈசீபீ மற்றும் அதன் துணைக்கம்பனிகளினதும் 2017 திசெம்பர் 31 இல் இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுகள் மற்றும் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுகள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்-டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

---

மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்தினதும் (சீஈசீபீ) சீஈசீபீ மற்றும் அதன் துணைக்கம்பனிகளினதும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றுக்கள் மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்றுக்கள், உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றுக்கள், காசுப்பாய்ச்சல் கூற்றுக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1957 இன் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் 29(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சீஈசீபீ இன் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும், இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දුව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.auditorgeneral.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்தாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சீசீபீ இன் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சீசீபீ இன் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்தினை வழங்குவதற்கான போதுமானதும் பொருத்தமுமான கணக்காய்வு சான்றினை நான் பெற்றுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

2

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1. அபிப்பிராயம்**

**(அ) முனைப்பழியுள்ள அபிப்பிராயம் - தொகுதி**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பணியகம் மற்றும் அதன் துணைக்கம்பனிகளினதும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சல்களினையும் இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**(ஆ) முனைப்பழியுள்ள அபிப்பிராயம் - சீஈசீபீ**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து சீஈசீபீ இன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சல்களினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்**

**(அ) எஸ்எல்எவ்ஆர்எஸ் 7 - நிதிச்சாதனங்களின் வெளிக்காட்டல்கள்**

ஒவ்வொரு வகையான நிதி சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் கொண்டு செல்லும் மீதி நிதி நிலமை கூற்றில் வெளிகாட்டப்பட்டிருக்கவில்லை.

3

**(ஆ) எல்கேஏஎஸ் 01 - நிதிக்கூற்றுக்களை தயாரித்தல்**

நியமத்தின் பிரகாரம், நடைமுறை மற்றும் நடைமுறையல்லா பொறுப்புகளின் வகைப்படுத்தல் தொடர்பான கணக்கீட்டு கொள்கைகள் நிறுவனத்தினால் வெளிப்படுத்தப்படப்படவில்லை.

**(இ) எல்கேஏஎஸ் 12 - வருமாண வரிகள்**

நியமத்தின் 81(ஜி) பந்தியின் பிரகாரம், ஒவ்வொரு காலப்பகுதிக்கான நிதி நிலமை கூற்றில் அங்கிகரிக்கப்பட்ட பிற்போடப்பட்ட வரி சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பில் ஒவ்வொரு வகையான தற்காலிக வேறுபாடுகள், ஒவ்வொரு வகையான பயன்படுத்தப்படாத வரி நட்டங்கள் மற்றும் பயன்படுத்தப்படாத வரி செலவுகள் வெளிப்படுத்தல் வேண்டும். எனினும், நியமத்தின் ஏற்பாட்டின் அடிப்படையில் சீசீபீ இனால் வெளிப்படுத்தப்படப்படவில்லை.

**(ஈ) எல்கேஏஎஸ் 32 - நிதிச்சாதனங்கள் - முன்னிலைப்படுத்தல்**

நியமத்தின் பிரகாரம், நிறுவனத்தின் முற்கொடுப்பனவுகள் காசாகவோ ஏனைய நிதிச்சொத்துக்களாகவோ அல்லது அதற்கு சமனான ஒன்றாகவோ பெறப்படுவதில்லை. எனவே இவற்றை நிதிச்சொத்துக்களாக வெளிப்படுத்த முடியாது. எனினும், ரூபா.7,544,502 தொகை முற்கொடுப்பனவுகள் 2017 திசெம்பர் 31 இல் நிதிச்சொத்துக்களாக கருதப்பட்டுள்ளது.

### 2.2.2 கணக்கீட்டு குறைபாடுகள்

-----------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) இரண்டு தள அலுவலகங்கள் தொடர்பில் கடன்பட்டோர் செலவு மீதி, பிடிமான மீதிகள் மற்றும் வேலை ஆரம்பிப்பு முற்பணம் ஆகியவற்றின் கூட்டுத்தொகை ரூபா 11,433,011 சம்மந்தப்பட்ட வரவு மீதிகளுக்கு எதிராக தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தது. ஆகையினால், வியாபார மற்றும் ஏனைய வருமதிகள் அந்த தொகைகளினால் குறைத்துக்குறிப்பிடப்பட்டிருந்தது. அதேபோல், பத்தரமுல்லை தள அலுவலத்தின் கடன்கொடுத்தோர் வரவு மீதி தொகை ரூபா 23,419,945 செலவு மீதிக்கு எதிராக தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தது. ஆகையினால், வியாபார மற்றும் ஏனைய சென்மதிகள் அந்த தொகைகளினால் குறைத்துக்குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஆ) 2012 ஆம் ஆண்டு வீதி செயல்திட்டத்தை முன்னெடுப்பதற்காக மூலதன மானியமாக பொருளாதார அபிருத்தி அமைச்சிடம் இருந்து பெறப்பட்ட ரூபா 3,351 மில்லியன் பெறுமதியான நிலையான சொத்துகள் ஆதனம், பொறி மற்றும் உபகரணம் மற்றும் அரச மானியமாக கணக்கெடுக்கப்பட்டிருக்கவில்லை. ஏவ்றாயினும், முன்னைய

ஆண்டின் அறிக்கையின் பதிலில் 01.01.2017 இல் ஆதனம் மற்றும் இயந்திரங்களை மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், சீசீபீ இனால் இந்த சொத்துகளை மீள்மதிப்பீடு செய்வதற்கு 2017 ஆம் ஆண்டின் முடிவில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

2017 திசெம்பர் 31 இல் இரண்டு பிரிவுகளின் பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகளின் கூட்டுத்தொகை முறையே ரூபா 1,703,121,917 மற்றும் ரூபா 642,350,707 நான்கு வருடங்களிற்கு மேலாக தீர்ப்பனவுசெய்யப்படாது நிலுவையாக தொடர்ந்தும் காணப்பட்டதுடன் சர்வதேச பிரிவின் பெறவேண்டிய மீதி தொகை ரூபா 2,119,986 இரண்டு வருடங்களுக்கு மேலாக வருமதியாக தொடர்ந்து காணப்படுகின்றது.

### 2.2.4 இனங்காணப்படாத வேறுபாடுகள்

வாடிக்கையாளருக்கு கொடுக்க வேண்டிய தொகையாக மத்திய மாகாண பொறியியல் பெறுகை நிர்மாண பிரிவின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட மீதிக்கும் சீசீபீ இனால் வழங்கப்பட்ட விபரமான அட்டவணைக்கும் இடையே ரூபா 17,095,967 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 2.2.5 கணக்காய்விற்கு போதிய சான்றுகளின்மை.

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோரின் மீதிகளின் கூட்டுத்தொகை முறையே ரூபா 8,475,707,071 மற்றும் ரூபா 5,338,238,467 என்பவற்றிற்கான உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்கு கிடைக்கபெறவில்லை.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1. நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான சீசீபீ மற்றும் தொகுதியின் தொழிற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான முறையே ரூபா 439,663,403 மற்றும் ரூபா 524,220,763 ஆன வரிக்கு பின்னரான தேறியலாபத்துடன் ஒப்பிடுகையில் முறையே ரூபா 401,305,256 மற்றும் ரூபா

522,183,174 ஆன வரிக்கு பின்னரான தேறியலாபத்தை விளைவித்திருந்தமையால் நிதிசார் விளைவுகளில் முறையே ரூபா 38,358,147 மற்றும் ரூபா 2,037,589 பற்றாக்குறையொன்றினைச் சுட்டிக்காட்டுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ஏனைய வருமானம் ரூபா 93,171,190 இனால் குறைவடைந்தமையும் நிர்வாகச் செலவுகள் ரூபா 116,615,298 இனால் அதிகரித்தமை சீஈசீபீயின் இந்த பற்றாக்குறைக்கு பிரதான காரணமாக தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த நான்கு ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்தபோது 2013 ஆம் ஆண்டில் ரூபா 328,222,120 ஆக இருந்த வரிக்கு பின்னரான தேறியலாபம் 2017 ஆம் ஆண்டு ரூபா 401,305,256 ஆகியிருந்தது. ஊழியர் ஊதியம், பெறுமானத்தேய்வு மற்றும் வரிவிதிப்பு என்பற்றை சீராக்கிய பின்னர் மீளாய்வாண்டிற்கான சீஈசீபீயின் பெறுமதிச் சேர்க்கை ரூபா 2,356 மில்லியனாக இருந்தது. முன்னைய ஆண்டுக்கான பெறுமதிச் சேர்க்கை ரூபா 2,006 மில்லியனாக இருந்தது.

### 3.2. பகுப்பாய்வு நிதிசார் மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சீஈசீபீ அதன் 1350 பதவியிணியின் பலம் மற்றும் ரூபா 21,856 மில்லியன் மொத்தச் சொத்துக்கள் தளத்தினைப் பயன்படுத்துவதன் மூலம் ரூபா 756 மில்லியன் வரிக்கு முன்னரான தேறிய இலாபத்தினை மீளாய்வாண்டின் போது உழைத்திருந்தது. ஆகையால், மீளாய்வாண்டின் போது சொத்துக்களின் மீதான வருவாய் 3.46 சதவீதமாக இருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் செயற்பாட்டு இலாப எல்லை மற்றும் தேறிய இலாப எல்லை முறையே 3.4 சதவீதம் மற்றும் 3.04 சதவீதமாக காணப்படுவதுடன், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த இலாப எல்லைகள் முறையே 2.5 சதவீதத்தினால் மற்றும் 1.2 சதவீதத்தினால் குறைவடைந்தும் காணப்பட்டன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1. செயலாற்றல்

சீஈசீபீ இன் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், சர்வதேசப் பிரிவின் நிறுவன இலக்குகளான வாடிக்கையாளர் திருப்தியினை உச்சப்படுத்தல், உட்கட்டமைப்பு அபிவிருத்தியினை நம்பிக்கையுடனும் எதிர்பார்ப்புடனும் மேற்கொள்ளுதல், மற்றும் கிழக்கு ஆபிரிக்க பிராந்தியத்தின் நீர்வள அபிவிருத்தி ஆகியன மீளாய்வாண்டில் அடையப்பட்டிருக்கவில்லை.

### 4.2. சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களிற்கு உத்தியோகபூர்வ இல்லங்கள் கையளிக்கப்பட்டிருந்தது. இவர்களால் முன்னைய ஆண்டிற்கான மாத வாடகை செலுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், அவர்களில் ஒருவரால் 2004 ஆம் ஆண்டில் இருந்து மாத வாடகை செலுத்தியிருக்கவில்லை.

(ஆ) பொதுத் திறைசேரியிடமிருந்து முன் அனுமதியினைப் பெற்றுக்கொள்ளாது சீஈசீபீ இன் பணிப்பாளர் சபை அதன் பதவியணியினருக்கு பல்வேறு ஊக்குவிப்பு திட்டங்களினை அங்கீகரித்திருந்தது. 2017 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட அவ்வாறான ஊக்குவிப்புப் படிகளின் மொத்தத் தொகை ரூபா 67,027,249 ஆகக் காணப்பட்டது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1. பெறுகைகள் மற்றும் ஒப்பந்த நிர்வாகம்

#### 5.1.1 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சீஈசீபீ இன் நிதி அதிகாரக் கையளிப்பின் பிரகாரம், ரூபா 2 மில்லியனுக்கு மேற்பட்ட பெறுகைகளுக்கு போட்டி விலைக்கேள்வி முறை பயன்படுத்தப்பட வேண்டும். எனினும், மேற்குறிப்பிட்ட எல்லையை மீறி 6 பெறுகைகளுக்கு தலைமை அலுவலகத்தினால் வாங்குதல் முறை பயன்படுத்தப்பட்டுள்ளது.

(ஆ) பெறுகை கையேடுட்டின் 32 ஆம் இலக்க குறைநிரப்பின் பிரகாரம், நேரடி ஒப்பந்தஞ் செய்தல் முறை மூலம் மேற்கொள்ளப்பட்ட பெறுகைகள் தொடர்பில் குழு அங்கத்தவர்களுக்கு கொடுப்பனவுகள் செலுத்தப்படலாகாது. எனினும், பெறுகை வழிகாட்டு நெறிகளுக்கு முரணாக பெறுகைக் குழுவுக்கான கட்டணமாக ரூபா 53,000 மற்றும் தொழினுட்ப மதிப்பீட்டுக் குழுவுக்கான கட்டணமாக ரூபா 16,000 இனையும் சீஈசீபீ செலுத்தியுள்ளது.

(இ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இந்த செயற்திட்டங்கள் முழுமையாகப் பூர்த்தியாக்கப்பட்டிருந்த போதிலும், பொறியியல் பெறுகை நிர்மாண பிரிவின் 13 செயற்திட்டங்கள் தொடர்பில் கணக்குகளிலுள்ள ரூபா 22,067,146 கூட்டுத்தொகையான அறவிடப்படாத வேலை ஆரம்பிப்பு முற்பணங்கள் தொடர்ந்தும் கணக்குகளில் காணப்பட்டது. எவ்வாறாயினும், நிர்மாணப் பயிற்சி

மற்றும் அபிவிருத்திக்கான நிறுவகத்தினால் விநியோகிக்கப்பட்ட ஐஊஞயுனு.்.ளுடீனு.்.02 ஆம் இலக்க நியம விலைமனுக்கோரல் ஆவணத்தின் ஒப்பந்த நிபந்தனைகளின் 03 ஆம் பிரிவின் 14.2(ஆ) இலக்க உபபிரிவின் பிரகாரம், 90 சதவீத பூர்த்தியாக்கல் கட்டத்தினை செயற்திட்டம் அடைவதற்கு முன்னர் வேலை ஆரம்பிப்பு முற்பணங்கள் முழுமையாக அறவிடப்படல் வேண்டும்.

## 5.2. பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானங்களிற்கு இடையில் 44 சதவீதத்தில் இருந்து 137 சதவீதம் வரையான வீச்சில் குறிப்பிடத்தக்களவு முக்கிய முரண்பாடுகள் அவதானிக்கப்பட்டமையால், பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதை சுட்டிக்காட்டுகின்றது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்குக் காலம் மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்தின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் | அவதானிப்புக்கள் |
| --- | --- |
| (அ) கணக்கீடு | தளத்தில் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொருட்கள் மற்றும் திருப்பியனுப்பப்பட வேண்டிய இருப்புக்கள் நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) சொத்து முகாமைத்துவம் | அமைச்சிடமிருந்து பெறப்பட்ட நிலையான சொத்துக்கள் கணக்குகளுக்கு கொண்டுவரப்படவில்லை. |
| (இ) வருமான முகாமைத்துவம் | ஆலோசனை சேவைகளுடன் தொடர்புடைய உண்மையாக நிறைவுசெய்யப்பட்ட வேலைகள் நிதிக்கூற்றுக்களுக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

ஏச்.எம்.காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

# ஒத்தீட்டு வருமான கூற்றுக்கள்

## மத்திய பொறியியல் உசாதுணை பணியகம்

### முழுமையான வருமான கூற்றுக்கள்

திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான

| | 2013 | | 2014 | | 2015 | | 2016 | | 2017 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | குழு | ம.பொ.உ.ப. | குழு | ம.பொ.உ.ப. | குழு | ம.பொ.உ.ப. | குழு | ம.பொ.உ.ப. | குழு | ம.பொ.உ.ப. |
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| வருமானம் | 15,132,718,158 | 15,131,164,037 | 13,401,582,667 | 13,259,699,366 | 11,423,636,967 | 10,710,472,734 | 11,674,570,503 | 10,333,280,821 | 15,209,624,006 | 13,195,637,498 |
| விற்பனை ஆகுசெலவு | (13,280,839,809) | (13,414,329,871) | (11,487,873,150) | (11,656,600,792) | (9,679,902,097) | (9,448,860,733) | (9,853,816,338) | (9,179,818,923) | (13,312,355,493) | (12,075,714,656) |
| **முழு மொத்த இலாபம்** | **1,851,878,349** | **1,716,834,166** | **1,913,709,517** | **1,603,098,574** | **1,743,734,870** | **1,261,612,002** | **1,820,754,165** | **1,153,461,898** | **1,897,268,513** | **1,119,922,842** |
| ஏனைய வருமானம் | 153,445,158 | 144,727,925 | 147,476,316 | 169,674,146 | 168,515,920 | 173,393,789 | 218,971,425 | 272,930,388 | 134,210,273 | 179,759,198 |
| நிருவாக ஆகுசெலவு | (1,255,752,763) | (1,151,711,425) | (1,189,348,793) | (1,033,810,083) | (1,142,902,688) | (773,676,196) | (1,151,207,809) | (601,403,438) | (1,395,814,503) | (718,018,736) |
| விற்பனை, பகிர்ந்தளிப்பு செலவுகள் | (335,210,717) | (321,479,322) | (314,175,035) | (314,175,035) | (222,249,855) | (220,503,209) | (222,937,513) | (213,573,602) | (140,237,585) | (131,766,570) |
| **இயக்கச்செயற்பாடுகளிலிருந்து வரும் பெறுபேறுகள்** | **414,360,027** | **388,371,344** | **557,662,005** | **424,787,602** | **547,098,247** | **440,826,385** | **665,580,269** | **611,415,245** | **495,426,698** | **449,896,734** |
| நிதி சார்ந்த வருமானம் | 217,808,170 | 213,907,634 | 154,451,475 | 145,235,138 | 168,766,491 | 150,007,977 | 282,598,968 | 210,668,182 | 445,958,333 | 316,507,931 |
| நிதி சார்ந்த கட்டணங்கள் | (22,154,752) | (17,532,829) | (27,890,447) | (17,589,492) | (16,207,048) | (8,789,218) | (22,135,246) | (6,263,475) | (26,342,723) | (9,753,126) |
| **தேறிய நிதி வருமானம்** | 195,653,418 | 196,374,805 | 126,561,028 | 127,645,646 | 152,559,443 | 141,218,758 | 260,463,722 | 204,404,707 | 419,615,611 | 306,754,804 |
| **வருமான வரிக்கு முன்னருள்ள இலாபம்** | **610,013,445** | **584,746,149** | **684,223,033** | **552,433,247** | **699,657,690** | **582,045,143** | **926,043,990** | **815,819,952** | **915,042,308** | **756,651,538** |
| வருமான வரி | (267,791,716) | (256,524,029) | (271,949,391) | (243,267,389) | (287,358,436) | (250,935,705) | (401,823,227) | (376,156,549) | (392,859,134) | (355,346,282) |
| **குறித்த ஆண்டிற்கான தேறிய இலாபம்** | **342,221,729** | **328,222,120** | **412,273,642** | **309,165,858** | **412,299,253** | **331,109,438** | **524,220,763** | **439,663,403** | **522,183,174** | **401,305,256** |
| ஏனைய முழுமையான வருமானம் | - | - | - | - | 13,927,098 | 13,927,098 | 20,297,204 | 20,282,110 | (6,529,540) | (5,919,064) |
| **குறித்த ஆண்டிற்கான மொத்த முழுமையான வருமானம்** | 342,221,729 | 328,222,120 | 412,273,642 | 309,165,858 | 426,226,351 | 345,036,536 | 544,517,967 | 459,945,513 | 515,653,634 | 395,386,192 |



46

# ஒத்தீட்டு வருமான கூற்றுக்கள்

## மத்திய பொறியியல் உசாதுணை பணியகம்

### நிதி நிலைக் கூற்று

திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான

| | 2013 | | 2014 | | 2015 | | 2016 | | 2017 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | குழு | ம.பொ.உ.ப. | குழு | ம.பொ.உ.ப. | குழு | ம.பொ.உ.ப. | குழு | ம.பொ.உ.ப. | குழு | ம.பொ.உ.ப. |
| | ரு. | ரு. | ரு. | ரு. | ரு. | ரு. | ரு. | ரு. | ரு. | ரு. |
| **சொத்துக்கள்** | | | | | | | | | | |
| **நடைமுறையல்லாத சொத்துக்கள்** | | | | | | | | | | |
| சொத்துக்கள், | 3,362,855,558 | 3,134,280,527 | 3,298,246,727 | 2,896,020,996 | 3,088,678,195 | 2,686,829,682 | 2,905,911,035 | 2,509,023,699 | 2,852,702,138 | 2,372,710,383 |
| முதலீடுகள் | 38,326,397 | 38,326,417 | 34,521,663 | 44,521,683 | 39,477,863 | 44,253,587 | 38,489,824 | 46,957,402 | 51,117,849 | 61,117,869 |
| **மொத்த நடைமுறையல்லாத சொத்துக்கள்** | **3,401,181,955** | **3,172,606,944** | **3,332,768,390** | **2,940,542,679** | **3,128,156,058** | **2,731,083,269** | **2,944,400,859** | **2,555,981,101** | **2,903,819,987** | **2,433,828,252** |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | | | | | | | |
| பொருட்பதிவேடுகள் | 746,822,316 | 414,331,509 | 661,739,053 | 320,879,617 | 594,682,065 | 92,491,334 | 785,057,154 | 16,857,933 | 832,849,205 | **10,638,501** |
| வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகள் | 13,034,273,723 | 9,465,446,814 | 8,582,269,469 | 9,581,357,319 | 8,937,778,990 | 9,443,009,084 | 11,485,838,621 | 11,013,443,138 | 14,779,002,414 | **14,400,921,345** |
| குறுங்கால முதலீடுகள் | 1,769,259,420 | 1,728,581,897 | 2,753,124,096 | 2,457,313,968 | 3,341,850,862 | 2,570,978,949 | 4,081,356,846 | 3,035,639,354 | 4,094,534,947 | **2,983,463,922** |
| காசும் காசு ஒப்புரவுகளும் | 399,435,851 | 310,353,679 | 620,947,793 | 449,363,357 | 801,392,970 | 622,427,835 | 648,439,480 | 440,730,586 | 691,640,433 | **461,781,166** |
| கம்பனிகளுக்கிடையிலான நடைமுறை கணக்குகள் | - | 1,083,035,301 | - | 1,278,026,970 | - | 1,147,466,029 | - | 1,371,069,905 | - | **1,565,621,738** |
| **மொத்த நடைமுறைச் சொத்துக்கள்** | **15,949,791,310** | **13,001,749,200** | **12,618,080,411** | **14,086,941,231** | **13,675,704,887** | **13,876,373,232** | **17,000,692,101** | **15,877,740,916** | **20,398,026,998** | **19,422,426,671** |
| **மொத்தச் சொத்துக்கள்** | **19,350,973,265** | **16,174,356,144** | **15,950,848,801** | **17,027,483,910** | **16,803,860,945** | **16,607,456,501** | **19,945,092,960** | **18,433,722,017** | **23,301,846,985** | **21,856,254,923** |
| **ஒப்புரவும் பொறுப்புக்களும்** | | | | | | | | | | |
| பங்களிப்பு செய்யப்பட்ட மூலதனம் | 500,000 | 500,000 | 500,000 | 500,000 | 500,000 | 500,000 | 500,000 | 500,000 | 500,000 | 500,000 |
| மூலதன ஒதுக்கீடுகள் | 3,028,000 | 3,028,000 | 3,028,000 | 3,028,000 | 3,028,000 | 3,028,000 | 3,028,000 | 3,028,000 | 3,028,000 | 3,028,000 |
| பிடித்துவைக்கப்பட்ட சம்பாத்தியம் | 4,113,976,942 | 4,090,165,425 | 4,526,250,584 | 4,399,331,283 | 4,952,476,935 | 4,744,367,819 | 5,496,994,903 | 5,204,313,332 | 6,012,648,538 | 5,599,699,524 |
| **மொத்த ஒப்புரவுகள்** | **4,117,504,942** | **4,093,693,425** | **4,529,778,584** | **4,402,859,283** | **4,956,004,935** | **4,747,895,819** | **5,500,522,903** | **5,207,841,332** | **6,016,176,538** | **5,603,227,524** |
| **நடைமுறையல்லாத பொறுப்புக்கள்** | | | | | | | | | | |
| குத்தகை கடன்கள் | 7,199,960 | 604,418 | 888,699 | - | - | - | - | - | - | - |
| ஓய்வூதிய நன்மைகள் கடப்பாடு | 204,004,898 | 204,004,898 | 182,165,317 | 182,165,317 | 177,457,833 | 176,438,911 | 158,063,895 | 156,587,664 | 165,820,347 | 161,242,343 |
| பிற்போடப்பட்ட வரி | 228,141 | - | 6,477,006 | - | 17,617,814 | - | 21,820,955 | - | 22,581,183 | - |
| **மொத்த நடைமுறையல்லாத பொறுப்புக்கள்** | **211,432,999** | **204,609,316** | **189,531,022** | **182,165,317** | **195,075,647** | **176,438,911** | **179,884,851** | **156,587,664** | **188,401,530** | **161,242,343** |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | | | | | | | | |
| வர்த்தக மற்றும் ஏனைய கொடுமதிகள் | 14,451,694,061 | 11,333,291,954 | 10,485,704,301 | 11,724,834,406 | 10,877,454,823 | 10,931,756,058 | 13,293,081,842 | 12,120,903,654 | 16,124,875,069 | 15,156,893,565 |
| செலுத்த வேண்டிய வருமான வரி | 546,972,887 | 531,111,429 | 737,897,410 | 717,039,064 | 774,441,715 | 751,365,709 | 971,603,364 | 948,389,368 | 972,393,849 | 934,891,491 |
| குத்தகை கடன்கள் | 23,368,376 | 11,650,020 | 7,937,483 | 585,840 | 883,827 | - | - | - | - | - |
| **மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள்** | **15,022,035,324** | **11,876,053,403** | **11,231,539,196** | **12,442,459,310** | **11,652,780,363** | **11,683,121,770** | **14,264,685,206** | **13,069,293,022** | **17,097,268,918** | **16,091,785,056** |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | **15,233,468,323** | **12,080,662,719** | **11,421,070,218** | **12,624,624,627** | **11,847,856,010** | **11,859,560,681** | **14,444,570,057** | **13,225,880,686** | **17,285,670,447** | **16,253,027,399** |
| **மொத்த ஒப்புரவுகளும் பொறுப்புக்களும்** | **19,350,973,265** | **16,174,356,144** | **15,950,848,801** | **17,027,483,910** | **16,803,860,945** | **16,607,456,501** | **19,945,092,960** | **18,433,722,017** | **23,301,846,985** | **21,856,254,923** |

*அடைப்புக் குறிகளுக்குள்ளிருக்கும் இலக்கங்கள் கழித்தலகளை சுட்டிக்காட்டும்*

# மத்திய பொறியியல் உசாதுணை பணியகம்

cecb

மத்திய பொறியியல் உசாதுணை பணியகம்

## எமது வரலாறு

மத்திய பொறியியல் உசாதுணை பணியகம் (ம.பொ.உ.ப.) நீர் வளங்கள் அபிவிருத்திக் கருத்திட்டங்களின் நிமித்தம் பல துறை சார்ந்த பொறியியல் உசாதுணை சேவைகளை வழங்கும் முகமாக 1973 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12 ஆம் திகதி தாபிக்கப்பட்டது. இந்தப் பணியகம் 1957 இன் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட ஒரு நியதிச்சட்ட சபையாகும்.

இலங்கையிலும், வெளிநாடுகளிலும் தேசிய பொறியியல் உசாதுணைக்கும் நிர்மாண சிறப்புக்குமான உயர்ந்த ஒரு உன்னத வர்த்தக நிறுவனமாக விளங்குவதால், ம.பொ.உ.ப. வர்த்தக ரீதியில் வெற்றிகரமான முறையில் சுயமாக நிதியீட்டும் அரசுக்கு சொந்தமான ஒரு நிறுவனம் என்பதால் ஒரு 44 வருட நீண்ட கால திடமான பொறியியல் செயலாற்றுகை வரலாற்றைக் கொண்டுள்ளது. எமது பொறியியல் அடிப்படைகள் இலங்கையிலும் மற்றும் வெளிநாடுகளிலும் பல சமூகப் பொருளாதார உட்கட்டமைப்பு பிரிவுகளின் அபிவிருத்திற்கு பொறியியல் நிபுணர்களை உள்ளீர்த்ததைத் தொடர்ந்து அன்றிலிருந்து விரிவடைந்து வளர்ந்துள்ள பாரிய பல நோக்கு மகாவலி அபிவிருத்தி உட்கட்டமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டத்தில் உறுதியாக நிலைத்திருக்கின்றன.


ஒரு சில அணைக்கட்டுகள், சுரங்கவழிகள், நீர்வலு பொறியியல் (இலங்கை ∴கிழக்கு ஆபிரிக்கா) நீர்ப்பாசன, நீர் விநியோக∴துப்புரவேற்பாடு மற்றும் சுற்றாடல் பொறியியல், பெருந்தெருக்கள், பாலங்கள், புகையிரத வீதிகள், விமான நிலையங்கள், உயர் கட்டிடங்கள், சாதாரண கட்டிடங்கள் மற்றும் நகர உட்கட்டமைப்பு வசதிகள், பல்கலைக்கழக வசதிகள், ஆய்வுகூட வசதிகள், சுகாதாரப் பராமரிப்பு, கடலோர மற்றும் கடல் பகுதி, பாதுகாப்பு உட்கட்டமைப்பு வசதி, வெளிநாடுகளிலுள்ள இலங்கை உயர் ஸ்தானிகர் அலுவலகங்கள் என்பவற்றின் நிர்மாணத்தில், குறிப்பிட்டுக் கூறக்கூடிய அளவுக்கு எமது பணியக வலிமைகளும் ஆற்றல்களும் உள்ளடங்குகின்றன. சுற்றாடல் ஆய்வுகள், இயற்கை வளங்கள் முகாமைத்துவம், மீள்குடியேற்ற சமூக பொருளாதார அம்சங்கள், சமுதாய அபிவிருத்தி **ICT** வலையமைப்பு முதலியனவும் எமது பல துறை நிபுணத்துவங்களில் உள்ளடங்குகின்றன. உண்மையில், அனைத்து வகையான பொறியியல் வடிவமைப்புகளுக்கும், உசாதுணை சார்ந்த தேவைகளுக்கும் நிர்மாணம் சார்ந்த தேவைகளுக்கும் எமது பணியகம் தான் ஒரேயொரு நிறுவனமாக விளங்குகின்றது.

நாம் யுத்த காலத்திற்கு பின்னர் எமது மக்களினது அபிலாஷைகளையும் மாற்றங்களையும் நோக்கிய எமது தேசிய கடப்பாடுகளை தொடர்ந்தும் நிறைவேற்றி வந்துள்ளோம். எமது பொன் விழா நெருங்கும் தருனத்தில் நாம் எமது நிலையை, குறித்த கைத்தொழிலில் மிகவும் வலிமையாக பலப்படுத்தியிருக்கின்றோம். ம.பொ.உ.ப. தனது பரிச்சயமான பல பிரிவு நிபுணத்துவத்தையும் உயர் பொறியியல் சார் ஆற்றல்களையும் கொண்டு கவர்ச்சிமிகு அரச தனியார் உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கும் அதே வேளையில் சுற்றாடலை பாதுகாப்பதில் காணப்படும் தேசிய சவால்களை மேலும் எதிர்கொள்வதற்கான தனது முயற்சிகளை மும்மடங்குகளாக மேற்கொள்ளும்.

## இது வரை நகர்ந்த எமது பயணம்

- எமது பயணம் நீர் வளம் மற்றும் நீர்வலு மின்னுற்பத்திக் கருத் திட்டங்களுக்கான ஒரு நிபுணத்துவ அம்சமாக 1973 ஆம் ஆண்டு ஆரம்பமாகியது.
- மகாவலி துரித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் நிறைவு செய்யப் பட்டதன் பின்னர் எமது நிறுவனம் நிர்மாண உசாதுணைப் பிரிவுக்கு பல்லினத்துவம் அடைந்து நகர்ந்தது.
- மனித மூலதனத்திற்கு சர்வதேச ரீதியில் நன்மதிப்பை கொடுக்கின்ற வெளிநாட்டுக் கருத் திட்டங்களை மேற்கொண்டு நிறைவேற்றும் பொருட்டு ம.பொ.உ.ப. கிளைகள் மேலும் கடல் கடந்து விஸ்தரிக்கப் பட்டன.
- 2016 ஆம் ஆண்டு ம.பொ.உ.ப. நிர்மாண வர்த்தக நடவடிக்கையிலிருந்து நீங்கி, தனது அந்த நடவடிக்கையை தனக்கு முற்றிலும் சொந்தமான சென்ட்ரல் இன்ஜினியரிங் சேர்விஸெஸ் (ப்ரைவட்) **CESL** லிமிற்றட் எனும் நிறுவனத்திற்கு ஒப்படைக்கும் நிமித்தம் ஒரு சிறந்த தீர்மானத்தை எடுத்தது.
- இன்று, ம.பொ.உ.ப. அரச மற்றும் தனியார் துறை வாடிக்கையாளர் தரப்புகளுக்கு முழுமையாக போதிய பொறியியல் சார்ந்த உசாதுணை சேவையையும் அதனுடன் சம்பந்தப்பட்ட ஏனைய சேவைகளையும் வழங்கும் தரப்பாக தொழிற்பட்டு வருகின்றது.

## பிரதான பிரிவுகள்



# 2017 ஆம் ஆண்டின் முக்கிய குறிப்புகள்

## 2017 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் முடிவடையும் வரை அடைந்த சாதனைகள் - உசாதுணைப் பிரிவு

2017 ஆம் ஆண்டில் பொறுப்பேற்று நிறைவேற்றிய புதிய உசாதுணைக் கருத்திட்டங்களின் எண்ணிக்கை

**83**

உசாதுணை சேவைகளின் மொத்தப் பெறுமானம்

இ.ரூ. **1,574** மில்லியன்

2017 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்ட உசாதுணைக் கருத் திட்டங்களின் எண்ணிக்கை

**238**

உசாதுணை சேவைகளின் மொத்தப் பெறுமானம்

இ.ரூ. **1,381** மில்லியன்

### அங்குணகொலபெலஸ்ஸ உத்தேச சிறைச்சாலை கட்டிடத்தொகுதி நிர்மாணம்

| கருத்திட்டத்தின் மொத்த பெறுமானம் : | மொத்த உசாதுணை பெறுமானம்: | பௌதீக முன்னேற்றம்: |
|---|---|---|
| இ.ரூ. 3,300 மில்லியன் | இ.ரூ. 159 மில்லியன் | Completed |



### மாத்தறை - கதிர்காமம் புகையிரதவீதி விரிவாக்கல் கருத்திட்டம்

| கருத்திட்டத்தின் மொத்த பெறுமானம் : | மொத்த உசாதுணை பெறுமானம்: | பௌதீக முன்னேற்றம்: |
|---|---|---|
| இ.ரூ. 40 billion | இ.ரூ. 645 மில்லியன் | 80% |



தென் அதிவேக வீதி விரிவாக்கல் கருத்திட்டம் **(ESEP)** - மாத்தறையிலிருந்து பெலியத்த வரை மற்றும் மாத்தளையிலிருந்து அம்பாந்தோட்டை வரை

| கருத்திட்டத்தின் மொத்த பெறுமானம் : | மொத்த உசாதுணை பெறுமானம்: | பௌதீக முன்னேற்றம்: |
|---|---|---|
| இ.ரூ. 255 billion | இ.ரூ. 280 மில்லியன் | 55% |





அக்குரேகொட பாதுகாப்பு தலைமை அலுவலக கட்டிடத்தொகுதி **(DHQC)**

| கருத்திட்டத்தின் மொத்த பெறுமானம் : | மொத்த உசாதுணை பெறுமானம்: | பௌதீக முன்னேற்றம்: |
|---|---|---|
| இ.ரூ. 43 billion | இ.ரூ. 1,557 மில்லியன் | 77% |





## ப்ரோட்லேண்ட் நீர்வலு மின்னுற்பத்தி கருத்திட்டம்

| கருத்திட்டத்தின் மொத்த பெறுமானம் : | மொத்த உசாதுணை பெறுமானம்: | பௌதீக முன்னேற்றம்: |
|---|---|---|
| இ.ரூ. 11,480 மில்லியன் | இ.ரூ. 697 மில்லியன் | 44% |



## களுகங்கை தல வேலைகள் அபிவிருத்தி கருத்திட்டம்

| கருத்திட்டத்தின் மொத்த பெறுமானம் : | மொத்த உசாதுணை பெறுமானம்: | பௌதீக முன்னேற்றம்: |
|---|---|---|
| இ.ரூ. 12,000 மில்லியன் | இ.ரூ. 700 மில்லியன் | 85% |



## கொழும்பு மாவட்ட செயலக கட்டிடத்தொகுதி

| கருத்திட்டத்தின் மொத்த பெறுமானம் : | மொத்த உசாதுணை பெறுமானம்: | பௌதீக முன்னேற்றம்: |
|---|---|---|
| இ.ரூ. 2,515 மில்லியன் | இ.ரூ. 88 மில்லியன் | 65% |





## மாவட்ட மட்ட விளையாட்டு கட்டிடத்தொகுதிகள் நிர்மாணம் - பொலன்னறுவை

| கருத்திட்டத்தின் மொத்த பெறுமானம் : | மொத்த உசாதுணை பெறுமானம்: | பௌதீக முன்னேற்றம்: |
|---|---|---|
| இ.ரூ. 81 மில்லியன் | இ.ரூ. 16 மில்லியன் | Completed |





பொலன்னறுவை தேசிய பாடசாலை நிர்மாணம் - கட்டம் 1

| கருத்திட்டத்தின் மொத்த பெறுமானம் : | மொத்த உசாதுணை பெறுமானம்: | பௌதீக முன்னேற்றம்: |
|---|---|---|
| இ.ரூ. 8.5 மில்லியன் | இ.ரூ. 8.5 மில்லியன் | 99% |




மத்திய அதிவேக வீதி கருத்திட்டம் - கட்டம் 2

| கருத்திட்டத்தின் மொத்த பெறுமானம் : | மொத்த உசாதுணை பெறுமானம்: | பௌதீக முன்னேற்றம்: |
|---|---|---|
| இ.ரூ. 137 மில்லியன் | இ.ரூ. 280 மில்லியன் | 13% |



## கொழும்பு 3 **AVIC** வதிவிட நிர்மாண கருத்திட்டம்

| கருத்திட்டத்தின் மொத்த பெறுமானம் : | மொத்த உசாதுணை பெறுமானம்: | பௌதீக முன்னேற்றம்: |
|---|---|---|
| இ.ரூ. 25 Billion | இ.ரூ. 148 million | Completed |



## மெனிங் சந்தையை பேலியகொடவுக்கு நகர்த்துதல்

| கருத்திட்டத்தின் மொத்த பெறுமானம் : | மொத்த உசாதுணை பெறுமானம்: | பௌதீக முன்னேற்றம்: |
|---|---|---|
| இ.ரூ. 4000 மில்லியன் | இ.ரூ. 218 மில்லியன் | 58% |



## உமா ஓயா அபிவிருத்தி கருத்திட்டம்

| கருத்திட்டத்தின் மொத்த பெறுமானம் : | மொத்த உசாதுணை பெறுமானம்: | பௌதீக முன்னேற்றம்: |
|---|---|---|
| இ.ரூ. 71,400 மில்லியன் | இ.ரூ. 232 மில்லியன் | 52% |



### திருகோணமலை கடற்படை கப்பல்கட்டும் இறங்குதுறை வடிவமைப்பு

| கருத்திட்டத்தின் மொத்த பெறுமானம் : | மொத்த உசாதுணை பெறுமானம்: | பௌதீக முன்னேற்றம்: |
|---|---|---|
| இ.ரூ. 3,000 மில்லியன் | இ.ரூ. 12 மில்லியன் | 80% |

### கணக்காய்வாளர் அதிபதியின் திணைக்களத்திற்கான புதிய கட்டிட நிர்மாணம்

| கருத்திட்டத்தின் மொத்த பெறுமானம் : | மொத்த உசாதுணை பெறுமானம்: | பௌதீக முன்னேற்றம்: |
|---|---|---|
| இ.ரூ. 900 மில்லியன் | இ.ரூ. 55 மில்லியன் | 33% |

### முல்லேரியா ஆதார வைத்தியசாலை தேசிய இருதய நிலைய கட்டிடத்தொகுதி

| கருத்திட்டத்தின் மொத்த பெறுமானம் : | மொத்த உசாதுணை பெறுமானம்: | பௌதீக முன்னேற்றம்: |
|---|---|---|
| இ.ரூ. 1,220 மில்லியன் | இ.ரூ. 40 மில்லியன் | 55% |

## 2017 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் முடிவடையும் வரை அடைந்த சாதனைகள் - நிர்மாண பிரிவு

| 2017 ஆம் ஆண்டில் கருத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட புதிய நிர்மாண கருத்திட்டங்கள் (வடிவமைப்பு நிர்மாண அடிப்படையில்) | 2017 ஆம் ஆண்டில் கருத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நிர்மாண கருத்திட்டங்கள் (வடிவமைப்பு நிர்மாண அடிப்படையில்) |
|---|---|
| 107 | 168 |
| கருத்திட்டத்தின் மொத்த ஒப்பந்த பெறுமானம் | கருத்திட்டத்தின் மொத்த ஒப்பந்த பெறுமானம் |
| இ.ரூ.7,387மில்லியன் | இ.ரூ.11,598மில்லியன் |

### மொரன நீர்த்தேக்க நிர்மாணம்

கருத்திட்டத்தின் மொத்த பெறுமானம் : இ.ரூ. 1,210 மில்லியன்

பௌதீக முன்னேற்றம்: 82%

### உத்தேச கொழும்பு வடக்கு ராகம போதனா வைத்தியசாலை விபத்து சேவைகள், சத்திரசிகிச்சை பிரிவு, ICU பிரிவு, உள்ளக வாட்டுகள் என்பவற்றுக்கான கட்டிடத்தொகுதி நிர்மாணம் - கட்டம் III (முடிவு)

கருத்திட்டத்தின் மொத்த பெறுமானம் : இ.ரூ. 1,005 மில்லியன்

பௌதீக முன்னேற்றம்: 75%

### தேசிய சுற்றாடல் செயலக கட்டிடம் - பத்தரமுல்ல

கருத்திட்டத்தின் மொத்த பெறுமானம் : இ.ரூ. 1,126 மில்லியன்

பௌதீக முன்னேற்றம்: Completed



சுகாதார அமைச்சுக்கான தலைமை அலுவலக கட்டிட நிர்மாணம் - கொழும்பு

Total Value of the Project:

இ.ரூ.
5,199 மில்லியன்

Physical Progress:

19%





கராபிட்டிய போதனா வைத்தியசாலை உத்தேச சிறுநீரகவியல், சிறுநீரக இரத்த சுத்திகரிப்பு, சிறுநீரக மாற்றல் பிரிவு நிர்மாணம்

கருத்திட்டத்தின் மொத்த பெறுமானம் :

இ.ரூ.
790 மில்லியன்

பௌதீக முன்னேற்றம்:

42%

யாழ்ப்பாண போதனா வைத்தியசாலை விபத்து அவசர சிகிச்சை பிரிவு நிர்மாணம்

கருத்திட்டத்தின் மொத்த பெறுமானம் :

இ.ரூ.
501 மில்லியன்

பௌதீக முன்னேற்றம்:

67%

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை அவசர விபத்து சிகிச்சை நிலையத்தின் தாபிப்பு

கருத்திட்டத்தின் மொத்த பெறுமானம் :

இ.ரூ.
773 மில்லியன்

பௌதீக முன்னேற்றம்:

49%

உத்தேச புற்றுநோய் சிகிச்சை நிலைய நிர்மாணம் - கட்டம் II, பொது வைத்தியசாலை (போதனா) - கண்டி

கருத்திட்டத்தின் மொத்த பெறுமானம் :

இ.ரூ.
1,279 மில்லியன்

பௌதீக முன்னேற்றம்:

8%

பொது வைத்தியசாலை மகப்பேற்று வாட்டு கட்டிடத்தொகுதி நிர்மாணம் (கட்டம் -3) - குருனாகல்

கருத்திட்டத்தின் மொத்த பெறுமானம் :

இ.ரூ. 915 மில்லியன்

பௌதீக முன்னேற்றம்:

41%



உத்தேச நூதனசாலை மற்றும் வளங்கள் நிலைய நிர்மாணம் - கட்டம் 1 - பொலன்னறுவை

Total Value of the Project:

இ.ரூ. 167 மில்லியன்

பௌதீக முன்னேற்றம்:

Completed



களணி வித்தியாலங்கார பிரிவெனா வித்தியாலங்கார சர்வதேச பௌத்த மாநாட்டு மண்டப நிர்மாணம்

கருத்திட்டத்தின் மொத்த பெறுமானம் : இ.ரூ. 685 Million

பௌதீக முன்னேற்றம்: 73%



யாழ்ப்பாண உத்தேச சிறைச்சாலை கட்டிடத்தொகுதி - கட்டம் 2

கருத்திட்டத்தின் மொத்த பெறுமானம் : இ.ரூ. 447 மில்லியன்

பௌதீக முன்னேற்றம்: 34%

பொலன்னறுவை புதிய நகர நிருவாக கட்டிடத்தொகுதி உத்தேச வடிவமைப்பும் மற்றும் உத்தேச நிர்மாணமும்

கருத்திட்டத்தின் மொத்த பெறுமானம் : இ.ரூ. 1,304 மில்லியன்

பௌதீக முன்னேற்றம்: 20%

பொலன்னறுவை புதிய நகர உத்தேச அரசாங்க அலுவலர் பங்களாக்கள் கட்டிடத்தொகுதி

கருத்திட்டத்தின் மொத்த பெறுமானம் : இ.ரூ. 1,737 மில்லியன்

பௌதீக முன்னேற்றம்: 14%

மாகாண மட்ட இரத்தினபுரி விளையாட்டு கட்டிடத்தொகுதி

கருத்திட்டத்தின் மொத்த பெறுமானம் : இ.ரூ. 406 மில்லியன்

பௌதீக முன்னேற்றம்: 70%

பொலன்னறுவை மாவட்ட உத்தேச வீதிகள் நிர்மாண கருத்திட்டங்கள் - கட்டம் 1

கருத்திட்டத்தின் மொத்த பெறுமானம் : இ.ரூ. 1,828 மில்லியன்

பௌதீக முன்னேற்றம்: 95%


# ம.பொ.உ.ப. நிதி சார்ந்த செயலாற்றுகை


அரசாங்கத்தின் சார்பாக, ஏதாவது ஒரு அவசர நிலையை சமாளிப்பதற்கு ஆற்றலுடைய ஒரு அரச துறை நிறுவனம் என்ற ரீதியிலும், பல பிரிவு பொறியியல்களில் நன் மதிப்புப் பெற்றுள்ள நிறுவனம் என்ற ரீதியிலும் அரச துறையில் இது மாற்றம் பெற்று வருகின்ற ஒரு முகவர்நிலையம் என்பதில் ஐயமில்லை. மறுவகையில் கூறுவதானால், பல பொறியியல் பிரிவுகளைப் பிரதிநிதிப்படுத்துகின்ற பல துறை பொறியியலாளர்களையும் தொழில்நுட்ப ஊழியர்களையும் உள்ளடக்கிய வலிமையான ஒரு மனித வளத்தையுடைய ஒரேயொரு அரச துறை பொறியியல் நிறுவனமும் இதுவே. ஒரு நிறுவனம் என்ற ரீதியில் பணியகம் "பொறியியல் தீர்வுகளையும்" தாண்டி சிந்திக்க பழக்கப்பட்டுள்ளது என்பதையும் குறிப்பிட வேண்டும். ம.பொ.உ.ப. சேவை அர்ப்பணிப்புடைய பணியாளர்கள் பணியாற்றும் காரணத்தால் சிறப்பாக இயங்கி வருகின்றது. பணியாளர்களில் இரண்டு பெரும் பிரிவினர்கள் உள்ளடங்குகின்றனர். தொழில் நுட்ப / பொறியியல் ஊழியர்கள் மற்றும் தொழில் நுட்பம் சாராத ஊழியர்கள். எமது பணியகத்தின் பதவியணிக்கு தத்தமது துறைகளில் பல திறன்களையும் அனுபவத்தையும் கொண்டுள்ள தொழில்நுட்ப, பரா தொழில்நுட்ப மற்றும் செயலக ஊழியர்கள் அடங்கிய பணியாட்கள் குழு உதவுகின்றது.

ம.பொ.உ.ப. குழுவினது 2017 ஆம் ஆண்டிற்கான வருமானம் ரூ.15.2 பில்லியன் என்ற அளவில் காணப்பட்டது. இது முன்னைய ஆண்டின் வருமானத்தை விடவும் 30சூ வீத அதிகரிப்பை பிரதிபலிக்கின்றது. ம.பொ.உ.ப. வருமானத்தை முன்னைய ஆண்டின் வருமானத்துடன் ஒப்பிடும் போது, அது 28சூ வீதத்தால் அதிகரித்துள்ளது. ம.பொ.உ.ப. பணியகத்திற்கு முற்றிலும் சொந்தமான சென்ட்ரெல் இன்ஜினியரிங் சேர்விஸெஸ் (ப்ரைவட்) லிமிற்றட் - ஊநுளுடு எனும் நிறுவனத்திற்கு சகல நிர்மாணப் பணிகளும் சாட்டப்பட்டதால் முழுமொத்த இலாபமும் 3சூ வீதத்தால் குறைவடைந்துள்ளது.


ம.பொ.உ.ப. பணியகம் மற்றும் அதன் குழு ஆகியவற்றின் 2017 ஆம் ஆண்டின் இயக்கச்செயற்பாடுகள் முன்னைய ஆண்டில் முறையே வரிக்கு முன்னரும் வரிக்கு பின்னரும் ஈட்டிய ரூ.816 மில்லியன், ரூ.926 மில்லியன் தொகையான இலாபத்துடன் ஒப்பிடும் போது வரிக்கு முன்னரும் மற்றும் வரிக்கு பின்னரும் முறையே ரூ.757 மில்லியன், ரூ.915 மில்லியன் தொகையான இலாபத்தை ஈட்டியிருந்தன. ம.பொ.உ.ப. பணியகத்தினது இலாபம் 7% வீதத்தால் குறைந்து காணப்படுகின்றது. பணியகத்தின் குழு தனது இலாபத்தை 1% வீதத்தால் குறைந்துவிட்டது. பணியகத்தின் மொத்த சொத்துக்களினது பெறுமானம் ரூ. 21,856 மில்லியனாகும். ஆதலால், இலாபம் பணியகத்தின் மொத்த சொத்தில் 2% வீதத்தை பிரதிபலிக்கின்றது.

சுயமாக சம்பாதிக்கும் ஒரு அரச உடமை தொழில்முயற்சி (அ.உ.தொ.) என்ற ரீதியில், பொதுத் தொழில்முயற்சிகளை நிருவகிக்கின்ற நிதியும் மற்றும் கொள்வனவும் சார்ந்த வழிகாட்டல்களுக்கும் நடைமுறைகளுக்கும் இணங்க, பணியகம் நிறுவனம் சார்ந்த அதிக பல இடையூறுகளை எதிர்கொண்டாலும் பணியகத்தின் இயக்கச்செயற்பாடு, செயலாற்றுகை சார்ந்த குறிக்கோள்கள் அடையப்பட்டன.




## ம.பொ.உ.ப. உலகலாவிய கருத்திட்டங்கள்





## ம.பொ.உ.ப. பிராந்திய மற்றும் கருத்திட்ட அலுவலகங்கள்



## விஷேட பிரிவுகளும் சேவைகளும்











- கட்டிட சேவைகள்
- வைத்தியசாலை அபிவிருத்தி
- கட்டடக்கலை சேவைகள்
- நிர்மாண வடிவமைப்புகள்
- கணிய அளவை
- வீதிகள், பாலங்கள் நிர்மாணம்
- புகையிரத வீதி வேலைகள்
- விமான நிலைய அபிவிருத்தி
- நீர் வழங்கல், வடிகாலமைப்பு
- நீர்வலு மின்னுறப்பத்தி, மின்சக்தி
- மின்சார செலுத்துகை, பகிர்ந்தளிப்பு மார்க்கங்கள்
- நீர் வளங்கள் அபிவிருத்தி
- தொழில்நுப்ப மதிப்பாய்வு.ஃ. அணைக்கட்டு பாதுகாப்பு
- மின்சார, எந்திர வேலைகள்
- நிலஅளவை
- தகவல் தொழில்நுட்பம் **(IT)**
- சுற்றாடல் ஆய்வுகள்
- கருத்திட்ட முகாமைத்துவம்
- புவியல் தொழில்நுப்ப ஆய்வு மற்றும் ஆய்வுகூட சேவைகள்








# மனித வளங்கள்

## மனித மூலதனம்


அரச, தனியார் துறை வாடிக்கையாளர் தரப்புகளுக்கு பணியகம் பல வகையான பொறியியல் சேவைகளை வழங்கக்கூடிய வகையில் அதற்கு கிடைக்கக்கூடிய கலப்பு திறன்கள், கைத்தொழில் அனுபவம் மற்றும் திறன் என்பன நிறைந்த பல ஊழியர் பிரிவினர் மூலமாக ம.பொ.உ.ப. நன்மை அடைகின்றது.

இந்த பணியகத்தின் மனித மூலதனம் அதன் சாத்தியமான சம்பாத்தியம், உற்பத்தித்திறன் மற்றும் நீண்டகால நிலைபெறுதகுதன்மை என்பவற்றின் ஆரம் அடிப்படை அங்கமாக கருதப்படுகின்றது. ஊழியர்கள் கூட்டிணைந்த நிருவாக கோட்பாடுகளை கடைப்பிடித்தொழுகுவதில் சாத்தியமானளவு பங்களிப்பு செய்கின்றனர். அவ்வாறு செய்ய இவர்கள் உந்தப்பட்டுள்ளதும் வலுப்படுத்தப்பட்டுள்ளதும் இதற்கு காரணமாகும்.

## மனித மூலதனம் - ஒரேபார்வையில்




## கால ரீதியான பகுப்பாய்வ சுருக்கம்



## நிருவாகம்


மனித வளப் பிரிவு பொது முகாமையாளருக்கு அறிக்கையிடும். தேவையான சட்ட ஒழுங்குறுத்துகை இணக்கப்பாட்டை உறுதிசெய்கின்ற அதே வேளை, பணியகத்தின் வியாபார அலுவலக தேவைகளுக்கு உதவும் முழுமையான ஒரு வேலைச்சட்டகத்தை தாபிக்கும் நோக்கில், பணியகம் முழுதிலும் சிறந்த செயன்முறை கோட்பாடுகளை பரம்பல்செய்வது இந்தப் பிரிவின் பொறுப்பு. பணியகத்திற்கும் அதன் ஊழியர்களுக்கும் இடையில் சரியான பரஸ்பர தொடர்புக்கு வசதியளிப்பதற்கும் ஒழுங்குவிதிகளை பலப்படுத்துவதற்கும் முறையான ஒரு கொள்கை வேலைச்சட்டகம் உதவும். ஒழுங்குறுத்தல் தேவைப்பாடுகளை பின்பற்றலானது உள்ளக கணக்காய்வுகள் மற்றும் அந்த உள்ளக கணக்காய்வு கூட்டங்கள் என்பவற்றினூடாக உறுதிப்படுகின்றது.

சிறந்த ம.வ. செயன்முறைகளை நடைமுறைப்படுத்துவதற்கான ஆற்றலை வலுப்படுத்தும் பொருட்டு, கடந்த ஆண்டு காலப்பகுதிகளில், பணியகம் ம.வ. தொழிற்பாடுகளை மையப்படுத்துவதில் கவனம் செலுத்தியது. இது தவிர, பணியகத்தின் உரிய முறைமைகளின் சுமுகமான இயக்கத்திற்கு உதவும் நிமித்தம் ஒரு ம.வ. முகாமைத்துவ முறைமையும் அறிமுகப்படுத்தப்பட்டது.

பணியகம் தனது ஊழியர்களுக்கு பாதுகாப்பான, உகந்த ஒரு பணி சூழலை ஏற்படுத்திக்கொடுக்கின்றது. சங்கத்தில் சேரும் வகையில் ஊழியர்களுக்கு சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. சிறுவர்களை தொழிலில் அமர்த்தல், வலுக் கட்டாயமாக.்.நிர்ப்பந்தமாக தொழிலில் அமர்த்தல் மற்றும் பால்நிலை, இனம் முதலியவற்றை அடிப்படையாகக்கொண்ட ஏதாவது பாரபட்சம் என்பன இங்கு தடைசெய்யப்பட்டுள்ளன.

அதிக ஊழியர் புறழ்வானது பணியகத்தின் கணிசமானளவு வளங்களை பாதிக்கின்றது. ஆதலால் □மனித மூலதனம்□ பணியகத்திற்கு ஒரு தொடர் சவாலா மாறியுள்ளது. ஊழியர்களை இந்த பணியகத்திலே தக்கவைத்துக் கொள்ளும் பொருட்டு செயலாற்றுகை அடிப்படையிலான ஊக்குவிப்புகள் போன்ற பல தணிப்பு பரிகார நடவடிக்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

### தொழில் ரீதியான வருமான புறழ்வு விகிதம்



## விருதுகளும் ஊதியங்களும்

சம்பளங்கள், கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய ஊழியர் நன்மைகள் என்பன ஊழியர்களுக்கான சம்பள கொடுப்பனவில் அடங்குகின்றன. உற்பத்தித் திறன் அளவீடு பணியகத்தின் வளர்ச்சிக்கும் மற்றும் அதன் இலாபகரமான குறிக்கோள்களுக்கும் தனது ஊழியர்கள் எவ்வாறு நன்கு பங்களிக்கின்றனர் என்பதை பயனுள்ளவாறு இனங்கண்டுகொள்வதற்கு உதவியாக அமையும். முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் அங்கீகரித்த நியாயமான ஒரு நஷ்டஈட்டு பொதியை பணியகம் தனது ஊழியர்களுக்கு வழங்குகின்றது. அது மட்டுமன்றி ஊழியர் சேமலாப நிதி (ஊ.சே.நி.), ஊழியர் நம்பிக்கை நிதி (ஊ.ந.நி.) போன்ற திடமான ஊழியர் ஓய்வூதிய நன்மைகள் திட்டத்திற்கும் பங்களிப்பு செய்கின்றது.

## பயிற்சியும் அபிவிருத்தியும்

ஒரு சேவை வழங்கும் நிறுவனம் என்ற ரீதியில், ம.பொ.உ.ப. தனது மனித வளத்தை பணியகத்தின் இதயமாக கருதுகின்றது. ஆகையால், பயிற்சியும் அபிவிருத்தியும் ம.பொ.உ.ப. இன் ஊழியர்களினது அறிவையும், திறனையும் மற்றும் மனோபாவங்களையும் வளர்ப்பதில் இன்றியமையாத ஒரு பங்கை வகிக்கின்றது. பணியகத்தின் பயிற்சி மற்றும் அபிவிருத்தி தேவைகளை பூர்த்தி செய்யும் பொருட்டு 2000 ஆம் ஆண்டு தனியான ஒரு பிரிவாக தாபிக்கப்பட்டது.

ம.பொ.உ.ப. தனது சகல வகுதி ஊழியர்களுக்கும் பொருத்தமான பயிற்சி மற்றும் அபிவிருத்தி சார்ந்த தேவைகளை தொடர்ச்சியாக வழங்குவதற்கான பொறுப்பைக்கொண்டுள்ளது. கைத்தொழிலில் ஒரு முதன்னிலை நிறுவனம் என்ற வகையில் பணியகத்தின் செயலாற்றுகையையும், நன்மதிப்பையும், புகழையும் அதிகரித்துக்கொள்வதில் புதிய அறிவு, திறன், மனோபாவங்கள் என்பவற்றை அடைந்துகொள்ளல் மற்றும் அறிவை மேலும் வளர்த்தல் என்பவற்றினூடாக ஊழியர்கள் தமது கடமைப் பணிகளுக்குரிய செயலாற்றுகையை மேம்படுத்துவதற்கு அந்த ஊழியர்களுக்கு உதவுவதன் மூலமாக தனது மனித வள ஊழியர்களின் பயிற்சிக்கான பணியகத்தின் முறையான அணுகுமுறையை பயிற்சியும் மற்றும் அபிவிருத்தியும் மேலும் வலுப்படுத்தும்.

மேற்குறித்த குறிக்கோள்களை பூர்த்திசெய்யும் பொருட்டு, ம.பொ.உ.ப. தனது ஊழியர்களுக்கு பின்வருவன போன்ற பல பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை கிடைக்கச்செய்யும்.்.ஏற்பாடுசெய்து வழங்கும்.

- **PhD**, முதுமானிப் பட்டம், பட்டப்பின்படிப்பு பட்டம் சார்ந்த நிகழ்ச்சித் திட்டங்கள்
- வெளிநாட்டு பயிற்சி
- டிப்ளோமா பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்
- தொடர் தொழில்தேர்ச்சி அபிவிருத்தி பாடநெறிகள்
- சான்றிதழ் பாடநெறிகள்
- விரிவுரைகள்/கருத்தரங்குகள், வேலையரங்குகள், கள விஜயங்கள்
- தொழில்தேர்ச்சி மீளாய்வு பரீட்சைகள்
- உள்ளக அறிவு பகிர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் (சமர்ப்பணம்)
- ம.பொ.உ.ப. பயிற்சி பிரிவு ஏற்பாடு செய்யும் உள்ளக பயிற்சி நிகழ்ச்சி திட்டங்கள்

உள்நாட்டு தேசிய பல்கலைக்கழகங்கள், தேசிய டிப்ளோமாவை வழங்கும் நிறுவனங்கள், மூன்றாம்நிலை வாழ்க்கைத்தொழில் பயிற்சி ஆணைக்குழு (மூ.வா.ப.ஆ.) உத்தரவாதமளித்த தொழில்நுட்ப பாடநெறிகளை நடத்துகின்ற தொழில்நுட்ப கல்லூரிகள் மற்றும் ஏனைய நிறுவனங்கள் என்பவற்றினது மாணவர்களுக்கு, ஒரு தேசிய கடப்பாடு என்ற ரீதியில், கைத்தொழில் சார்ந்த உள்ளக பொறித்தொகுதி ரீதியான பயிற்சிகளை வழங்குகின்றது. இந்த நிறுவனங்களின் மாணவர்கள் தமது அந்தந்த பிரிவுகளில் பொறியியல் சார் / தொழில்நுட்ப சார் பயிற்சியை பெறுவதற்கான வசதிகளை ம.பொ.உ.ப. செய்து வழங்குகின்றது. பயிலுநர்கள் விஷேட சிரேஷ்ட பொறியியலாளர்கள் வழங்கும் வழிகாட்டல்களின் கீழ் கைத்தொழிலில் சார்ந்த நவீன தொழில் நுட்பங்களை பெற்று பிரகாசிக்கின்றனர். பணியகம் அத்தகைய பயிற்சியின் மூலம் நன்மை அடையும் அதே வேளையில் பயிலுநர்களும் நன்மை அடைகின்றனர்.

## பயிற்சிப் பிரிவின் பொறுப்புக்கள்

இந்த பயிற்சி பிரிவு சரியான பயிற்சியை இனங்காணுவதிலும் கற்றை அபிவிருத்தி தெரிவுகளிலும் ஊழியர்களுக்கு உதவுகின்றது.

இந்த பிரிவு பின்வருவனவற்றுக்கு பொறுப்புடையதாகும்:

- பணியகத்தின் சார்பாக பயிற்சி தேவை பகுப்பாய்வை மேற்கொள்ளல்.
- “பயிற்சி வேலைப் பகுப்பாய்வு:” அடிப்படையிலான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை திட்டமிடுதல், ஒழுங்கமைத்தல், வழிகாட்டுதல் மற்றும் மதிப்பிடுதல்.
- பொருத்தமான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் சகல ஊழியர்களுக்கும் கிடைக்கின்றனவா என்பதை உறுதிசெய்தல்.
- ஊழியர்களின் தொழில் அபிவிருத்தி தேவைகளை இனங்கண்டு அவர்களின் தொழில் அபிவிருத்திற்கு வாய்ப்புகளை அளித்தல்.
- உள்ளக பயிற்சி சமர்ப்பணங்களின் உள்ளடக்கங்கள் தற்போதைய கைத்தொழில் நியமங்களையும், தேவைப்பாடுகளையும் அதே நேரம் ம.பொ.உ.ப. செயற்பணியையும் அனுசரித்து காணப்படுகின்றனவா என்பதை உறுதிசெய்தல்.
- தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் வேண்டுகோள்களின்படி பட்டம்∴டிப்ளோமா பட்டம் என்ற மட்டத்தில் கைத்தொழில் பயிற்சியை திட்டமிடுதல், வடிவமைத்தல் அதே நேரம் செயற்படுத்துதல்.
- பயிற்சி சார் புள்ளிவிபரங்களை∴அறிக்கைகளை தயாரித்தல் மற்றும் ஊழியர்களின் பதிவுகளை பேணுதல்.
- பணியகத்தின் பயிற்சி மற்றும் அபிவிருத்தி குறிக்கோள்கள் பூர்த்தி செய்யப்படும் விதம், மற்றும் வழங்கப்படும் பயிற்சி, வழங்கப்படும் நிதிகள் முதலியன தொடர்பான சுருக்க அறிக்கைகள் அடங்கலாக சிரேஷ்ட முகாமைத்துவத்திற்கு உரிய அறிக்கைகளை வழங்குதல்.
- பயிற்சி அபிவிருத்தி பிரேரணைகளை தயாரித்தல், நெறிப்படுத்துதல், குழுவின் அங்கீகாரத்துடன் அந்த பிரேரணைகளை அமுலாக்குதல்.

பணியகத்தின் சகல ஊழியர்களும் கீழே பட்டியல்படுத்தப்பட்டுள்ளவாறு மூன்று பிரதான குழுக்களாக பிரிக்கப்பட்டுள்ளனர்:

- தொழில் ரீதியில் தகுதி வாய்ந்த ஊழியர்கள்
- தொழில்நுட்பம் சார்ந்த ஊழியர்கள்
- தொழில்நுட்பம் சாராத ஊழியர்கள்

மேற்குறித்த இலக்குக் குழுக்களிலுள்ள ஊழியர்கள் நிரந்தர ஆளணிக்கு சொந்தமானவர்கள். இவர்கள் பயிற்சியை பெறுவதற்கு உரித்துடையவர்கள்.

பயிற்சி சார்ந்த கொள்கை பணியகத்தினதும் அதன் ஊழியர்களினதும் தேவைகளுக்கும் இலக்குகளுக்கும் பொருத்தமானதாகவும், தற்போதைய பூகோள போக்கில் இணையாகவும் காணப்படுகின்றதா என்பதை உறுதிப் படுத்திக்கொள்ளும் நிமித்தம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படுகின்றது. பயிற்சி கொள்கையின் மீளாய்வை மேற்பார்வை செய்வது பயிற்சி பிரிவின் பொறுப்பாகும். நடத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்களினதும், மேற்கொள்ளப் படும் செயற்பாடுகளினதும் பயன்தகுதன்மையை உறுதிசெய்துகொள்ளும் பொருட்டு, அனைத்து ஊழியர்களினதும் பங்குபற்றலில் ஒரு மனோபாவ மதிப்பாய்வு மேற்கொள்ளப்படலாம். இந்த மீளாய்வின் பாகமாக, பயிற்சிப் பிரிவு பயிற்சி சார்ந்த புள்ளிவிபரங்களிலிருந்தும் அதே போன்று திறன் மதிப்பாய்வுகளிலிருந்து கிடைத்த தகவல்களிலிருந்தும் தரவுகளை சேகரித்து பகுப்பாய்வு செய்யும். பயிற்சி கொள்கை பணியகத்தின் சிரேஷ்ட முகாமை புறக்குறிப்பிடும் என்பதற்கு அமைவாக காணப்படும்.

| இலக்கம் | நிகழ்ச்சித்திட்டம் | 2014 | | 2015 | | 2016 | | 2017 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | பங்குபற்றுநர்களின் எண்ணிக்கை (அண்ணளவாக) | மொத்த ஆகுசெலவு (அண்ணளவாக) | பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை (தோராயமாக) | மொத்த செலவு (தோராயமாக) | பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை (தோராயமாக) | மொத்த செலவு (தோராயமாக) | பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை (தோராயமாக) | மொத்த செலவு (தோராயமாக) |
| 1 | வழங்கப்பட்ட உள்நாட்டு வெளிக்கள நிகழ்ச்சித்திட்டங்கள் (தொடரும் தொழில்சார் அபிவிருத்தி பாட நெறிகள், சான்றிதழ் பாடநெறிகள், விரிவுரைகள்/கருத்தரங்குகள், வேலையரங்குகள் | 365 | 3,400,000.00 | 440 | 3,400,000.00 | 560 | 4,900,000.00 | 596 | 6,569,551.00 |
| 2 | முதுமானி நிகழ்ச்சித்திட்டங்கள் / பட்டப்பின்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் | 13 | 2,700,000.00 | 19 | 4,500,000.00 | 21 | 5,400,000.00 | 02 | 528,500.00 |
| 3 | உள்ளக அறிவு பகிர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் (சமர்ப்பணங்கள்) | 680 | 40,000.00 | 800 | 60,000.00 | 1100 | 70,000.00 | 785 | 40,000.00 |
| 4 | வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 12 | 1,231,600.00 | 5 | ஹோஸ்ட் நாட்டினால் நிதியளிக்கப்பட்டது | - | - | 10 | 6720 $ + 525 € |
| 5 | ம.பொ.உ.ப. இன் பயிற்சி பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட உள்ள பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் | - | - | - | - | 600 | 450,000.00 | 834 | 723,770.00 |
| 6 | தொழில்தேர்ச்சி மீளாய்வு பரீட்சைகள் | 07 | | 32 | | 33 | | 18 | |
| 7 | உள்ளக பொறித்தொகுதி பயிலுநர்கள் | 470 | | 440 | | 550 | | 602 | |
| 8 | | - | | - | | - | | 65 | 901,563.00 |
| 9 | கள விஜயங்கள் | - | | - | | - | | 32 | |

## ஊழியர்களின் நலன்களும் மனக்குறைகளும்

ஊழியர்களின் நலன்களை மேம்படுத்துவதற்காகவும், தொழில் வாழ்க்கை சமநிலையை பேணுவதற்காகவும் பல நிகழ்ச்சிகள் ஒழுங்குசெய்யப்பட்டன. பணியகம் திறந்த கொள்கையை செயற்படுத்துவதுடன் ஊழியர்கள் தமது மனக்குறைகளை முன்வைக்கக்கூடிய வகையில் கூட்டங்களையும் நடத்தும். ஊழியர்கள் உடனடியாக ஏதாவது விடயங்களை தமது அதிகாரிகளுக்கு அறிக்கையிடும் வகையில் அவர்களுக்கு இருக்கின்றது. இவர்கள் அத்தகைய ஏதாவது விடயங்களை ம.வ. பிரிவுக்கு அறிக்கையிடுவதற்கும் அல்லது பொருத்தமான தரப்புகளுக்கு நேரடியாக அறிக்கையிடுவதற்கும் முடியும்.

### கைத்தொழில் உறவுகள்

முகாமைத்துவத்தின் ஒவ்வொரு மட்டத்திற்கும் ஏதாவது நபர் ஒருவரினால் அணுகுதன்மையை ஊக்குவிக்கும் ஒரு விதத்தில் மனித வள அம்சங்கள் கருத்திற்கொள்ளப்படுகின்றன. பணியகத்தின் கலாசாரம் தொடர்ச்சியான கலந்துரையாடலையும், வசதியையும் ஊக்குவிப்பது மாத்திரமன்றி ஊழியர் எதிர்நோக்கும் இடர்கள் சம்பந்தப்பட்ட விடயங்களை தீர்ப்பதற்கும் உதவும்.

ம.பொ.உ.ப. தனது ஊழியர்கள் சங்கங்களில் சேர்வதற்குரிய சுதந்திரத்தை மதிக்கின்றது. ஆகையால், எமது ஊழியர்கள் சார்பாக பிரதிநிதிப்படுத்தும் துல்லியமான தொழிற்சங்கங்களை நாம் கொண்டுள்ளோம். ம.பொ.உ.ப. இன் முகாமைத்துவம் நிகழும் அடிப்படையில் தொழிற்சங்க பிரதிநிதிகளுடன் காத்திரமான உறவை பேணுகின்றது.



## சென்ட்ரெல் இன்ஜினியரிங் சேர்விஸெஸ் (ப்ரைவட்) லிமிற்றட் நிறுவனத்தை பற்றி

"சென்ட்ரெல் இன்ஜினியரிங் சேர்விஸெஸ் (ப்ரைவட்) லிமிற்றட் நிறுவனம் (செ.இ.சே.லி.) மத்திய பொறியியல் உசாதுணை பணியகத்திற்கு (ம. பொ. உ.ப.) முற்றிலும் சொந்தமான 1982 இன் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் 2003 ஆம் ஆண்டு திசம்பர் மாதத்தில் வரையறுக்கப்பட்ட ஒரு பொறுப்பு கம்பனியாக கூட்டிணைக்கப்பட்டு 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் 2009 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மீளப்பதிவு செய்யப்பட்ட ஒரு துணை கம்பனியாகும். "

இந்த காலப்பகுதியில் நிர்மாண பணிகள் அதிகரித்ததன் பயனாக நிர்மாண சேவைகளுக்கான அதிக தேவையினால் உருவாகிய வாய்ப்பை பயன்படுத்தும் நிமித்தம் செ.இ.சே.லி. 2011 ஆம் ஆண்டு முதல் துல்லியமாக இயங்கத் தொடங்கியது. செ.இ.சே.லி. நிர்மாண முகாமைத்துவத்தையும், தொழில்நுட்ப திறன்களையும் மற்றும் ம.பொ.உ.ப. உடன் ஒன்றிணைந்து பணியாற்றி தனது கருத்திட்ட முகாமைத்துவ அறிவையும் பெற்றது. இதன் காரணமாக, கைத்தொழில் ரீதியாக தனக்கு வந்த சவால்களை ஏற்றது. செ.இ.சே.லி. இன் முக்கிய வியாபார நடவடிக்கை கட்டிடங்களினதும், வீதிகளினதும், பாலங்களினதும், நீர்ப்பாசனம் சார் கட்டுமாணங்களினதும் நிர்மாணத்திலும், ஏனைய விஷேட வசதிகளிலும் கேந்திரமயப்பட்டுள்ளது. இந்த கம்பனி தனது கருத்திட்டங்களுக்கு அவசியமான கொங்கீட்டுகள், அஸ்பால்ட்டு தகடுகள் என்பவற்றின் உற்பத்தியிலும் ஈடுபடுகின்றது.

செ.இ.சே.லி. அரச, தனியார் துறை வாடிக்கையாளர்களுக்கு நிர்மாணம் சார்ந்த சேவையை வழங்குகின்றது. செ.இ.சே.லி., நிறுவனம் சார்ந்த சகல விதமான நிர்மாண கருத்திட்டங்களிலும் உரிய கால இலக்குகளை பூர்த்தி செய்து அரச அதிகாரிகள் மற்றும் வியாபாரத் தலைவர்கள், நிருவாகிகள் ஆகியோரின் நன்மதிப்பை பெற்றுள்ளது. 1973 ஆம் ஆண்டு தொட்டு ம. பொ.உ.ப. இன் ஒரே குடையின் கீழ் கைத்தொழில் பிரிவில் முன்கூட்டியே உசாதுணை தரப்பாக நுழைந்தமையால், தற்பொழுது ஒரு உந்து சக்தியாக தொழிற்படும் வகையில் பல பாடங்களை கற்றுக்கொள்ள முடிந்துள்ளது. ம.பொ.உ.ப. நூஊ பிரிவின் கீழ் பெற்ற நிர்மாண அனுபவமும் நிலையான ஒரு வியாபார சூழலை ஏற்படுத்தியுள்ளது.

## குறிக்கோள்கள்

- சகல தொழிற்படு பிரிவுகளுக்குமான ஒன்றிணைந்த
- வெளிப்படைத் தன்மை வாய்ந்த முகாமைத்துவ முறைமைக்கு இட்டுச்செல்லல்
- பிரத்தியேக தரம், சுற்றாடல், சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு முறைமை ஆகிய இலக்குகளை அடைதல்
- பல்லின முதலீடுகளின் மூலம் போதிய மூலதனத்தை பேணுதல்
- நிர்மாண கைத்தொழிலில் சிறந்த மனித வள தளமாக விளங்குதல்
- சுயமாக இலாபம் ஈட்டும் ஒரு நிறுவனம் என்ற ரீதியில் சொத்துக்களின் பயனுள்ள முகாமைத்துவம்
- கையிலுள்ள போதிய வேலைகளை பேணி நிறைவேற்றி நிறுவனத்தின் நிலைபெறுதன்மையை வளர்த்தல்
- நிர்மாண ஆகுசெலவை அனுகூலப்படுத்தும் வகையில் நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி முறைமை மேம்பாட்டு முறையியல்களை பின்பற்றுதல்

## தூரநோக்கு

இலங்கையில் நிர்மாண கைத்தொழிலுக்கு தனித்துவமான ஒரு முன்மாதிரி நிறுவனமாக விளங்குதல்

## செயற்பணி

போதியளவில் பங்களிப்பு மதிக்கப்பட்டதும், அதிகம் ஊக்கமளிக்கப்பட்டதும், பயிற்றுவிக்கப்பட்டதுமான ஊழியர்களை கொண்டு நிர்மாண தொழில்நுட்பத்திலும் நடபடிமுறை புத்தாக்கத்திலும் சிறப்பு பெறல்

பணிப்பாளர்கள் சபை

# உறுப்பினர்கள்

பொறியியலாளர் ஜி.டீ.ஏ. பியதிலக்க

**தலைவர்**

B.Eng. (Hons), PG.Dip. (Const.Mgt), PG.Dip. (துறைமுகங்கள், கடலோர பொறியியல்) நோர்வே, MIE (SL), C.Eng. MASCE



பொறியியலாளர் என். ரூபசிங்க

**பணிப்பாளர்**

B.Eng. (Hons), PG.Dip. (நீரியல் வலு) நோர்வே, C.Eng. MIE (SL), MICE (லண்டன்), உத்தரவு பெற்ற நிலஅளவையாளர்

பொறியியலாளர் ஏ. கல்கெட்டிய

**பணிப்பாளர்**

BSc.Eng., C.Eng., MIE (SL)



பொறியியலாளர் கே.எல்.எஸ். சஹபந்து

**பணிப்பாளர்**

BSc. Eng. (Hons), PG.Dip. (நீரியல் பொறியியல்.), MSC (நிர்மாண பொறியியல்.), C.Eng. MIE (SL), MICE (லண்டன்), M Cons. E (SL), FSSE (SL)



பொறியியலாளர் எஸ்.பி.பி. நாணயக்கார
நிறைவேற்று பணிப்பாளர

·BSc.Eng., C.Eng., MICE (UK), MIE (SL)

திரு எம்.ஆர்.ஜி. ரணதுங்க
**பணிப்பாளர்**

LLB (Sri Lanka),
Attorney-at-Law, Notary
Public, Company Secretary,
Actg. Magistrate






பொறியியலாளர் ரீ.டீ. விக்ரமரட்ன
**பணிப்பாளர்**

BSc.Eng. (Hons), M.Eng. PG.Dip. (நீரியல்),
MICE (UK), FIE (SL), C.Eng.

திரு எச்.எம்.யூ.என்.பீ. மாவத்தாகம
**பணிப்பாளர்**

CBA (ICASL), கணக்கியல் டிப்ளோமா, SAT





## செ.இ.சே.லி. நிறைவு செய்த சில கருத்திட்டங்கள்

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு



மட்டக்களப்பு களுந்தாவளை பொருளாதார நிலையம்



அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம் - பத்தரமுல்ல



திருகோணமலை மாவட்ட கள்ளாறாவ நன்னீர் இறால் உற்பத்தி பண்ணை கட்டிடத்தொகுதி




கல்முனை ஆதார வைத்தியசாலை விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு



யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கான வைபவ நுழைவாயில்



ஒலுவில் தென் கிழக்கு பல்கலைக்கழக பார்வையாளர் கூட விஸ்தரப்பும் நில வசதிகளும்



மாகாண திகன விளையாட்டு கட்டிடத்தொகுதி பிரதான பார்வையாளர் கூடம்



கொத்தலாவல இடைமாறல் டோல் ப்ளாஷா மற்றும் டோல் நுழைவாயில் அலுவலக கட்டிடம்



நாகொட - களுத்துறை பொது வைத்தியசாலைக்கான விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு



மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கான புற்றுநோய் வாட்டு கட்டிடத்தொகுதி - கட்டம் II



சுற்றாடல், மகாவலி அபிவிருத்தி அமைச்சுக்கான தேசிய சுற்றாடல் செயலகம்



மாகாண இரத்தினபுரி விளையாட்டு கட்டிடத்தொகுதி



2017

வருடாந்த அறிக்கை



Designed by Zeon Lab Digital +94 77 9688569 www.zeonlabdigital.com

மத்திய பொறியியல் உசாதுணை பணியகம்
மகாவலி அபிவிருத்தி, சுற்றாடல் அமைச்சு
இலக்கம் 415, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 07, ஸ்ரீ லங்கா
இணையத்தள முகவரி:www.cecb.lk